UNIVERSITY OF MADRAS


B. A. DEGREE EXAMINATION

1956 & 1957

PART II—TAMIL

SELECTIONS IN POETRY

PRINTED AT
THE NURI PRESS LTD.,
ROYAPURAM, MADRAS
1954


ARCHIVES LIBRARY
No.
112027

பொருளடக்கம்

		பக்கம்
1.	பட்டினப்பாலை	1
2.	புறநானூறு	10
3.	திருக்குறள்	17
4.	சிலப்பதிகாரம் காட்சிக்காதை	24
5.	சிவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் ...	30
6.	பெரிய புராணம் திருக்குறிப்புத் தொண்ட நாயனார்...	40
7.	கம்பராமாயணம் விபீடணன் அடைக்கலப் படலம் ...	50
8.	கோயிற்றிருமாலை	60
	குறிப்புரை	63

I

பட்டினப்பாலை

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவரு வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்சள்
இனமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கின்
நேரிழை மகளிருணங்குணக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணிநிலைப் புரவியி னணிமுதற் பிணிக்கும்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்

பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
இருகாமத் திணையேரிப்
புலிப்பொற்றிப் போர்க்கதவின்
திருத்துஞ்சும் திண்காப்பிற்
புகழ்நிலை இய மொழிவளர
அறநிலை இய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேரூகித்
தேரோடத் துகள்கெழுமி
நீரூடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டும்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவின்
அவிர்சடை முனிவ ரங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனை இக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
இருங்கிளை யினலெக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்

நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅது
இருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுகிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
கினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினுல்
மடற்றுழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது
உவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானல்
மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்....தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்
மலியோதத் தொலிகூடல்
தீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்தும்
அலவ னுட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்

அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை
.....மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்தும்
மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சூட டெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
....
கண்ணடை இய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டும்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்ரூழை
வேலாழி வியன்றெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகரூறு மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினென்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி

மழையாடு சிமைய மால்வரைக் கவா அன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
ஏழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
....
தூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மாலைக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
ஓங்குவரை மருங்கி னுண்டா துறைக்கும்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்று
உருகெழு கரும்பி ணெண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழுன்றிய கவிகிடுகின்
மேலுன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்

தீம்புகார்த் திரைமூன் றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
மீன்றடிந்து விடக்கறுத்து
ஊன்பொரிக்கு மொலிமுன்றில்
மணற்குவை இ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவின்
நறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்
நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவும்
கொலைகடிந்துங் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லாளெடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்

வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங்
[குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த மூதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேளத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணூர்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து
உருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்ஞாள்
உகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
.... உழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செங்கெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்

கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்று
அறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருகிலை நெடுந்தூ ணெல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்
அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
மூதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
அழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும்
அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானைப் பெருஞ்சோற் றட்டில்
ஒண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்
அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்

தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்ருள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணுற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறுறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்து
ஒருவேமெனப் புறக்கொடாது
திருநிலை இய பெருமன்னெயில்
மின்னெளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவும்
.....
செஞ்சாந்து சிதைந்த மார்பி னெண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்
திருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் ரோளே.

II

புறநானூறு

1. களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்(து)
எம்முளு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னானே.

திணை : தும்பை ; துறை - தானைமறம்.
அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது.

2. யாவி ராயினுங் கூழை தார்கொண்
டியாம்பொருது மென்ற லோம்புமி னெங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழுவுத்தோ ளென்னையைக் காண வுங்கே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

3. ... .
மடவர லுண்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோதும் மகன்றலை நாட்டென
வினவ லானாப் பொருபடை வேந்தே
எறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே யதாஅன்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னு மென்னையு முளனே.

திணையும் துறையும் அவை. அவனை அவர் பாடியது.

4. உடைவலை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழுஞ் சாரல்
மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளு முண்டோ ஞாயிறு சினவின்

அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
அரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
எழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

5. வலம்படு வாய்வா ளேந்தி யொன்னர்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா(து)
ஆத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே.

திணை : பாடாண்டிணை ; துறை - வாழ்த்தியல்.
அவனை அவர் நெல்லிப்பழம் பெற்றுப் பாடியது.

6. யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்(கு)
அருள்வந் தனவாற் புதல்வர்த்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னர்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே.

திணை : பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

7. திண்பிணி முரச மிழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்

தார்தாங் குதலு மாற்றூர் வெடிபட்(டு)
ஓடன் மரீஇய பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதன் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ
வரிஞிமி றூர்க்கும் வாய்புகு கடாஅத்(து)
அண்ணல் யானை யடுகளத் தொழிய
அருஞ்சமம் தகைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

திணை : வாகை ; துறை – அரசவாகை.
அவன் போருது புண்பட்டு நின்றோனை அவர் பாடியது.

8. ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும வெமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னுய் பெருமநின் னென்னு தோர்க்கே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

9. இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணைன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்(து)
இல்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை : பாடாண்டிணை ; துறை – வாண்மங்கலம்.
அதியமான் நெடுமானஞ்சி தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கோட்டில் காட்ட அவர் பாடியது.

10. அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பின்
திரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்(கு)
இரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே
பூப்போ லுண்கண் பசந்துதோ ணுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றென்றே
விழவின் றுயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைமான் கொள்ளு மோவென
உறையுண் முனியுமவன் செல்லு மூரே.

திணை : அது, துறை : இயன்மொழி.

அவன் மகன் போகுட்டெழினியை அவர் பாடியது.

11. போர்க்குரை இப் புகன்றுகழித்தவாள்
உடன்றவர்காப் புடைமதிலழித்தலின்
ஊணுற மூழ்கி யுருவிழந் தனவே
வேலே, குறும்படைந்த வரண்கடந்தவர்
நறுங்கள்ளி னுடுறைத்தலிற்
சுரைதழீ இய விருங்காழொடு
மடைகலங்கி நிலைதிரிந்தனவே
களிறே, எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர்
குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற்
பரூஉப்பிணிய தொடிகழிந்தனவே
மாவே, பரந்தொருங்கு மலைந்தமறவர்
பொலம்பைந்தார் கெடப்பரிதலிற்
களனுழந் தசைஇய மறுக்குளம் பினவே
அவன்றூணும், நிலந்திரைக்குங் கடற்றூணைப்
பொலந்தும்பைக் கழற்பாண்டிற்
கணைபொருத துளைத்தோ லன்னே
ஆயிடை, உடன்றே ருய்தல் யாவது தடந்தாட்
பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்
நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்(கு)
இறுக்கல் வேண்டுந் திறையே மறுப்பின்
ஒல்வா னல்லன் வெல்போ ரானெனச்
சொல்லவுந் தேறீ ராயின் மெல்லியற்
கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக்

குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூ தன்றஃ தறிந்தா டுமினே.

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமான்அஞ்சியை அவர் பாடியது.

12. முனைத்தெவ்வர் முரணவியப்
பொரக்குறுகிய நுதிமருப்பினின்
இனக்களிறு செலக்கண்டவர்
மதிற்கதவ மெழுச்செல்லவும்
பிணனழுங்கக் களனுழக்கிச்
செலவசைஇய மறுக்குளம்பினின்
இனநன்மாச் செலக்கண்டவர்
கவைமுள்ளிற் புழையடைப்பவும்
மார்புறச் சேர்ந்தொல்காத்
தோல்செறிப்பினின் வேல்கண்டவர்
தோல்கழியொடு பிடிசெறிப்பவும்
வாள்வாய்த்த வடுப்பரந்தனின்
மறமைந்தர் மைந்துகண்டவர்
புண்படுகுருதி யம்பொடுக்கவும்
நீயே, ஐயவி புகைப்பவுந் தாங்கா தொய்யென
உறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்
கூற்றத் தினையை யாகலிற் போற்றூர்
இரங்க விளிவது கொல்லோ வரம்பணைந்(து)
இறங்குகதி ரலம்வரு கழனிப்
பெரும்புனற் படப்பையவ ரகன்றலை நாடே.

திணை : வாகை. துறை : அரசவாகை.

திணை - வஞ்சியும், துறை கொற்றவள்ளையுமாம்.

அவனை அவர் பாடியது.

13. அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
ஈகையங் கழற்கா விரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்

வழுவின் றெய்தியு மமையாய் செருவேட்(டு)
இமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னுற்ற ரேற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே.

திணையும் துறையும் அவை.

அவன் கோவலூர் ரெறிந்தானை அவர் பாடியது.

14. கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட வூசி வெண்டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னு மாரூது சினனே யன்னே
உய்ந்தன ரல்லரிவ ணுடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னுவே.

திணையும் துறையும் அவை.

அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது.

15. ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறாஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசில் கடாநிலை.

அவனை அவர் பாடியது.

16. எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவலிழியினு மிசையேறினும்
அவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் நிங்கள்
நாணிறை மதியத் தினையையிருள்
யாவண தோனின் னிழல்வாழ் வோர்க்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவன் மகன் போகுட்டெழினியை அவர் பாடியது.

17. ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி
செல்வை யாயிற் சேணெ னல்லன்
முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும்
பகைப்புலத் தோனே பல்வே லஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் பெருப்ப
அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே.

திணை - அது. துறை - விறலியாற்றுப்படை.
அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது.

18. போற்றுமின் மறவீர் சாற்றுது நும்மை
ஊர்க்குறு மாக்க ளாடக் கலங்கும்
காட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை
நுண்பல் கருமு னினையா(து)
இளையனென் றிகழிற் பெறலரி தாடே.

திணை - வாகை; துறை - அரசவாகை.
அவனை அவர் பாடியது.

III

திருக்குறள்

1. அமைச்சு

1. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு.
2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு.
3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.
4. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.
5. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றும்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.
6. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.
7. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்(து)
இயற்கை யறிந்து செயல்.
8. அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.
9. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர்
எழுபது கோடி யுறும்.
10. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

2. சொல்வன்மை

1. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.
2. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

3. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

4. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

6. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றூர் கோள்.

7. சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது.

8. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

10. இணருழ்த்து நாறு மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்.

3. வினைத்தூய்மை

1. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

2. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்.

4. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

5. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8. கடிந்த கடிந்தோரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.
9. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.
10. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

4. வினைத்திட்பம்

1. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற.
2. ஊருரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டின்
ஆறென்ப ராய்ந்தவர் கோள்.
3. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கின்
எற்ரு விழுமந் தரும்.
4. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.
5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி யுள்ளப் படும்.
6. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
7. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி யன்ன ருடைத்து.
8. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.
9. துன்ப மூறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.
10. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

5. வினைசெயல்வகை

1. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத லீது.
2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

3. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

4. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

5. பொருள்கருவி காலம் வினையிடனை டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல்.

6. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

7. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
உள்ளறிவா னுள்ளங் கொளல்.

8. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்.

10. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

6. தூது

1. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

2. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று.

3. நூலாரு ணூல்வல்ல னுகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

4. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

6. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது.

7. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்(து)
எண்ணி யுரைப்பான் றலை.

8. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

9. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

10. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்(கு)
உறுதி பயப்பதாந் தூது.

7. மன்னரைச் சேர்ந்தொழுகல்

1. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

2. மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய வாக்கந் தரும்.

3. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

4. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.

5. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளா
விட்டக்காற் கேட்க மறை.

6. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

7. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

8. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.

9. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

10. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

8. குறிப்பறிதல்

1. கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாருநீர் வையக் கணி.

2. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

3. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

4. குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.

5. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

6. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

7. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்மூன் துறும்.

8. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

9. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

10. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

9. அவையறிதல்

1. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

3. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

4. ஒளியார்முன் னெள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

5. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
மூன்று கிளவாச் செறிவு.

6. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

7. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

8. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

9. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

10. அங்கணத்து ளுக்க வமிழ்தற்ருற் றங்கணத்தர்
அல்லார்முற் கோட்டி கொளல்.

10. அவையஞ்சாமை

1. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

2. கற்ருருட் கற்ரு ரெனப்படுவர் கற்ரூர்மூன்
கற்ற செலச்சொல்லு வார்.

3. பகையகத்துச் சாவா ரெளிய ரரியர்
அவையகத் தஞ்சா தவர்.

4. கற்ரூர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

5. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

6. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை யஞ்சு பவர்க்கு.

7. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்(து)
அஞ்சு மவன்கற்ற நூல்.

8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

9. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்.

10. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

IV

சிலப்பதிகாரம்

காட்சிக்காதை

மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்து
இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளித்
துஞ்சா முழுவின் அருவி ஒலிக்கும்
மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
பைந்தொடி யாயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன்
வளமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
பொலம்பூங் காவும் புனல்யாற்றுப் பரப்பும்
இலங்குநீர்த் துருத்தியும் இளமரக் காவும்
அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி
ஒருநூற்று நாற்பதி யோசனை விரிந்த
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்கா ழாரம்
உதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
இடுமண லெக்கர் இடைத்தொருங் கிருப்பக்
குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியும்
நறவுக்கண் ணுடைத்த குறவ ரோதையும்
பறைபிசை அருவிப் பயங்கெழும் ஓதையும்

புலியொடு பொரூஉம் புகர்முக வோதையும்
கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்
பயம்பில்வீழ் யானைப் பாக ரோதையும்
இயங்குபடை யரவமோ டியாங்கணு மொலிப்ப
அளந்துகடை யறியா அருங்கலம் சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி மூற்றத்து
இறைமகன் செவ்வி யாங்கணும் பெறூது
திறைசுமந்து நிற்கும் தெவ்வர் போல
யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியி னணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி உளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு
ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான் ..... தனித்துய ரெய்தி
வானவர் போற்ற மன்னெடும் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எங்காட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னுட் டியாங்கள் நினைப்பினும் அறியேம்
பன்னூ றுயிரத் தாயிடுவா ழியரென

மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிம் துரைக்கும்
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்
தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி அரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி
அஞ்சி லோதி அறிகெனப் பெயர்ந்து
மூதிரா மார்பகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய அமளிமிசை இருந்த
திருவீழ் மார்பின் தென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொரூஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தாள் நெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொரூஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
தன்னுட் டாங்கண் தனிமையிற் செல்லாள்
நின்னுட் டகவயின் அடைந்தனள் நங்கையென்று
ஒழிவின் றுரைத்தீண் டுழி யூழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்
தென்னர் கோமான் தீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போன்
எம்மோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்விரை வளைத்த கோலை மன்னவன்

செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பம் துணிந்துவந் துரைத்த
நன்னுற் புலவற்கு நன்கனம் உரைத்தாங்கு
உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
நன்னுதல் வியக்கும் நலத்தோ ரியாரென
மன்னவன் உரைப்ப மாபெருந் தேவி
காதலன் துன்பம் காணது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து
அத்திறம் நிற்கநம் அகல்நாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க ஆங்கவர்
ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவு ளாகும்
கங்கைப்பேர் யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்தெனப்
பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
மூதுநீர்க் காவிரி மூன்றுறைப் படுத்தல்
மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉஞ் செய்கையோ அன்று
புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை
மூன்நூல் மார்பின் முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளரொடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவு ளெழுதவோர் கல்தா ரானெனின்
வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்
மூதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை

மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சியும்
தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியும்
நிலவுக்கதி ரஃளந்த நீள்பெருஞ் சென்னி
அலர்மந் தாரமோடு ஆங்கயல் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறல் மாலை
மேம்பட மலைதலும் காண்குவல் ஈங்கெனக்
குடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராய நிலை இய வஞ்சியும்
வென்றூர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்றூச் சிறப்பிற் பெருஞ்சோற்று வஞ்சியும்
குன்றூச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்
புட்கைச் சேஎ பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் பறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சிசூ டுதுமெனப்
பல்யாண்டு வாழ்கநின் கொற்றம் ஈங்கென
வில்லவன் கோதை வேந்தற் குரைக்கும்
நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைபுறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை
திகைமுக வேழத்தின் செவியகம் புக்கன
கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது
கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகஃ ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதிஎ யாயின் ஏற்பவர்
முதுநீ ருலகில் முழுவது மில்லை
இமய மால்வரைக்கு எங்கோன செல்வது

கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்றமிழ் நன்னுட்டுச் செழுவிற் கயற்புலி
மண்டலே யேற்ற வரைக வீங்கென
நாவலந் தண்பொழில் நண்ணூர் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
வம்பணி யானே வேந்தர் ஒற்றே
தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்றே
அறைபறை யென்றே அழும்பில்வே ளுரைப்ப
நிறையருந் தானே வேந்தனும் நேர்ந்து
கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சி மாநகர் புக்கபின்
வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவலன் ஆதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் கேளீ ராயின்
தோட்டுணை துறக்கும் துறவொடு வாழுமின்
தாழ்கழல் மன்னன் றன்றிரு மேனி
வாழ்க சேனு முகமென வாழ்த்தி
இறையிக லியானே யெருத்தத் தேற்றி
அறைபறை எழுந்ததால் அணிநகர் மருங்கென்.

———

V

சீவக சிந்தாமணி

நாமகளிலம்பகம்

ஏமாங்கத நாடு

1. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிகிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே.

இராசமாபுரம்

2. தேன்றலைத் துவலை மாலை பைந்துகில் செம்பொன் பூத்து
நான்றன வயிர மாலை நகுகதிர் முத்த மாலை
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத் திராசமா புரம தாமே.

சச்சந்தன்

3. வண்கை யாற்கலி மாற்றினை வேலினால்
திண்டிறற் றெவ்வர் தேர்த்தொகை மாற்றினன்
நுண்க லைக்கிட னுய்த்திரு மாமகள்
கண்க ளுக்கிட னுங்கடி மார்பனே.

4. கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் ருணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே.

5. தருமன் தண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
அருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்திரு மாநில மன்னனே.

6. ஏனை மன்னர்தம் இன்னுயிர் செற்றவேல்
தானை மன்னரில் தானிமி லேறனன்
தேனை மாரியன் னன்றிசை காவலன்
வானந் தோய்புக ழான்மலி வெய்தினன்.

விசயை

7. செல்வற் கின்னணஞ் சேறலின் தீம்புனல்
மல்லல் நீர்விதை யத்தர சன்மகள்
அல்லி சேரணங் கிற்கணங் கன்னவள்
வில்லின் நீள்புரு வத்தெறி வேற்கணள்.

8. வண்டின முகபடாம் அணிந்து வார்மதம்
உண்டுகுத் திடுகளிற் றுழவன் தன்மகள்
பெண்டிர்தம் பெருநலங் கடந்து பெற்றபேர்
விண்டலர் கோதைக்கு விசயை யென்பவே.

விசயையின் மணம்

9. மருமகன் வலந்ததும் மங்கை யாக்கமும்
அருமதிச் சூழ்ச்சியின் அமைச்சர் எண்ணிய
கருமமுங் கண்டவர் கலத்தற் பான்மையிற்
பெருமகற் சேர்த்தினர் பிணைய னீயே.

சச்சந்தன் கட்டியங்காரனுக்குக் கூறல்

10. களிறனை னமைச்சர் தம்முட் கட்டியங் காரன் என்பான்
ஒளிறுவாட் டடக்கை யானுக் குயிரென வொழுகு நாளுள்
பிளிறுவார் முரசிற் சாற்றிப் பெருஞ்சிறப் பியற்றி வேந்தன்
வெளிறிலாக் கேள்வி யானை வேறுகொண் டிருந்து சொன்னன்.

11. அசைவிலாப் புரவி வெள்ளத் தரிஞ்சயன் குலத்துட் டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்த மன்னாள்
விசயையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டும் இலங்குபூண் மார்ப வென்றான்.

கட்டியங்காரன் கூற்றும் அரசன் கூற்றும்

12. அண்ணல்தான் உரைப்பக் கேட்டே யடுகளிற் றெருத்தின்
[இட்ட
வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமேல் இட்ட தொக்கும்

கண்ணகன் ஞாலங் காத்த லெனக்கெனக் கமழுங் கண்ணி
மண்ணகம் வளருந் தோளான் மறுத்துநீ மொழிய லென்றான்.

13. எழுதரு பருதி மார்பன் இற்றென இசைத்த லோடும்
தொழுதடி பணிந்து சொல்லும் துன்னலர்த் தொலைத்த [வேலோய்
கழிபெருங் காத லாள்கட் கழிநலம் பெறுக வையம்
பழிபடா வகையிற் காக்கும் படுநுகம் பூண்ப லென்றான்.

நிமித்திக னென்னும் அமைச்சன் நீதி கூறல்

14. வலம்புரி பொறித்த வண்கை மதவலி விடுப்ப ஏகிக்
கலந்தனன் சேனை காவல் கட்டியங் கார னென்ன
உலந்தரு தோளி ஞ்நீ யொருவன்மேற் கொற்றம் வைப்பின்
நிலந்திரு நீங்கும் என்றோர் நிமித்திகன் நெறியிற் சொன்னான்.

சச்சந்தன் மறுத்தல்

15. எனக்குயி ரென்னப் பட்டான் என்னலாற் பிறரை யில்லான்
மூனைத்திறம் முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்
தனக்கியான் செய்வ செய்தேன் தான்செய்வ செய்க ஒன்றும்
மனக்கினி மொழிய வேண்டா வாழியர் ஒழிக என்றான்.

நிமித்திகன் உலகியலால் நீதி கூறல்

16. காவல குறிப்பன் றேனுங் கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு நன்கலாற் றீங்கு வாரா
பூவலர் கொடிய னூர்கட் போகமே கழுமி மேலும்
பாவமும் பழியு முற்றூர் பற்பலர் கேளி தென்றான்.

உருத்திரதத்த னென்னும் அமைச்சன் கூறல்

17. ஆரறி விகழ்தல் செல்லா ஆயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடையை நீயும் பிணையனுட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடையை யென்றான் உருத்திர தத்தன் என்பான்.

சச்சந்தன் மறுத்தல்

18. அளந்துதாங் கொண்டு காத்த அருந்தவ முடைய நீரார்க்(கு)
அளந்தன போகம் எல்லாம் அவரவர்க் கற்றை நாளே

அளந்தன வாழு நாளும் அதுவெனக் குரைய லென்ரூன்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுடர் இழைக்கும் பூணன்.

கருப்ப முதிர்ச்சியால் விசயை தளர்ச்சி யுறல்

19. பண்கனி யப்பரு கிப்பய னுடகம்
கண்கனி யக்கவர்ந் துண்டுசின் னுள்செல
விண்கனி யக்கவின் வித்திய வேற்கணி
மண்கனிப் பான்வள ரத்தளர் கின்ரூள்.

சச்சந்தன் ஆராய்ந்து ஒரு பொறி செய்விக்கத்
தன்னுள் துணிதல்

20. தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்
தேம்புடை யலங்கன் மார்பிற் றிருமகன் தமிய னுக
ஓம்படை யொன்றுஞ் செப்பாள் திருமகள் ஒளித்து நீங்க
ஆம்புடை தெரிந்து வேந்தற் கறிவெனும் அமைச்சன்
[சொன்னன்.

21. காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேறல் தேற்ரூய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காமம் என்னும் மதுவினிற் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் ரூயோர் அரும்பொறி புனைவி யென்ரூன்.

எந்திரஞ் செய்யச் சொல்லுதல்

22. அந்தரத் தார்மய னேயென ஐயுறும்
தந்திரத் தாற்றம நூல்கரை கண்டவன்
வெந்திற லான்பெருந் தச்சனைக் கூவியொர்
எந்திர வூர்தி யியற்றுமின் என்ரூன்.

தச்சன் மயிற்பொறி செய்தல்

23. பல்கிழி யும்பயி னுந்துகில் நூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
அல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச்
செல்வதொர் மாமயில் செய்தனன் அன்றே.

தச்சன் மயிற்பொறியைக் கொணர்ந்து காட்டல்

24. பீலிநன் மாமயி லும்பிறி தாக்கிய
கோலநன் மாமயி லுங்கொடு சென்றவன்
ஞாலமெல் லாமுடை யானடி கைதொழு(து)
ஆலுமிம் மஞ்ஞை யறிந்தருள் என்றான்.

கண்ட அரசன் தச்சனுக்கு நன்கொடை யளித்தல்

25. நன்னெறி நூனயந் தானன்று நன்றிது
கொன்னெறி யிற்பெரி யாயிது கொள்கென
மின்னெறி பல்கலம் மேதகப் பெய்ததோர்
பொன்னறை தான்கொடுத் தான்புகழ் வெய்யோன்.

விசயை மயிற்பொறியை ஊர்ந்து பழகல்

26. ஆடியல் மாமயில் ஊர்தியை யவ்வழி
மாடமுங் காவும் மடுத்தோர்கின் ளுள்செலப்
பாடலின் மேன்மேற் பயப்பயத் தான்துரந்(து)
ஓட முறுக்கி யுணர்த்த வுணர்ந்தாள்.

27. பண்டவழ் விரலிற் பாவை பொறிவலந் திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடந் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித் திருக்கும் அன்றே.

சச்சந்தனைக் கொல்ல நினைந்த
கட்டியங்காரன் கூறல்

28. காதி வேல்வல கட்டியங் காரனும்
நீதி யானிலங் கொண்டபின் நீதிநூல்
ஓதி னுர்தமை வேறுகொண் டோதினன்
கோது செய்குணக் கோதினுட் கோதனன்.

29. மன்ன வன்பகை யாயதோர் மாதெய்வம்
என்னை வந்திடங் கொண்டஃதி ராப்பகல்
துன்னி நின்று செகுத்திடு மேயெனும்
என்னை யான்செய்வ கூறுமின் என்னவே.

தருமதத்த னென்னும் அமைச்சன் நீதி கூறல்

30. அருமை மாமணி நாகம் அழுங்கவோர்
உருமு வீழ்ந்தென உட்கின ராவவன்
கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்
தரும தத்தனென் பானிது சாற்றினன்.

அரசர் பெருமை

31. தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமகள்
அன்ன வன்வழிச் செல்லினிம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குநர் இல்லையே.

32. திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்கள் ஒப்பவென் றேதுப
குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர்.

33. அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்கல் அழித்தலங் காபவோ.

34. உறங்கு மாயினு மன்னவன் தன்னெளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்(து)
அறங்கள் வெளவ அதன்புறங் காக்கலார்.

35. யாவ ராயினும் நால்வரைப் பின்னிடின்
தேவ ரென்பது தேறுமிவ் வையகம்
காவல் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவி னும்மூரை யார்நவை யஞ்சுவார்.

36. தீண்டி னர்தமைத் தீச்சுடும் மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்
வேண்டில் இன்னமிர் துந்நஞ்சு மாதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே.

37. பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னுட்
குறைபடு மதியந் தேயக் குறுமுயல் தேய்வ தேபோல்
இறைவனுத் தன்னை யாக்கி யவன்வழி யொழுகின் என்றும்
நிறைமதி யிருளைப் போழும் நெடும்புகழ் விளக்கும் என்ரூன்.

படை சூழ்ந்தமையை வாயிலோன் சச்சந்தனுக்கு அறிவித்தல்

38. நீணில மன்ன போற்றி நெடுமுடிக் குரிசில் போற்றி
பூணணி மார்ப போற்றி புண்ணிய வேந்தே போற்றி
கோணினைக் குறித்து வந்தான் கட்டியங் கார னென்று
சேணிலத் திறைஞ்சிச் சொன்னன் செய்யகோல் வெய்ய
[சொல்லான்.

அதனைக் கேட்ட சச்சந்தன் செயல்

39. திண்ணிலைக் கதவம் எல்லாந் திருந்துதாழ் உறுக்க வல்லே
பண்ணுக பசும்பொற் றேரும் படுமதக் களிறும் மாவும்
கண்ணகன் புரிசை காக்குங் காவலர் அடைக என்ரூன்
விண்ணுரு மேறு போன்று வெடிபட முழங்குஞ் சொல்லான்.

40. புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந் திலங்கு கின்ற
ஒலிக்கழன் மன்னர் உட்கும் உருச்சுடர் வாளை நோக்கிக்
கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங் காரன் நம்மேல்
வலித்தது காண்டும் என்று வாளெயி றிலங்க நக்கான்.

சச்சந்தன் கூற்றும் விசயை வருந்தலும்

41. நங்கைநீ நடக்கல் வேண்டும் நன்பொருட் கிரங்கல் வேண்டா
கங்குல்நீ யன்று கண்ட கனவெலாம் விளைந்த தென்னக்
கொங்கலர் கோதை மாழ்கிக் குழைமுகம் புடைத்து வீழ்ந்து
செங்கயற் கண்ணி வெய்ய திருமகற் கவலஞ் செய்தாள்.

சச்சந்தன் விசயையைத் தேற்றல்

42. சாதலும் பிறத்தல் தானுந் தம்வினைப் பயத்தின் ஆகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய்
மோதலும் பரிவும் எல்லாம் துண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்ரூன்.

43. தொல்லோகம் பிறவி யெண்ணின் தொடுகடல் மணலும் ஆற்றுர்
எல்லைய அவற்றுள் எல்லாம் ஏதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றமே இரங்கல் வேண்டா.

44. வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனுல் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும் உணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்றுல் ஒழிகநின் கவலை யென்றுன்.

45. உரிமைமுன் போக்கி யல்லால் ஒளிமுடி மன்னர் போகார்
கருமமீ தெனக்கும் ஊர்தி சமைந்தது கவல வேண்டா
புரிநரம் பிரங்குஞ் சொல்லாய் போவதே பொருண்மற்
[றென்றுன்
எரிமுயங் கிலங்கு வாட்கை ஏற்றிளஞ் சிங்கம் அன்னுன்.

மயிற்பொறிமீது சென்று மயானத்திலிறங்கிய விசயையின் நிலை

46 உண்டென வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக என்று காட்டுவாள் போல ஆகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றுள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியள் ஆனுள்.

விசயை கருவுயிர்த்தல்

47. இருள்கெட இகலி யெங்கும் மணிவிளக் கெரிய ஏந்தி
அருளுடை மனத்த ஆகி அணங்கெலாம் வணங்கி நிற்பப்
பொருகடற் பருதி போலப் பொன்னனுன் பிறந்த போழ்தே
மருளுடை மாதர் உற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே.

விசயையின் வருத்தம்

48. வெவ்வாய் ஓரி முழுவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றுகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே.

49. பற்ரு மன்னன்நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்ரு ரில்லாத் தமியேனுல் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால மூடையாய்நீ வளரு மாறும் அறியேனுல்
எற்றே யிதுகண் டேகாதே யிருத்தி யாலென் இன்னுயிரே.

50. பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பாற் றுயர்க்கடலே நீந்தும் புணைமற் ரூகாக்காற்
சிறந்தா ருளரேல் உரையாயாற் சிந்தா மணியே கிடத்தியால்
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின்
[வருந்துகோ.

மரங்களின் தோற்றம்

51. அந்தோ விசயை பட்டனகொண் டகங்கை புறங்கை
[யாறைப்போல்
கந்தார் களிற்றுத் தங்கோமான் கழிய மயிலோர் மயிலூர்ந்து
வந்தாற் போலப் புறங்காட்டுள் வந்தாள் தமியே யெனமரங்கள்
சிந்தித் திரங்கி யழுவனபோற் பனிசேர் கண்ணீர்
[சொரிந்தனவே.

தெய்வத்தின் உதவி

52. தேனமர் கோதை மாதர் திருமகன் திறத்தை யோராள்
யானெவன் செய்வ லென்றே அவலியா இருந்த போழ்தின்
தானமர்ந் துழையின் நீங்காச் சண்பக மாலை யென்னுங்
கூனிய துருவங் கொண்டோர் தெய்வதங் குறுகிற் றன்றே.

53. விம்மூறு விழுமம் வெந்நோய் வனத்துறை தெய்வஞ் சேரக்
கொம்மென வுயிர்த்து நெஞ்சிற் கொட்புறு கவலை நீங்க
எம்மகீன தமியை யாகி யிவ்விட ருற்ற தெல்லாஞ்
செம்மலர்த் திருவின் பாவாய் யான்செய்த தீமை யென்ரூள்.

54. பூவினுட் பிறந்த தோன்றற் புண்ணிய னனைய நம்பி
நாவினுள் உலக மெல்லாம் நடக்குமொன் ரூது நின்ற
கோவினை யடர்க்க வந்து கொண்டுபோ மொருவன் இன்னே
காவியங் கண்ணி ஞயாம் மறைவது கரும மென்ரூள்.

கந்துக்கடன் குழந்தையை எடுத்தல்

55. புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினன் மறைத்து வண்கையால்
துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினன்
சினைமறைந் தொருகுரல் சீவ வென்றதே.

விசயை குழந்தையை வாழ்த்தல்

56. என்பெழுந் தருகுபு சோர ஈண்டிய
அன்பெழுந் தரசனுக் கவலித் தையனை
நுன்பழம் பகைதவ நூறு வாயென
இன்பழக் கிளவியின் இறைஞ்சி யேத்தினள்.

கந்துக்கடன் தன்னிட்டம் போதல்

57. ஒழுக்கிய லருந்தவத் துடம்பு நீங்கினர்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனெடும் விரைவின் ஏகினன்.

சீவகன் சிறந்து விளங்குதல்

58. பல்பூம் பொய்கைத் தாமரை போன்றும் பனிவானத்(து)
எல்லார் கண்ணும் இன்புற ஊரும் மதிபோன்றும்
கொல்லுஞ் சிங்கக் குட்டியும் போன்றிவ் வுலகேத்தச்
செல்லும் மன்னே சீவகன் தெய்வப் பகைவென்றே.

59. சாதிப் பைம்பொன் தன்னொளி வெளவித் தகைகுன்ற
நீதிச் செல்வம் மேன்மேல் நீந்தி நிறைவெய்திப்
போதிச் செல்வம் பூண்டவர் ஏத்தும் பொலிவின்னல்
ஆதிக் காலத் தந்தணன் காதல் மகனெத்தான்.

அச்சணந்தி யாசிரியன்பாற் சீவகன் வில்வேத முதலிய கலைகளைப் பயிறல்

60. நாமக ணலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி நன்னூல்
ஏழுத லாய எல்லாப் படைக்கலத் தொழிலும் முற்றிக்
காமனுங் கனிய வைத்த புலங்கரை கண்டு கண்ணார்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலகம் ஒத்தான்.

VI

பெரிய புராணம்

திருக்குறிப்புத்தொண்டநாயனார்

தொண்டை நாட்டின் சிறப்பு

1. நன்மை நீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை யோங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பில்
தொன்மை மேன்மையின் நிகழ்பெரும் தொண்டைநன் [னாடு.

குறிஞ்சி

2. மல்கும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை யெங்கணும் இறவுளர் ஏனன்முன் விளக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை
சொல்லு மப்புனங் காப்பவுஞ் சுரிகுழற் றோகை.

பாலை

3. கோல முல்லையுங் குறிஞ்சியு மடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன வுளபரன் முரம்பு.

முல்லை

4. சொல்லு மெல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேற் படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதல் முயலுகைத் தடங்குநீண் முல்லை.

மருதம்

5. வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந் தோடிப்
பாச டைத்தடந் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களும் ஏரியும் புகுவ,

நெய்தல்

6. தூய வெண்டுறைப் பரதவர் தொடுப்பன வலைகள்
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி
ஆய பேரளத் தளவர்கள் அளப்பன உப்பு
சாயன் மெல்லிடை யளத்தியர் அளப்பன தரளம்.

திணை மயக்கம்

7. கோடு கொண்டெழுந் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய.

8. கவரு மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலுஞ் சேவலு மாறியுஞ் சிறுகழிச் சியர்கள்
அவரை யேனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலுங் கானமுங் கலந்துள வொழுக்கம்.

நகரச் சிறப்பு

9. இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை யென்றும்
மெய்வ ளந்தரு சிறப்பினல் உலகெலாம் வியப்ப
எவ்வு கங்களு முள்ளதென் றியாவரும் ஏத்துங்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம்.

உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து அறம்புரிந்த வரலாறு

10. ஆன தொன்னகர் அம்பிகை தம்பெரு மானை
மான வர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்(டு)
ஊன மில்லற மனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்டவப் பெருமையை யறிந்தவா விளம்பில்.

11. வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியா ரருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளினுள் உலகையா ளுடையாள்.

12. நங்கை யுண்ணிறை காதலே நோக்கி
நாய கன்றிரு வுள்ளத்து மகிழ்ந்தே
அங்க ணெய்திய முறுவலுந் தோன்ற
அடுத்த தென்கொல்நின் பாலென வினவ
இங்கு நாதநீ மொழிந்தவா கமத்தின்
இயல்பி னலுனை யர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஆசையென் றிறைஞ்சிப்
போக மார்த்தநன் மேனியள் போற்ற,

13. தேவ தேவனும் அதுதிரு வுள்ளஞ்
செய்து தென்றிசை மிக்கசெய் தவத்தால்
யாவ ருந்தனை யடைவது மண்மேல்
என்று மூள்ளது காஞ்சிமற் றதனுள்
மாவ மர்ந்தநம் இருக்கையி லிணைந்து
மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வாயென்(று)
ஏவ வெம்பெரு மாட்டியும் பிரியா
இசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள்.

14. துன்னு பல்லுயிர் வானவர் முதலாச்
சூழ்ந்து டன்செலக் காஞ்சியி லிணையத்
தன்னை நேர்வரும் பதுமமா நாகம்
தம்பி ராட்டிதாள் தலைமிசை வைத்தே
அன்னை யாயுல கனைத்தையும் ஈன்றாய்
அடிய னேனுறை பிலமத னிடையே
மன்னு கோயில்கொண் டருளுவா யென்ன
மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து,

15. அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப
அளவி லின்பத்தின் அருட்கரு விருத்தித்
திங்கள் தங்கிய புரிசடை யார்க்குத்
திருந்து பூசனை விரும்பினள் செய்ய
எங்கு நாடவுந் திருவினை யாட்டால்
ஏக மாமுத லெதிர்ப்படா தொழியப்
பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே
புரிவு செய்தனள் பொன்மலை வல்லி.

16. நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி
நிரந்த ரந்திரு வாக்கினில் நிகழ்வ(து)
அஞ்செ ழுத்துமே யாகஆ ளுடைய
அம்மை செம்மலர்க் கைகுவித் தருளித்
தஞ்ச மாகிய அருந்தவம் புரியத்
தரிப்ப ரேயவள் தனிப்பெருங் கணவர்
வஞ்ச நீக்கிய மாவின்மூ லத்தில்
வந்து தோன்றினர் மலைமகள் காண.

17. கண்ட போதிலப் பெருந்தவப் பயனுங்
கம்ப மேவிய தம்பெரு மானை
வண்டு லாங்குழற் கற்றைமுன் சூழ
வணங்கி வந்தெழும் ஆசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பள வின்றிக்
குறித்த பூசனைக் கொள்கைமேற் கொண்டு
தொண்டை யங்கனி வாயுமை நங்கை
தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள்.

18. கொய்த பன்மலர் கம்பைமா நதியிற்
குலவு மஞ்சன நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டின வெல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த வாகம விதியெலாஞ் செய்தாள்
உயிர்கள் யாவையு மீன்றவெம் பிராட்டி.

19. கரந்த ரும்பய னிதுவென வுணர்ந்து
கம்ப மேவிய வும்பர்நா யகர்பால்
நிரந்த காதல்செ யுள்ளத்த ளாகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாமலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பாற்
சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறுஞ்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே.

20. நாத ரும்பெரு விருப்பொடு நயந்து
நங்கை யர்ச்சனை செய்யுமப் பொழுதிற்
காதல் மிக்கதோர் திருவிளை யாட்டிற்
கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி
ஓத மார்கட லேழுமொன் றுகி
ஓங்கி வானமும் உட்படப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை
வெள்ள மாத்திரு வுள்ளமுஞ் செய்தார்.

21. அண்ண லாரருள் வெள்ளத்தை நோக்கி
அங்க யற்கண்ணி தம்பெரு மான்மேல்
விண்ணை லாங்கொள வரும்பெரு வெள்ளம்
மீது வந்துறும் எனவெருக் கொண்டே
உண்ணி லாவிய பதைப்புறு காத
லுடன்றி ருக்கையாற் றடுக்கநில் லாமை
தண்ணி லாமலர் வேணியி னுரைத்
தழுவிக் கொண்டனள் தன்னை யே யொப்பாள்.

22. கம்பர் காதலி தழுவமெய் குழையக்
கண்டு நிற்பவுஞ் சரிப்பவு மான
உம்ப ரேமுதல் சீவர்க ளெல்லாம்
உயிரும் யாக்கையு முருகியொன் றுகி
எம்பி ராட்டிக்கு மெல்லிய ரானர்
என்றும் ஏகம்ப ரென்றெடுத் தேத்த
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே.

23. அண்டர் நாயகர் எதிர்நின் றுகூறும்
அளவி னுலஞ்சி யஞ்சலி கூப்பிக்
கொண்ட இற்றையென் பூசனை யின்னுங்
குறைநி ரம்பிடக் கொள்கவென் றருள
வண்டு வார்குழன் மலைமகள் கமல
வதன நோக்கியம் மலர்க்கணைற் றியின்மேல்
மூண்ட நீற்றர்கின் பூசனை யென்றும்
முடிவ தில்லைநம் பாலென மொழிய.

24. மாறி லாதவிப் பூசனை யென்றும்
மன்ன வெம்பிரான் மகிழ்ந்துகொண் டருளி
ஈறி லாதவிப் பதியினு ளெல்லா
அறமும் யான்செய அருள்செய வேண்டும்
வேறு செய்வினை திருவடிப் பிழைத்த
லொழிய இங்குளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப்
பெறவும் வேண்டுமென் றனள்பிறப் பொழிப்பாள்.

25. விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே
இடைய ருவறம் வளர்க்கும்வித் தாக
இகப ரத்திரு நர்ழிநெல் லளித்துக்
கடைய ராகியு முயர்ந்தவ ராயுங்
காஞ்சி வாழ்பவர் தாஞ்செய்தீ வினையுந்
தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காந்
தவங்க ளாகவு முவந்தருள் செய்தார்.

26. எண்ண ரும்பெரு வரங்கண்மூன் பெற்றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினுல்
நண்ணு மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலி னீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய மூப்பதோ டிரண்டறம் புரக்கும்.

திருக்காமக் கோட்டம்

27. அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கும்
அம்மை தன்றிருக் காமக்கோட் டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது
வழிக்கொ ளாததன் மருங்குபோ தலினுற்
சந்த மாதிர மயங்கியெம் மருங்குஞ்
சாயை மாறி யதன்றிசை மயக்கம்
இந்த மாநிலத் தவரெலாங் காண
என்று மூள்ளதொன் றின்றுமங் குளதால்.

பல திருப்பதிகள்

28. மறைக ளாற்றுதித் தருந்தவம் புரிந்து
மாறி லாநிய மந்தலே நின்று
முறைமை யால்வரும் பூசனை செய்ய
முனிவர் வானவர் முதலுயி ரெல்லாம்
நிறையு மன்பினு லர்ச்சனை செய்ய
நீடு காமங்க ளவரவர்க் கருளி
இறைவர் தாமகிழ்ந் தருளிய பதிகள்
எண்ணி றந்தவத் திருநக ரெல்லை.

கரிகாற் பெருவளத்தான் செயல்

29. என்று மூள்ளவிந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி யிமயமால் வரைமேல்
வைக்க வேகுவோன் றனக்கிதன் வளமை
சென்று வேடன்மூன் கண்டுரை செய்யத்
திருந்து காதலான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்.

அந்தணர் வீதி

30. அருமறையந் தணர்மன்னு மிருக்கை யான
ஆகுதியின் புகையடுத்த வம்பொன் மாடப்
பெருமறுகு தொறும்வேள்விச் சாலை யெங்கும்
பெறுமவிப்பா கங்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை யழைத்துவிடு மந்திர மெங்கும்
வானவர்நா யகர்திருவே கம்பர் முன்றில்
திருமலிபொற் கோபுரத்து நெருங்கு மெல்லாத்
தேவரையு மணித்தாகக் கொண்டு செல்லும்.

அரசர் வீதி

31. அரசர்குலப் பெருந்தெருவுந் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்விய லிடமு மங்கண்
புரசைமதக் கரிகளொடு புரவி யேறும்
பொற்புடைய வீதிகளும் பொலிய வெங்கும்

விரைசெய்நறுந் தொடையலங்கற் குமரர் செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்
நிரைசெறியும் விமானவூர் திகளின் மேலும்
நிலமிசையும் பலமுறையு நிரந்து நீங்கார்.

வணிகர் வீதி

32. வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயினிலவு மணிக்கடைமா நகர்க ளெல்லாம்
வனப்புடைய பொருட்குலங்கள் மலித லாலே
கயிலைமலை யார்கச்சி யால யங்கள்
கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் றங்கப்
பயிலளகா புரிவகுத்த பரிசு காட்டும்.

வேளாளர் வீதி

33. விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழவிளவெண் டிங்கள்புனை கம்பர் செம்பொன்
மலைவல்லிக் களித்தவள ருணவின் மூலந்
தொழுவுலகு பெறுமவள்தா னருளப் பெற்றுத்
தொன்னிலத்து மன்னுபயிர் வேத வாய்மை
உழவுதொழி லாற்பெருக்கி யுயிர்க ளெல்லாம்
ஒங்கவருந் தருமவினைக் குளரால் என்றும்.

திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு

34. அவ்வகைய திருநகரம் அதன்கணொரு மருங்குறைவார்
இவ்வுலகிற் பிறப்பிலுல் ஏகாலிக் குலத்துள்ளார்
செவ்வியவன் புடைமனத்தார் சிலத்தி னெறிநின்றூர்
மைவிரவு கண்டரடி வழித்தொண்ட ருளரானூர்.

35. மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா வினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக வணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்துபோற்றுநிலைத்
திண்மையினுல் திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினூர்.

36. தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணு ரெனவொண்ணு வுண்மையினூர்
நீரொலிக்க அராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வுருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பினெடும்.

37. தேசுடைய மலர்க்கமலச் சேவடியா ரடியார்தந்
தூசுடைய துகண்மாசு கழிப்பார்போற் றொல்லைவினை
ஆசுடைய மலமூன்றும் அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளில் அங்கொருநாள்.

38. பொன்னிமையப் பொருப்பரையன் பயந்தருளும்
[பூங்கொடிதன்
நன்னிலைமை யன்றளக்க வெழுந்தருளு நம்பெருமான்
தன்னுடைய வடியவர்தந் தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான் வந்தணைவார்.

39. சீதமலி காலத்துத் திருக்குறிப்புத் தொண்டர்பால்
ஆதுலராய் மெலிந்துமிக அழுக்கடைந்த கந்தையுடன்
மாதவமே டந்தாங்கி மாலறியா மலரடிகள்
கோதடையா மனத்தவர்முன் குறுநடைகள் கொளக்குறுகி.

40. திருமேனி வெண்ணீறு திகழ்ந்தொளிருங் கோல்த்துக்
கருமேக மெனவழுக்குக் கந்தையுட னெழுந்தருளி
வருமேனி யருந்தவரைக் கண்டுமன மகிழ்ந்தெதிர்கொண்(டு)
உருமேவு மயிர்ப்புளகம் உளவாகப் பணிந்தெழுந்தார்.

41. எய்துமவர் குறிப்பறிந்தே யின்மொழிகள் பலமொழிந்து
செய்தவத்தீர் திருமேனி யிளைத்திருந்த தென்னென்று
கைதொழுது கந்தையினைத் தந்தருளுங் கழுவவென
மைதிகழ்கண் டங்கரந்த மாதவத்தோ ரருள்செய்வார்.

42. இக்கந்தை யழுக்கேறி யெடுக்கவொணா தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன் மேல்
[கடற்பால்
அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன் றருவீரேல்
கைக்கொண்டு போயொலித்துக் கொடுவாரும் கடிதென்றார்.

43. தந்தருளு மிக்கந்தை தாழாதே யொலித்துமக்கின்(று)
அந்திபடு வதன்முன்னந் தருகின்றே னெனவவருங்
கந்தையிது வொலித்துணக்கிக் கடிதின்றே தாரீரேல்
இந்தவுடற் கிடர்செய்தீர் என்றுகொடுத் தேகினார்.

44. குறித்தபொழு தேயொலித்துக் கொடுப்பதற்குக் கொடு
[போந்து
வெறித்தடநீர்த் துறையின்கண் மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகுமளவிற் பெரும்பகல்போய்ப்
[பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால் மழையெழுந்து பொழிந்திடுமால்.

45. திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாமிடைந்து
மிசைசொரியும் புனற்றுரை விழிதுழையா வகைமிடைய
அசைவுடைய மனத்தன்பர் அறிவுமறந் தருந்தவர்பால்
இசைவுநினைந் தழிந்தினியான் என்செய்கே னெனநின்றார்.

46. ஓவாதே பொழியுமழை யொருகால்விட் டொழியுமெனக்
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார் விடக்காணர்
மேவார்போற் கங்குல்வர மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆவாவென் குற்றேவல் அழிந்தவா வெனவிழுந்தார்.

47. விழுந்தமழை யொழியாது மெய்த்தவர்சொல் லியவெல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக் காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செயலென்று துணிந்தெழுவார்.

48. கந்தைபுடைத் திடவெற்றுங் கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தவெடுத் தெற்றுவனென் றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை.

49. வானிறைந்த புனன்மழைபோய் மலர்மழையா யிடமருங்கு
தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார் மெய்த்தொண்டர்
தானிறைந்த வன்புருகக் கைதொழுது தனிநின்றார்.

50. முன்னவரை நேர்நோக்கி மூக்கண்ணர் மூவுலகும்
நின்னிலைமை யறிவித்தோம் நீயுமினி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவா யெனவருளி
அந்நிலையே யெழுந்தருளி யணியேகாம் பரமணைந்தார்.

VII

கம்பராமாயணம்

விபீடணன் அடைக்கலப் படலம்

1. உண்டுரை யுணர்த்துவ தூழி யாயெனப்
புண்டரீ கத்தடம் புரையும் பூட்கியான்
மண்டிலச் சடைமுடி துளக்கி வாய்மையாய்
கண்டதுங் கேட்டதுங் கழறு வாயென்றான்.

2. விளைவினை யறிந்திலம் வீட ணப்பெயர்
நளிர்மலர்க் கையின ஞல்வ ரோடுடன்
களவியல் வஞ்சனை யிலங்கைக் காவலற்கு
இளவனஞ் சேனையி னடுவ ணெய்தினன்.

3. கொல்லுமின் பற்றுமி னென்னுங் கொள்கையாற்
பல்பெருந் தானைசென் றடர்க்கப் பார்த்தியான்
நில்லுமி னென்றுநீர் யாவிர் நுங்நிலை
சொல்லுமி னென்னவோர் துணைவன் சொல்லினன்.

4. முரண்புகு தீவினை முடித்த முன்னவன்
கரண்புகு சூழலே சூழக் காண்பதோர்
அரண்பிறி தில்லென வருளின் வேலையைச்
சரண்புகுந் தனனென முன்னஞ் சாற்றினன்.

5. கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்
எற்புடைக் குன்றமா மிலங்கை யேழைநின்
பொற்புடை முடித்தலை புரளு மென்றொரு
நற்பொரு ளுணர்த்தின னென்று நாட்டினன்.

6. ஏந்தெழி லிராவண னினைய சொன்னநீ
சாந்தொழிற் குரியையென் சார்பு நிற்றியேல்
ஆந்தினைப் பொழுதினி லகறி யாலெனப்
போந்தன னென்றனன் புகுந்த தீதென்றான்.

7. அப்பொழு திராமனு மருகி னண்பரை
இப்பொருள் கேட்டநீ ரியம்பு வீரிவன்
கைப்புகற் பாலனே கழியற் பாலனே
ஒப்புற நோக்கிநும் முணர்வி னலென்றான்.

8. தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பிநின்று
இடனிது காலமீ தென்ன வெண்ணுவான்
கடனறி காவலன் கழறி னனரோ
சுடர்நெடு மணிமுடிச் சுக்கி ரீபனே.

9. வெம்முனை விளைதலி னன்று வேறொரு
சும்மையா னுயிர்கொளத் துணித லாலன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ
செம்மையி லரக்கரில் யாவர் சீரியோர்.

10. வார்க்குறு வனைகழற் றம்மூன் வாழ்ந்தநாட்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே போந்த போதிவன்
ஆர்க்குற வாகுவ னருளி னழியாய்.

11. வஞ்சனை யியற்றிட வந்த வாறலால்
தஞ்சென நம்வயிற் சார்ந்து ளானலன்
நஞ்செனக் கொடியனை நயந்து கோடியோ
அஞ்சன வண்ணவென் றறியக் கூறினன்.

12. அன்னவன் பின்னுற வலகில் கேள்வியில்
தன்னிகர் பிறரிலாத் தகைய சாம்பனை
என்னையுன் கருத்தென விறைவி னுயினுன்
தொன்முறை நெறிதெரிந் தவனுஞ் சொல்லுவான்.

13. வெற்றியுந் தருகுவர் வினையம் வேண்டுவர்
முற்றுவ ருறுகுறை முடிப்பர் முன்பினில்
உற்றுறு நெடும்பகை யுடைய ரல்லதூஉம்
சிற்றினத் தவரொடுஞ் செறிதல் சீரிதோ.

14. மேனனி விளைவது விளம்ப வேண்டுமோ
கானகத் திறைவியோ டுறையுங் காலையின்
மானென வந்தவன் வரவை மானுமிவ்
வேனையன் வரவுமென் றினைய கூறினன்.

15. பால்வரு பனுவலின் றுணிவு பற்றிய
சால்பெருங் கேள்வியின் ரூனை நாயகன்
நீலனை நின்கருத் தியம்பு நீயென
மேலவன் விளம்பலும் விளம்பன் மேயினன்.

16. தாமுற வெளிவரும் தகைமை யாரலர்
காமுற வல்லவர் நம்மை நண்ணினுல்
தோமுற நீங்குதல் துணிவ ராதலின்
யாமிவன் வரவிவற் றென்னென் றுன்னுவாம்.

17. காலமே நோக்கினுங் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினு முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியாந் தெளிந்து தேறுதற்(கு)
ஏலுமே யென்றெடுத் தினைய கூறினன்.

18. மற்றுள மந்திரிக் கிழவர் வாய்மையாற்
குற்றமில் கேள்விய ரன்பு கூர்ந்தவர்
பற்றுதல் பழுதெனப் பழுது ரூவொரு
பெற்றியி னுணர்வினர் முடியப் பேசினர்.

19. உறுபொருள் யாவரு மொன்றக் கூறினர்
செறிபெருங் கேள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதரு மாருதி யென்னு நேரிலா
அறிவனை நோக்கினு னறிவின் மேலுளான்.

20. இணங்கின ரறிவில ரெனினு மெண்ணுங்காற்
கணங்கொள்கை நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியா னுவல்வ தாயினன்.

21. தூயவர் துணிதிற னன்று தூயதே
ஆயினு மொருபொரு ளுரைப்ப ழியாய்
தீயனென் றிவனையா னயிர்த்தல் செய்கிலேன்
மேயின சிலபொருள் விளம்ப வேண்டுமால்.

22. உள்ளத்தி னுள்ளதை யுரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாதலால்
கள்ளத்தின் விளைவெலாங் கருத்தி லாமிருட்
பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமோ.

23. கொல்லுமி னிவனெனென் றரக்கன் கூறிய
எல்லையிற் றூதரை யெறிந்த லென்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னெனென் றிடைவி லக்கினன்.

24. மாதரைக் கோறலு மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலு மழிவு செய்யினுந்
தூதரைக் கோறலுந் தூய்தன் ரூமென
ஏதுவிற் சிறந்தன வெடுத்துக் காட்டினன்.

25. நிந்தனை நறவமு நெறியி லான்களும்
தந்தன கண்டிலேன் றரும தானமும்
வந்தனை நீதியும் பிறவு மாண்பமைந்து
அந்தண ரில்லெனப் பொலிந்த தாமரோ.

26. அன்னவன் றனிமக ளலரின் மேலயன்
சொன்னதோர் சாபமுண் டுன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல் நணுகுங் கூற்றென
என்னுடை யிறைவிக்கு மினிது கூறினள்.

27. மாருதி வினய வார்த்தை செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
பேரறி வாள நன்று நன்றெனப் பிறரை நோக்கிச்
சீரிது மேலிம் மாற்றம் தெளிவுறத் தேர்மி னென்னு
ஆரிய னுரைப்ப தானு ணனைவரும் மதனைக் கேட்டார்.

28. கருத்துற நோக்கிப் போந்த காலமு நன்று காதல்
அருத்தியு மரசின் மேற்றே யறிவினுக் கவதி யில்லை
பெருத்துயர் தவத்தி னானும் பிழைப்பில னென்னும் பெற்றி
திருத்திய தாகு மன்றே நம்வயிற் சேர்ந்த செய்கை.

29. மற்றினி யுரைப்ப தென்னை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன தன்றெனிற் பிறிதொன் ரூனும்
வெற்றியே பெறுக தோற்க வீக வீயாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ வடைக்கலம் பகர்கின் ரூனை.

30. இன்றுவந் தானென் றுண்டோ வெந்தையையாயை முன்னங்
கொன்றுவந் தானென் றுண்டோ வடைக்கலங் கூறுகின் ரூன்
தொன்றுவந் தன்பு செய்யுந் துணைவனு மவனே பின்னைப்
பின்றுமென் ரூலு நம்பாற் புகழன்றிப் பிறிதுண் டாமோ.

31. பிறந்தநாட் டொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச் சரணென வாழ்கின் றனைத்
துறந்தநாட் கின்று வந்து துன்னினன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே வென்று மிருந்தநா ளாவ தென்றான்.

32. இடைந்தவர்க் கபயம் யாமென் றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யால முண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா லுயி ருள்ளதொன் றீயா லுயின்
அடைந்தவர்க் கருளா லுயி னறமென்ன மாண்மை யென்னும்.

33. பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான் விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றே.

34. போதக மொன்று கன்றி யிடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் னபயமென் றழைத்த வந்நாள்
வேதமு முடிவு காண மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி லாதார்.

35. மன்னுயி ரெல்லாந் தானே வருவித்து வளர்க்கு மாயன்
தன்னன வுலக மெல்லாந் தருமமு மெவையுந் தானே
என்னினு மடைந்தோர் தம்மை யேமுற வினிதி லேம்பிப்
பின்னும்வீ டளிக்கு மென்றுற் பிறிதொரு சான்று முண்டோ.

36. நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாள னுந்தம்
தஞ்சென முன்னந் தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினே னபய மென்ற வந்தணற் காகி யந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை
[யுண்டோ.

37. சரணெனக் கியார்கொ லென்று சானகி யழுது சாம்ப
அரணுனக் காவன் வஞ்சி யஞ்சலென் றருளி னெய்தி
முரணுடைக் கொடியோன் கொல்ல மொய்யமர் முடித்துத்
[தெய்வ
மரணமென் றுதை பெற்ற தென்வயின் வழக்கன் றுமோ.

38. உய்யநிற் கபய மென்று னுயிரைத்தன் னுயிரி னேம்பாக்
கையனு மொருவன் செய்த வுதவியிற் கருத்தி லோனும்

மையற நெறியி னேக்கி மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென் றுனு மீள்கிலா நரகில் வீழ்வார்.

39. சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வே னென்று பேணிய விரதப் பெற்றி
வேதிய ரபய மென்றுரைக் கன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற வவ்வுரை கடக்க லாமோ.

40. காரிய மாக வன்றே யாகுக கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கி னிதனின்மேற் சிறந்த துண்டோ
பூரிய ரேயுந் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்றா
ஆருயிர் கொடுத்துக் காத்தா ரெண்ணிலா வரச ரம்மா.

41. ஆதலா னபய மென்ற பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பா டென்ப தியம்பினீ ரென்பால் வைத்த
காதலா னினிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி யென்றான்.

42. ஐயுற வெல்லாந் தீரு மளவையா யமைந்த தன்றே
தெய்வநா யகன துள்ளந் தேறிய வடைவே தேறிக்
கைபுகற் கமைவ தானுன் கடிதினிற் கொணர்வ லென்னு
மெய்யினுக் குறையு ளான வொருவன்பால் விரைவிற்
[சென்றான்.

43. வருகின்ற கவியின் வேந்தை மயிந்தனுக் கிளைஞன் வள்ளல்
தருகென்று னதனு னின்னை யெதிர்கொளற் கருக்கன் றந்த
இருகுன்ற மனைய தோளா னெய்தின னென்ன லோடும்
திரிகின்ற வுள்ளத் தானும் அகமலர்ந் தவன்முன் சென்றான்.

44. தொல்பெருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்.

45. தழுவினர் நின்ற காலைத் தாமரைக் கண்ணன் றங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற முறைமையா லுவகை மூள
வழுவலி லபய முன்பால் வழங்கின னவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவி னென்னுக் கதிரவன் சிறுவன்
[சொன்னான்,

46. சிங்கவே றனையான் சொன்ன வாசகஞ் செவிபு காமுன்
கங்குலி னிறத்தி னன்றன் கண்மழைத் தாரை காண்ற
அங்கமு மனம தென்னக் குளிர்ந்ததவ் வகத்தை மிக்குப்
பொங்கிய வுவகை யென்னப் பொடித்தன வுரோமப் புள்ளி.

47. பஞ்சனைச் சிவக்கு மென்காற் றேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய வென்னை வருகவென் றருள்செய் தானே
தஞ்சனைக் கருதி னலே தாழ்சடைக் கடவு ளுண்ட
நஞ்சனைத் தகையே னன்றே நாயக னருளி னையேன்.

48. மருளுறு மனத்தி னனென் வாய்மொழி மறுத்தான் வானத்து
உருளுறு தேரி னனு மிலங்கைமீ தோடு மன்றே
தெருளுறு சிந்தை வந்த தேற்றமீ தாகிற் செய்யும்
அருளிது வாயிற் கெட்டேன் பிழைப்பரோ வரக்க ரானோர்.

49. தீர்வரு மின்ன றம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே.

50. துறவியி னுறவு பூண்ட தூயவர் துணைவ னென்னை
உறவுவந் தருளி மீளா வடைக்கல முதவி னானே
மறவினை நீக்க லில்லா மாயமு மாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னு நரகினிற் பிழைப்ப
[தானேன்.

51. திருத்திய வுணர்வு மிக்க செங்கதிர்ச் செல்வன் செம்மல்
ஒருத்தரை நலனுந் தீங்கும் தேரினு முயிரி னெம்பும்
கருத்தின னன்றே தன்னைக் கழலடைந் தோரைக் காணும்
அருத்திய னமலன் ரூழா தேகுதி யறிஞ னென்றான்.

52 மொய்தவழ் கிரிகண் மற்றும் பலவுடன் முடுகிச் செல்ல
மைதவழ் கிரியு மேருக் குன்றமும் வருவ தென்னச்
செய்தவம் பயந்த வீரர் திரண்மர மேழுந் தீய
எய்தவ னிருந்த சூழ லிருவரு மெய்தச் சென்றார்.

53. மார்க்கடஞ் சூழ்ந்த வைப்பி னிளையவன் மருங்கு காப்ப
நாற்கட வுடுத்த பாரி னயகன் புதல்வ னமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வானைக் கண்டான்.

54. அள்ளிமீ துலகை வீசு மரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் டிரையிற் ரூகிப் பிறிதொரு திறனுஞ் சாரா
வெள்ளிய கடலின் மேனுள் விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தா னென்னப் பொலிதரு பண்பி னானை,

55. கோணுதற் கமைந்த கோலப் புருவம்போற் றிரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின் பொலிமணல் பரந்த வைப்பிற்
காணுதற் கினிய நீள வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் கமைந்த கண்ணின் மணியென வயங்கு வானை,

56. படர்மழை சுமந்த காலைப் பகர்வரு மமரர் கோமான்
அடர்கிலை துறந்த தென்ன வாரந்தீர் மார்பி னானைக்
கடர்கடை மத்திற் பாம்பு கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயந் தீர்ந்த சுந்தரத் தோளி னானை,

57. கற்றைவெண் ணிலவு நீக்கிக் கருணையா மமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் ரூய முழுமதி முகத்தி னானைப்
பெற்றவ னளித்த மோலி யிளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னி யானை,

58. வீரனை நோக்கி யங்க மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் ரூகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி யறநிறங் கரிதோ வென்ரூன்.

59. மின்மினி யொளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுட நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனூர் கமலத் தண்ணல் தாதையார் சரணந் தாழ
என்முனு ரெனக்குச் செய்த வுதவியென் றேம்ப லுற்ரூன்.

60. பெருந்தவ மியற்றி னோர்க்கும் பேர்வரும் பிறவி நோய்க்கு
மருந்தென நின்ரூன் ரூனே வடிக்கணை தொடுத்துக் [கொல்வான்
இருந்தன னின்ற தென்னு மியம்புவ தில்லை தீர்ந்த
அருந்தவ முடைய ரம்மா வரக்கரென் றகத்துட் கொண்டான்.

61. கரங்கண்மீச் சுமந்து செல்லுங் கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களு முருக நோக்குங் காதலன் கருணை வள்ளல்
இரங்கின னேக்குந் தோறு மிருநிலத் திறைஞ்சு கின்ரூன்
வரங்களின் வாரி யன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்.

62. அழிந்தது பிறவி யென்னு மகத்தியன் முகத்துக் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி ஞானப்
பொழிந்ததோர் கருணை தன்னற் புல்லின னென்று தோன்ற
எழுந்தினி திருத்தி யென்னு மலர்க்கையா லிருக்கை யீந்தான்.

63. ஆழியா னவனை நோக்கி யருள்சுரந் துவகை தூண்ட
ஏழிலே டோழாய் நின்ற வுலகுமென் பெயரு மெங்காள்
வாழுநா ளன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கட லிலங்கைச் செல்வ நின்னதே தந்தை னென்றான்.

64. தீர்த்தனல் லருளை நோக்கிச் செய்ததோ சிறப்புப் பெற்றான்
கூர்த்தநல் லறத்தை நோக்கிக் குறித்ததோ யாது கொல்லோ
வார்த்தையஃ தூரைத்த லோடுந் தனித்தனி வாழ்ந்தே மென்ன
ஆர்த்தன வுலகி லுள்ள சராசர மனைத்து மம்மா.

65. உய்ஞ்சன னடிய னேனென் றாழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை யழகனு மருளி நோக்கித்
தஞ்சநற் றுணைவ னென தவறிலாப் புகழான் றன்னைத்
துஞ்சலி னயனத் தைய சூட்டுதி மகுட மென்றான்.

66. விஞ்சவினை யறியும் வென்றி வீடண னென்றும் வியா
அளவறு பெருமைச் செல்வ மளித்தனை யாயி னைய
களவிய லரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி யென்னையுங் கவித்தி யென்றான்.

67. குகனெடு மைவ ரானே முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடு மறுவ ரானே மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னெடு மெழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை.

68. நடுவினிப் பகர்வ தென்னே நாயக நாயி னேனை
உடனுதித் தவர்க ளோடு மொருவனென் றுரையா நின்றாய்
அடிமையிற் சிறந்தே னென்னு வயிர்ப்பொடு மச்ச நீங்கித்
தொடுகழற் செம்பொன் மோலி சென்னியிற் சூட்டிக்
[கொண்டான்.

69. திருவடி முடியிற் சூட்டிச் செங்கதி ருச்சி சேர்ந்த
அருவரை யென்ன நின்ற வரக்கர்த மரசை நோக்கி
இருவரு மின்ப முற்றார் யாவரு மின்ப முற்றார்
பொருவரு மமரர் வாழ்த்திப் பூமழை பொழிவ தானார்.

70. ஆர்த்தன பரவை யேழு மார்த்தன மேக மார்த்த
வார்த்தொழில் புணருந் தெய்வ மங்கல முரசுஞ் சங்கும்
தூர்த்தன கனக மாரி சொரிந்தன நறுமென் சுண்ணம்
போர்த்தது வானத் தன்றங் கெழுந்தது துழனிப் பொம்மல்.

71. மொழிந்தசொல் லமிழ்த மன்ன டிறத்தினின் முறைமை
[நீங்கி
இழிந்தவென் மரபு மின்றே யுயர்ந்ததென் றிடரிற் றீர்ந்தான்
செழுந்தனி மலரோன் பின்னை யிராவணன் தீமைச் செல்வம்
அழிந்ததென் றறனுந் தன்வா யாவலங் கொட்டிற் றன்றே.

72. இன்னதோர் செவ்வித் தாக விராமனு மிலங்கை வேந்தன்
தன்னெடுஞ் செல்வந் தானே பெற்றமை பலருங் கேட்பப்
பன்னெடுந் தாணை சூழப் பகலவன் சேயு நீயும்
மன்னெடுங் குமர பாடி வீட்டினை வலஞ்செய் கென்றான்.

73. அந்தமில் குணத்தி னானை யடியினை முடியி னேடும்
சந்தன விமான மேற்றி வானரத் தலைவர் தாங்க
இந்திரற் குரிய செல்வ மெய்தினு னிவனென் றேத்தி
மந்தரத் தடந்தோள் வீரர் வலஞ்செய்தார் தாணை வைப்பை.

74. தேடுவார் தேட நின்ற சேவடி தானுக் தேடி
நாடுவா னன்று கண்ட நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவ மைந்தும் நீங்கிமே லமர ராவார்
சூடுவா ரெய்தும் தன்மை சொல்லுவார் யாவர் சொல்லீர்.

75. இற்றைநா ளளவும் யாரு மிருடிக ளிமையோர் ஞானம்
முற்றினு ரன்பு பூண்டார் வேள்விகண் முடித்து நின்றூர்
மற்றுமா தவரு மெல்லாம் வாளெயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்ற தென்று வியந்தனர் பெரியோ ரெல்லாம்.

VIII

கோயிலன்மணிமாலை.

வெண்பா

1. பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

கட்டளைக் கலித்துறை

2. குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித்தெரிபொற் றிகிரிப்
படைகொண் டிகறெறும் பார்த்திவ ராவதிற்பைம்
[பொற்கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை யம்பலத்தான் ரௌண்டர்க்
[கேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு வாழ்தல் களிப்
[புடைத்தே.

ஆசிரிய விருத்தம்

3. களிவந் தமுதூறிக் கன்மனத்தை யெல்லாங்
கசியும்படி செய்து கண்டறிவா ரில்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்னூல்
விரிசடையும் வெண்ணீறுஞ் செவ்வான மென்ன
ஒளிவந்த பொன்னிறமுந் தொன்னடமுங் காட்டு
முடையா னுயர்தில்லை யம்பல மொன்றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியா லிச்சை யுரையோமே.

நேரிசையாசிரியப்பா

4. அறிவி லொழுக்கமும் பிறிதுபடு பொய்யுங்
கடும்பிணித் தொகையு மிடும்பை யீட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனுந்
தொன்மீ காம னுய்ப்ப வந்நிலைக்

கருவெனு நெடுநக ரொருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீ னலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந் தலைக்குந்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்ப மென்னு நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனு நெடும்பாய் கீறிப் புணரு
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங்
கலங்குபு கவிழா முன்ன மலங்கன்
மதியுட னணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக !
தொல்லெயி லுடுத்த தில்லை காவல !
வம்பலர் தும்பை யம்பல வாண ! நின்
அருளெனு நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

இணைக்குறளாசிரியப்பா

5. பேசுவாழி பேசுவாழி
ஆசையொடுமயங்கி மாசுறுமனமே
பேசுவாழி பேசுவாழி
கண்டனமறையு முண்டனமலமாம்
பூசினமாசாம் புணர்ந்தனபிரியு
நிறைந்தனகுறையு மூயர்ந்தனபணியும்
பிறந்தனவிறக்கும் பெரியனசிறுக்கும்
ஒன்றொன்றொருவழி நில்லாவன்றியுஞ்
செல்வமொடுபிறந்தோர் தேசொடுதிகழ்ந்தோர்
கல்வியிற்சிறந்தோர் கடுந்திறன்மிகுந்தோர்
கொடையிற்பொலிந்தோர் படையிற்பயின்றோர்
குலத்தினுயர்ந்தோர் நலத்தினின்வந்தோர்
எனையரெக்குலத்தின ரிறந்தோரனையவர்
பேருநின்றில போலுந்தேரின்
நீயுமஃதறிதி யன்றேமாயப்
பேய்த்தேர்போன்று நீப்பருமுறக்கத்துக்
கனவேபோன்று நனவுபெயர்பெற்ற
மாயவாழ்க்கையை மதித்துக்காயத்தைக்

கல்லினும்வலிதாக் கருதிப்பொல்லாத்
தன்மையரிழிவு சார்ந்தனீயு
நன்மையிற்றிரிந்த புன்மையையாதலின்
அழுக்குடைப்புலன்வழி யிழுக்கத்திளைழுகி
வளைவாய்த்தூண்டிலி னுள்ளிரைவிழுங்கும்
பன்மீன்போலவு
மின்னுறுவிளக்கத்து விட்டில்போலவும்
ஆசையாம்பரிசத் தியானைபோலவும்
ஓசையின்விளிந்த புள்ளுப்போலவும்
வீசியமணத்தின் வண்டுபோலவும்
உறுவதுணராச் செறுவுழிச்சேர்ந்தனை
நுண்ணூனூற்றுத் தன்னகப்படுக்கும்
அறிவில்கீடத்து நுந்துழிப்போல
ஆசைச்சங்கிலிப் பாசத்தொடர்ப்பட்(டு)
இடர்கெழுமனத்தினே டியற்றுவதறியாது
குடர்கெழுசிறையறைக் குறங்குபுகிடத்தி
கறவைநினைந்த கன்றெனவிரங்கி
மறவாமனத்து மாசறுமடியார்க்(கு)
அருள்சுரந்தளிக்கு மற்புதக்கூத்தனை
மறையவர்தில்லை மன்றுளாடும்
இறையவனென்கிலை யென்னினைந்தனையே.

வெண்பா

6. வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனை செல்வத் தரசன்றே - மானுகம்
பந்திப்பார் நின்றூடும் பைம்பொன்னி னம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு.

குறிப்புரை

I. பட்டினப்பாலை

கடைச்சங்க காலத்தில் சங்கப்புலவர்களால் அருளிச் செய்யப் பட்ட நூல்களைச் சான்றோர் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப் பல தொகைகளாகத் தொகுத்தனர். அவற்றுள் பத்துப்பாட்டு பழைய இலக்கிய இலக்கண உரைகளில் உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் பிரமாண நூல்களுள் ஒன்றாகும். பத்துப்பாட்டுக்களாவன: திருமுருகாற்றுப்படை, பொரு நராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. பண்டைக்காலத்திருந்த மன்னர் சிலரின் வரலாறு, பண்டைத்தமிழ்மக்களின் பழக்க வழக்கங்கள், போர்முறை, சமயநிலை முதலிய இன்னோரன்ன பிறவும் இவற்றுள் விளங்கும். நூற்றிற்குக் குறையாமலும் ஆயிரத்திற்கு மிகாமலும் உள்ள அடிகளைக்கொண்ட பத்து நீண்ட அகவற்பாட்டுக் களை உடையதால் இந்நூல் 'பத்துப்பாட்டு' என்ற பெயர் பெற்றது. இது பாட்டெனவும் வழங்கும். (தொல் - செய் - சூ - 50 பேராசிரியர்.) இந்நூலுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையுண்டு. இந்நூலின் முதல் பதிப்பை மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் 1889 - ம் ஆண்டில் வெளியிட்டார்கள்.

பட்டினப்பாலை பத்துப்பாட்டில் ஒன்பதாவதாக அமைந் துள்ளது. பட்டினம் - காவிரிப்பூம் பட்டினம். பாலை - தலைவன் தலை வியைப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும். காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்புக்களையும் பாலைத்திணையையும் பற்றிக் கூறுவதால் இந்நூல் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது. பொருள் ஈட்டுதற்கு வேற்று நாடு செல்லத் தொடங்கிய தலைவன் தன் நெஞ்சை நோக்கி "பட்டினம் பெறினும் யான் என் தலைவியைப் பிரிந்து உன்னோடு வாரேன்" என்று செல்லுதலைத் தவிர்ந்து கூறும் கூற்றாக, கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது இப்பாட்டு. இதில் காவிரிப்பூம் பட்டினத்தின் வளங்களும் சோழன் கரிகாற் பெருவளத்தானது வீரமும் அவனது செங்கோலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. பண்டைத்தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் கடல் வாணிகம் முதலியவைகளைப் பற்றியும்

இந்நூலால் நன்கு அறிந்து கொள்ளலாம். இந்நூல் ஆசிரிய அடிகள் இடையிடையே விரவிவரப் பெற்ற 301 அடிகளைக்கொண்ட வஞ்சிப்பாவாகும். இதனால் இது வஞ்சி நெடும்பாட்டு என்றும் கூறப்படும். பட்டினப்பாலையை இயற்றிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் பத்துப்பாட்டில் நான்காவதான பெரும்பாணாற்றுப் படையினையும் இயற்றியுள்ளார். குறுந்தொகை 352 - ம் செய்யுளும் அகநானூறு 167-ம் செய்யுளும் இவரால் இயற்றப்பட்டன. பட்டினப் பாலையைக் கேட்டு மகிழ்ந்து கரிகாற் பெருவளத்தான் கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறுயிரம் பொன் பரிசளித் தான் என்பது

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றுயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்ற கலிங்கத்துப் பரணியால் அறியக்கிடக்கின்றது.

பட்டினப்பாலையின் பொருட் பாகுபாடு

அடிகள்	பொருள்
1–7.	காவிரியின் சிறப்பு.
8–28.	சோழவளநாட்டின் ஊர்ச்சிறப்பு.
29–39.	காவிரிப்பூம் பட்டினத்தில் விளங்கிய படப்பை, தண்டலை, பொய்கை முதலியன.
40–50.	சோறிடும் அட்டிற் சாலைகள்.
51–53.	சாலையும் தவப்பள்ளியும்.
54–58.	காளி கோட்டம்.
59–76.	செம்படவர் குப்பம்.
77–105.	காவிரித்துறைச் சிறப்பு.
106–115.	கடையாமச் சிறப்பு.
116–125.	சுங்கங்கொள்வோர் நிலை.
126–141.	பண்டசாலை முற்றம்.
142–158.	அங்காடித் தெருவு.
159–183.	பலவகைக் கொடிகள்.

184–193. தெருக்களிலுள்ள பொருள்வளம்.

194–205. வேளாண் மக்களின் அருள் ஒழுக்கம்.

206–212. வணிகரின் இயல்பு.

213–217. பலமொழி பேசும் மக்கள்.

218–220. கிளவித் தலைவன் கூற்று.

221–238. கரிகாற் பெருவளத்தான் சிறையினின்று மீண்டு பகைவரை வென்றமை.

239–270. கரிகாலன் பகைவரின் விளைநிலம் முதலிய வற்றைப் பாழ்படுத்தினமை.

271–299. கரிகாற் பெருவளத்தான் வெற்றிச் சிறப்பு.

300–301. இப் பாட்டின் பொருள் முடிபு.

---

1. வெண்மீன்-வெள்ளி என்னும் கோள்.

2. திசை - தனக்குரிய வடதிசை. அது தென் திசையில் சென்றால் மழை பெய்யா தென்பர். "இலங்குகதிர் வெள்ளி தென் புலம் படரினும், அந்தண் காவிரி வந்துகவர்பூட்ட" என்ற புறநானூற்று வரிகள் (புறம் - 35) ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன.

3–4. தற்பாடிய புள் - வானம்பாடி; தன்னென்றது மேகத்தை. தளி - மழைத்துளி. புயல் மாறி - மழை பெய்தலைத் தவிர்ந்து.

6. மலை - குடகுமலை. கடற்காவிரி - கடலிற் கலக்கும் காவிரி.

10. தெறுவின் - தெறுவினால்; தெறு - சுடுதல்; முதல்நிலைத் தொழிற் பெயர்.

11. செறு - வயல்.

12. சாம்பும் - வாடும். புலத்து - நிலத்து.

14. மோடு - பெருவயிறு. முழு குழவி - முற்பட்டகன்று.

15. கூடு - நெற்கூடு.

16. கோள் - குலை.

18. இணர் - குலை. பெண்ணை - பனை.

19. முதல் - அடி பரந்த ; கிழங்கு.

20. நகர் - மனை.

22. உணங்கு உணு - உலருகின்ற நெல்.

23–25 இவ்வரிகளில் அடங்கிய கருத்தினைக் கீழ்க்கண்ட செய்யுளோடு ஒப்பிட்டுக் காண்க.

"பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதகம்
நற்சிரு ரூர்தலின் நங்கை மார்விரீஇ
உற்றவர் கோழிமே லெறிந்த ஒண்குழை
மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே."

(சிவகசிந்தாமணி–89)

23. கொடுங்கால் கனங்குழை - வளைந்த இடத்தையுடைய பொன்னாற் செய்த மகரக்குழை என்னும் காதணி.

27. பாக்கம் - கடற்கரையிலுள்ள ஊர்.

29. கொள்ளை - விலை. சாற்றி - சொல்லி.

30. பஃறி - படகு.

31. பணைநிலை - பந்தியில் நிற்றலையுடைய. முதல் - தறியில்-

32. படப்பை - பக்கம். கலியாணர் - மனச்செருக்குக்குக் காரணமான புதுவருவாய்.

33. புறவின் - புறம்பாகிய. தண்டலை - சோலை.

35. மகவெண்மீன் - மக நட்சத்திரம்.

36. கோட்டம் - கரை.

37. முருகு - மணம். கிடக்கை - பரப்பு.

39. இருகாமத்து இணை ஏரி - இம்மை மறுமை இன்பங்களைக் கொடுத்தற்குரிய இரண்டு ஏரிகள். இவை சோம குண்டம், சூரிய குண்டம் எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்படும். இருகாமத்து இணை ஏரியின் இயல்பைக் கீழ்க்காணும் சிலப்பதிகார வரிகளால் உணர்க.

"கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்..."

[சிலப்பதிகாரம் 9:57–62]

40. போர் கதவு - பலகைகள் தம்மிற் சேர்தலையுடைய கதவு.

41. திரு துஞ்சும் - திருமகள் தங்குகின்ற. காப்பு - மதில்.

43. அட்டில் - சோறிடும் சாலை.

44. சோறு வாக்கிய - சோற்றை வடித்து ஒழுக்கிய.

48. நீறு ஆடிய - புழுதியை மேலே பூசிக் கொண்ட.

49. ஓவம் - சித்திரம்.

51. தகை - உள்ளேயடக்கின.

52. பகடு - பெரிய.

53. தவப்பள்ளி - சமணர்கள் பௌத்தர்களின் தவச்சாலைகள்.

54. அவிர் - விளங்குகின்ற. அங்கி - தீ.

55. மூனை இ - வெறுத்து: சொல்லிசையளபெடை.

56. இரியல்போகி - நிலை கெட்டுப் போய்.

57. கடிநகர் - அச்சம் தரும் காளிகோயில்.

58. தூது உண் - பருக்கைக் கல்லைத் தின்கின்ற. துச்சில் - குடியிருப்பு. சேக்கும் - தங்கும்.

59. முரண்களரி - போர்க்களம்.

62. கருந்தொழில் - வலிய தொழில். கலிமாக்கள் - செருக்கையுடைய பரதவர்.

63. இறவு - இரும்பு மீன். சூடு - சுட்ட இறைச்சி.

64. புழுக்கு - அவித்த இறைச்சி.

65. வறள் அடும்பு - வறண்ட மணலிலே படர்ந்த அடும்பு என்னும் கொடி. மலிந்தும் - சூடியும்.

67. எர்பு - எழுந்து.

68. கோள்மீன் - கிரகங்கள்.

69. குழீஇ - திரண்டு: இன்னிசையளபெடை

70. கலம் - படைக்கலம்.

72. இகல் - மாறுபாடு. மொய்ம்பு - வலிமை.

73. வெரீஇ - அஞ்சி.

74. புகர் - நிறம். போந்தை - பனை.

75. பறழ் - குட்டி.

77. மேழகத்தகர் - ஆட்டுக்கடா. சிவல் - கவுதாரி.

78. கிடுகு - கேடகம். எஃகு - வேல்.

79. நடுகல் - வீரக்கல்.

80. காழ் - காம்பு.

81. நாப்பண் - நடுவில்.

84. வீழ் - விழுது.

85. வெண்கூதாளம் - வெண்டாளி.

86. சுறவின் கோடு - சுறுமீனின் கொம்பு.

87. அணங்கு - தெய்வம்.

86–87 நெய்தல் நிலமக்கள் சுறுவின் கொம்பை நட்டு அதனைத் தெய்வமாக நினைந்து வழிபடல் மரபு.

89. பிணர் - சுரசுரப்பு. பெண்ணை பிழி - பனங்கள்.

90. புன்தலை - சிவந்த மயிரையுடைய தலை.

92. பாய் - பரந்த. இரும் - கரிய.

93. உவவு - பௌர்ணமி நாளில். மடிந்து - மனவெழுச்சி தவிர்ந்து. உண்டாடி - கள்ளையுண்டு விளையாடி.

94. புலவு - புலால் நாற்றம். கானல் - கடற்கரைச் சோலை.

95. கொண்மூ - மேகம்.

97. தேறு - தெளிந்த. புணரி - அலை.

98. கூடல் - சங்கமுகம் : காவிரி கடலொடு கலக்கும் இடம்.

101. அலவன் - நண்டு.

102. பாவை சூழ்ந்தும் - பாவைகளைப் பண்ணியும். பல்பொறி - ஐம்பொறிகளால் நுகரும் பொருள்கள். மருண்டும் - நுகர்ந்து மயங்கியும்.

பரதவர் (90) உவவுமடிந்து (93) மகளிரோடே கூடிக் (91) குடி சாப்பண் (81) மனையிடத்தே சேர்த்திய அணங்கினைற் (87) கோதை யாராய் (85) மலிந்தும் (88) மாந்தியும் (89) ஆடியும் (93) பின்னர்க்

கூடலிலே (98) தீது நீங்க ஆடியும் (99) படிந்தும் (100) ஆட்டியும் உழக்கியும் (101) சூழ்ந்தும் மருண்டும் (102) காதலொடு பகல் விளையாடி (103) என முடிக்க.

104. துறக்கம் - சுவர்க்கம்.

108. மட்டு - கள். மது - காமபானம்.

109. மைந்தர் கண்ணி - கணவர் சூடியமாலை.

112. திமில் - மீன் படகு. குரூஉ - நிறமுள்ள.

113. ஓர்த்தும் - உற்றுக் கேட்டும். நயந்தும் - விரும்பிப் பார்த்தும்.

115. கண் அடைஇய - கண் துயின்ற. அடைஇய: சொல்லிசை அளபெடை. கடைக்கங்குலான் - கடையாமத்தில்.

117. எக்கர் - மணல் மேடு.

119. வேல் - கரை. ஆழி - கடல்.

121. தொழில் மாக்கள் - சுங்கங் கொள்வோர்.

124. வைகல் தொறும் - நாள் தோறும். அசைவு - இளைப்பு.

125. உல்கு செய - சுங்கம் கொள்ள.

133. பெருங்காப்பின் - பண்டசாலையின்கண்ணே.

134. வல் அணங்கினோன் - வலிய வருத்தும் தொழிலையுடையோன், (காவற்காரன்).

136. மதி - மதித்தல்: முதல் நிலைத் தொழிற் பெயர்.

138. சிமையம் - சிகரம். வரை - மூங்கில். கவாஅன் - பக்கமலை: இசை நிறையளபெடை.

139. வரை - மலை: இருமடியாகு பெயர். வருடை - வருடைமான்.

140. கொடுந்தாள் ஞமலி ஏற்றை - வளைந்த காலையுடைய ஆண் நாய்.

142. குறுந்தொடை - குறுகிய படிகளையுடைய. நெடும் படிக்கால் - நீண்ட ஏணி.

143. தகைப்பு - கட்டு.

144. புழை - சிறுவாசல். வாயில் - பெருவாசல். போகு - பெரிய. இடைசழி - நடைபாதை.

146. குறங்கு - தொடை.

148. தூசு - ஒருவகை ஆடை. துகிர் - பவளம்.

151. வளி - காற்று. வளிநுழையும் வாய் - சாளரம்.

152. தாது - தேன். உறைக்கும் - துளிக்கும்.

153. துடுப்பு - கணு. கவி - ஒன்றோடொன்று சேர்ந்த.

155. தாஅய் - பரந்து : இசைநிறை யளபெடை.

156. அகவ - இசைக்க.

158. ஆவணம் - கடைத்தெரு.

159. மை அறு - பிறப்பறுதற்கு.

162. உரு - அழகு.

163. கூம் - உணவுப் பொருள் (நெல்லும் அரிசியும்) மஞ்சிகை - ஒருவகைப் பெட்டி.

164. பணியம் - பண்டம்.

165. வால் - வெள்ளிய.

167. காழ் - கோல். கிடுகு - சட்டம்.

171. உறழ் - வாதம். உரு - அச்சம்.

172. வெளில் - கம்பம். இளக்கும் - அசைக்கும்.

174. தூங்கு - அசையும். நாவாய் - கப்பல். துவன்று - நிறைந்த.

175. மிசை - மேல். கூம்பு - பாய்மரம். நசை - விருப்பம்.

176. தடிந்து - அறுத்து. விடக்கு - இறைச்சி.

178. குவைஇ - மிகப்பரப்பி : சொல்லிசை யளபெடை.

179. புதவு - வாசல்.

180. நறவு - கள். நொடை - விற்றல்.

181. விரைஇ - கலந்து.

182. பதாகை - பெருங்கொடி.

185. பரிபுரவி - செல்லுதலையுடைய குதிரை.

186. காலின் - காற்றால். கறி - மிளகு.

188. குடமலை - பொதியமலை. ஆரம் - சந்தனம்.

189. குணகடல் - கிழக்குக்கடல்.

190. கங்கைவாரி- கங்கையாற்றின்கண் உண்டான பொருள்கள்.

191. ஈழம் - இலங்கை. காழகம் - கடாரம் (பர்மா) ஆக்கம் - நுகரும் பொருள்கள் : ஆகுபெயர்.

193. நனந்தலை - அகன்றஇடம். மறுகு - தெரு.

198. விலைஞர் - இறைச்சி விற்பார். குரம்பை - குடிசை. மா - விலங்கு.

201. பகடு - எருது.

203. அட்டியும் - தானம் செய்தும். பசுபதம்-நெல்லும் பாக்கும்.

206. பகல் - நடுவாணி.

208. வடு - குற்றம்.

211. பகர்ந்து - இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி. வீசும் - கொடுக்கும்.

212. கொண்டி - கொள்ளப்பட்ட மிகுந்த பொருள். துவன்று - நெருங்கின. இருக்கை - குடியிருப்பு.

214. முதுவாய் ஒக்கல் - அறிவு வாய்ந்த சுற்றத்தார்.

215. சாறு - விழா.

217. புலம் பெயர் மாக்கள் - தம் நாட்டை விட்டுப் பெயர்ந்து வந்த மாக்கள்.

218. முட்டா-குறைவுபடாத. பட்டினம் - காவிரிப்பூம் பட்டினம்.

221. கொடுவரிக் குருளை - புலிக்குட்டி.

222. பிணியகத்து - காவலிடம். பீடுகாழ் முற்றி - பெருமைக் குணம் வயிரமேறி முற்றுப் பெற்று.

223. கவிய - இடியும்படி.

225. நண்ணுர் - பகைவர்.

227. உருகெழு - அச்சம் பொருந்தின. தாயம் - தனக்குரிய அரசுரிமை. ஊழின் - முறையாக.

228. செற்றோர் - பகைவர்.

232. வயவர் - வீரர்.

234. தூறு - புதர். இவர் - படர்ந்த. துறு - நெருங்கின. கல் - மலை.

235. உழிஞை - பகைவருடைய மதிலை முற்றுகையிடச் செல்வோர் அணியும் மாலை.

236. பிளிறு - முழங்குகின்ற.

237. மாக்கண் - பெருமையை உடைத்தாகிய இடத்தையுடைய. அகல்அறை - அகன்ற பாசறை.

238. முனைகெட - பகைப்புலம் கெடும்படி. முருக்கி - அழித்து.

239. தலை - இடத்து (பகைவர் அரணிடத்து). தண்பணை எடுப்பி - மருதநிலக் குடிகளை ஓட்டி.

242. காராம் - முதலை.

243. புதவம் - அறுகம்புல். செருந்தி - ஒருவகைக் கோரை.

245. இரலை - ஆண்மான்.

246. கொண்டிமகளிர் - பகைவர்பாலிருந்து கொள்ளப்பட்ட மகளிர்.

247. நந்தா - அவியாத.

249. வம்பலர் - புதியவர். கந்து - தூண், தறி. பொதியில் - அம்பலம்.

253. கோடியர் - கூத்தர்.

254. திரிபுரி - முறுக்குதல் புரிந்த. தீந்தொடை - இனிய கட்டினையுடைய யாழ்.

255. பேஎம் - அச்சம் : இன்னிசையளபெடை.

256. அறுகை - அறுகம்புல். பம்பி - பரவி.

257. ஓரி - கரி. கதிர்ப்ப - ஊளையிட.

258. கூகை - கோட்டான். ஆண்டலை - ஒருவகைப் பறவை.

259. கணம் - கூட்டம். கூளி - ஆண்பேய். கதுப்பு - கூந்தல். இகுத்து - தாழ்த்து.

263. திணை - திண்ணை. : தொகுத்தல் விகாரம்.

265. தொடு தோல் - செருப்பு.

266. எயினர் - வேடர்.

270. மருங்கு அற - (பகையரசரின்) குலம் இன்றுகும்படி.

271. அகழ்க்குவன் - தோண்டுவான்.

274. ஒளியர் - ஒளிநாட்டார். பணிபு - தாழ்ந்து.

275. அருவாளர் - அருவாள நாட்டினர்.

276. குடவர் - குடநாட்டார். கூம்ப - மனவெழுச்சி குறைய.

278. கதுவும் - கைப்பற்றும். மதன் - செருக்கு.

280. செயிர்த்து - கோபித்து.

281. பொதுவர் - இடைக்குலத்தினராய அரசர். வழி - சந்ததி.

282. இருங்கோவேள் - துவரை நகரில் அரசாண்ட வேளிர் மன்னரில் ஒருவன். (புறம். 201. 202.) 'இருங்கோவேள் - ஐம் பெருவேளிர்' என்பர் நச்சினார்க்கினியர்.

284. தொட்டு - தோண்டி.

285. பிறங்கு - பெரிய. உறந்தை போக்கி - உறையூரை விரிவாக அமைத்து.

288. ஞாயில் - எய்துமறையும் சூட்டு ; ஒரு மதிலுறுப்பு. புதை - அம்புக்கட்டு.

289. பெயர் - வஞ்சினம் (சபதம்).

292. எறிப்ப - விளங்க.

293. விசி - இறுகக்கட்டின. பிணி - வார்க்கட்டு.

294. பொருத - ஒலிக்கும். பரேர் பரு ஏர் - மிக்க அழகு.

298. அரிமா - சிங்கம். அணங்குடை - (பகைவர்க்கு) வருத்தத்தைச் செய்யும். துப்பு - வலிமை.

299. திருமாவளவன் - கரிகாற் சோழன். தெவ்வர்க்கு ஒக்கிய - பகையரசரது அழிவுகருதி உயர்த்திய.

300. வெய்ய - கடிய.

301. தட - பெரிய.

நெஞ்சே (220) இவளே நேசமுடன் கொண்டு செல்வோமெனில் கானம் திருமாவளவன் ஓக்கிய (299) வேலினும் வெய்யவாயிரா நின்றன (300); இவள் தோள் (301) அவன் (300) கோலினும் தண்ணிய (301); இவளே யான் பிரியாது உறைதலின், யான் போதற்கு அவை ஆற்றுவாயிராநின்ற; ஆதலால், பட்டினம் பெறினும் (218) வயங்கிழை ஈண்டுப் பிரிந்திருப்ப (219) யான் நின்னுடன் வாரேன், இனி, ஆண்டுப்போய் வாழ்வாயாக (220) என வினை முடிக்க.

தலைவன் தன் நெஞ்சை நோக்கி 'உன்னுடன் வாரேன்' என்றது தன் தலைவியை ஆற்றுவித்துப் பின்பு பிரிதற்கே யன்றித் தன் செலவை நிறுத்தற்கன்று.

"செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்"

என்று தொல்காப்பியர் (கற்பியல் 44) கூறுதல் காண்க.

II

புறநானூறு

புறநானூறு என்பது கடைச்சங்கப் புலவரால் இயற்றப்பட்ட எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். எட்டுத் தொகையாவன: நற்றிணை குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றுள் ஒவ்வொன்றும் புலவர் பலரால் பாடப்பட்டு, பின்னர் அறிஞர்களால் பொருள் அளவு முதலியவற்றை நோக்கித் தொகுக்கப் பட்டமையின் இவை தொகை எனப் பெயர் பெற்றன. அகம் புறம் எனப் பொருள் இருவகையாகும். அவற்றுள் அகமாவது இத்தன்மையதெனப் பிறர்க்கெடுத்துக் கூறப்படாத தாய் உள்ளத்தின் உணர்வினாலே அனுபவிக்கப்படும் இன்பம். அறத்தையும் பொருளையும் பற்றியது புறம். இஃது இத்தன்மையதெனப் பிறர்க்கெடுத்துக் கூறப்படுவதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம். அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறம் என்றது ஆகுபெயர். இந்நூல் புறத்தின் பகுதியாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைப்பொருள் அமைந்த 400 பாக்களை யுடைமையின் புறநானூறு எனப்பெயர் பெற்றது. இது புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கப் பெறும். இந்நூலிலுள்ள பாக்களைப் பாடிய புலவர் அனைவரும் ஒரு காலத்தவரல்லர், ஒரு குலத்தவரல்லர். பாடியவருள் பெண்பாலரும் சிலர் உளர். இந்நூலால் தமிழ் நாட்டுப் பழக்கவொழுக்கங்களும், பண்டைக் காலத்துத் தமிழ் நாட்டில் விளங்கிய சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்களைப் பற்றிய வரலாறுகளும், கடையெழு வள்ளல்கள் கடைச்சங்கப் புலவர் முதலியோர் வரலாறுகளும், பிறவும் நன்கு புலப்படும். இந்நூல் கடைச்சங்க காலத்ததாதலின் இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையுடையது என்பர்.

புறநானூற்றிலுள்ள 87–104 எண்ணுள்ள பாக்கள் ஈண்டுப் பாடப்பகுதியாக வந்துள்ளன. அதியமான் நெடுமான் அஞ்சியின் அரிய பண்பினைப் போற்றி இவை அனைத்தும் ஔவையார் என்ற அருந்தமிழ் மூதாட்டியால் பாடப் பெற்றவை. இப்பாக்களில் ஔவையார் அதியமானின் கொடைச் சிறப்பினையும் வெற்றிச் சிறப்பினையும் பாராட்டிப் பாடியுள்ளார். அதியமான் நெடுமான்

அஞ்சி கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவன் தனக்கு அரிதிற் கிடைத்த நெடுநாள் வாழ்வை நல்கும் நெல்லிக் கனியை ஔவை யாருக்குக் கொடுத்துப் புகழ் பெற்றான்; காஞ்சி நகரத்திலிருந்த தொண்டைமான் என்னும் அரசனிடம் ஔவையாரைத் தூது விடுத்தான்; சேரமானுடைய உறவினனுதலின் பனிமாலையைத் தனக்குரிய மாலையாகக் கொண்டான்; தன்னோடு போர் செய்தற்கு வந்த அரசர் எழுவரை வென்றதனோடு அமையாது கோவலூர் மேல் படையெடுத்துச் சென்று அதனையும் கைப்பற்றினன். இறு தியில் இவன் சேரமான் பெருஞ்சேர லிரும்பொறையுடன் போர் செய்து உயிர் துறந்தான்.

1. ஓம்புமின் - போற்றுமின். தெவ்விர் - பகைவீர். எதிர்ந்து - மாறுபட்டு. எம்முளும்: உம்மை சிறப்பும்மை. பொருநன் - வீரன். எண்தேர் - எட்டுத்தேர். வலித்த - கருதிச் செய்யப்பட்ட. காலன் னோன் - தேர்க்காலை ஒத்தவன்; விரைவும் திண்மையும் தோன்ற, தேர்க்கால் உவமை கூறப்பட்டது.

தும்பைத்திணை:—பகைவரோடு போர் செய்தலை நினைந்து தும்பைப் பூவைச் சூடுதல்.

காஞ்சிமாறம்:—போர் செய்வதற்கெதிர்ந்த இருவகைச் சேனைகளும் தம்முள் போர் செய்து மடியாத வண்ணம் ஒரு வீரன் பாதுகாத்த ஆற்றலினது சிறப்பைச் சொல்லுதல்.

2. கூழை - அணிவகுத்து வரும் பின் படை. தார் - தூசிப் படை. (கொடிப்படை). மழவர் - ஒருவகை வீரர். பெருமகன் - தலைவன். பகட்டு - வலிய. விழவு மேம்பட்ட - களவேள்வி முத லாகிய விழாச் சிறந்த. என்னையை - என் இறைவனே. காணுவுங்கே - காண்பதற்கு முன். கண்டால் அவ்வாறு செய்தல் அருமையாதலின் "காணுவுங்கே" என்றார்.

3. பொருநர் - போர் செய்வோர். அகன்றலை - பரந்த இடம். சிறுவன்மள்ளர் - இளைய வலிய வீரர். பொதுவில் - மன்றில். விசி உறு - (வாரால்) கட்டுதலமைந்த. தண்ணுமை - முழவு. வளிபொரு - காற்று வீசுதலால். தெண்கண் - தெளிந்த ஓசையையுடைய கண்ணீன்கண். போர் - போர்ப்பறை.

4. உடை - முரிந்த. கடுப்ப - போன்ற. அடை - இலை. மல்கு - தழைத்த. குளவி - மலைமல்லிகை. உடலின் - சிறின். மாதிரம் - திசை. அச்சு - அச்சுமரம். சாகாடு - வண்டி. சொல்லிய - போக்கு

வதற்கு : செய்யிய என்ற வாய்பாட்டு வினை யெச்சம். அரிமணல் - புனல் கொழிக்கப்பட்ட மணல். ஞெமர - பரக்கவும். கல் பக - கல் பிளக்கவும். பகடு - கடா. எழுமரம் - கோட்டைக் கதவின் உட் புறத்தே குறுக்காகப் போடும் வலிய மரம். சிலைக்கும் - ஆர வாரிக்கும்.

5. வலம் - வெற்றி. வாய் - தப்பாத. கடந்த - வென்ற. தொடி - வீரவளை. ஆர்கலி - ஆரவாரம். நறவம் - கள். பொலந்தார் - பொன் னால் செய்யப்பட்ட மாலை. நீலமணிமிடற்று ஒருவன் - திருநீலகண்டன்; சிவபெருமான். " சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற் றிருந்தாற்போல நீயும் சாவாதிருத்தல் வேண்டும் என்பதாம்."

" விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ வொருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய் "

(சிலப்பதிகாரம்–12 : செ. 21)

என்ற சிலப்பதிகார வரிகள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன. குறியாது - (பெறுதற்கு அரிது என்று) கருதாமல். ஆதல் - அதனால் பெறும் பயன்.

அதியர் கோமான், அஞ்சி, நெல்லித் தீங்கனி, எமக்கு
ஈத்தாயாதலால், பெரும, நீ நீலமணிமிடற் றொருவன்
போல மன்னுக எனக் கூட்டி வினை முடிவு செய்க.

பாடாண்டிணை :—ஒருவனுடைய கீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்து சொல்லுதல்.

வாழ்த்தியல் :—தலைவனை வாழ்த்துதல்.

6. யாழொடும் கொள்ளா - யாழோசை போல இன்பமும் செய்யா. கடி - காவல். அருளன்மாறு - அருளுதலால்.

இயன்மொழி :—தலைவன் இயல்பைக் கூறுதல்.

" தலைவன் எதிர் சென்று அவன் செய்தியையும்
அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே
ஏற்றிப் புகழ்தல் " என்பர் நச்சினார்க்கினியர்.

(தொல் - புறத்திணை–5.)

7. அமர் கடத்தல் யாவது - போரை வெல்லுதல் இனி எங்கே உள்ளது, வெடிபட்டு - சிதறி. ஓடல் மரீஇய - ஓடிப்போகும்.

விளிந்த - இறந்த. தழீஇ : சொல்லிசையளபெடை. அவர் நீது - அவர் (வாளால் இறவாத) குற்றம். மருங்கு - அவரிடத்தினின்று. அறுமார் - நீக்கும் பொருட்டு. மறம் - ஆண்மை. கந்து - பற்றுக் கோடு. மறவர் - வேந்தர். ஞிமிர் - தேனீ. ததையநூறி - சிதற வெட்டி. விழுப்புண் பட்டமாறு - சிறந்த புண் பட்டபடியால்.

இச் செய்யுளின் 8 - 11 வரிகளை

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்" (புறம் - 74)

என்ற புறநானூறு 74 - ஆம் செய்யுளின் வரிகளோடு ஒப்பிட்டுக் காண்க.

வாகை :—வாகைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரைக் கொன்று ஆரவாரித்தல்.

அரசவாகை :—அரசனது இயல்பை அல்லது வெற்றியைக் கூறுதல்.

8. குறுமாக்கள் - சிறுபிள்ளைகள். கழாஅலின் - கழுவுதல் காரணமாக. கழால் - தொழிற்பெயர். கடாஅம்போல - மதம் பட்ட நிலைமை போல. கடாஅம் என்பது இங்கு ஆகுபெயராய்க் கடாம் உண்டாகிய நிலைமை குறித்து நின்றது.

9. இவ் ஏ - இவைதாம். பீலி - மயிற்பீலி. நோன்காழ் - வலிய காம்பு. வியன்நகர - அகன்ற அரண்மனையிடத்திலுள்ளன. அவ் ஏ - அவைதாம். கோடு நுதி - பக்க வரம்பும் நுனியும். கொல் தொழைக் குற்றில - கொல்லனது வேலை செய்யும் கொட்டிலிடத்தன வாயின. "சிதைந்து கொற்றுறைக் குற்றில" என்பது பழித்தது போலப் புகழ்ந்து கூறப்பட்டது. உண்டாயின் - செல்வமுண்டாயின். பதம் - உணவு. வைநுதி - கூரிய நுனி.

வாண்மங்கலம் :—அரசனுடைய வாளைப் புகழ்வது.

10. பகட்டு - வலிய. என்னை இளையோற்கு - என் தலைவன் மகன் இளையோனுக்கு. தோள் நுணுகி - தோள் மெலிய. மை - செம்மறியாடு. மொசித்த - தின்ற. கைமான் - யானை.

11. உரைஇ - உலாவி. புகன்று - விரும்பி. உடன்றவர் - பகைவர். குறும்பு - குறும்பர். மடை - ஆணி. எழூஉத்தாங்கிய - கணையமரத்தால் தடுக்கப்பட்ட. குறும்பு - அரண். தொடி -

இம்புரிகள். தார் : ஆகுபெயரால் மார்பைக் குறித்தது. பரிதலின் - ஓடுதலால். அசைஇய - வருந்திய. மறு - குருதியான் மறுப் பட்ட. திரைக்கும் - தன்னுள்ளே அடக்கும். கணை - அம்பு. தோலன் - கேடயத்தையுடையவன். செம்மல் - தலைமை. உய்தல் யாவது - பிழைத்தல் எங்கேயுளது? இறும்பூதன்று - வியப்பன்று. ஆடுமின் - போர்செய்ம்மின்.

12. முரண் - மாறுபாடு. மதிற் கதவம் எழுச் செல்லவும் - மதில் வாயில் கதவுகளும் கணைய மரங்களும் புதியனவாக இடுதற்குப் பழையன போக்கவும். களன் - போர்க்களம். கவை முள் - வேலமுள். புழை - காட்டு வாயில். தோல் செறிப்பு இல் - தோலாலாகிய உறையில் இடப்படாத. பிடி - கைப்பிடியாகிய காம்பு. மைந்து - வலிமை. அம்பு ஒடுக்கவும் - அம்பை அம்பராத் தூணியில் அடக்கிக் கொள்ளவும். ஐயவி - வெண்சிறுகடுகு. போற்றார் - பகைவர். படப்பை - பக்கம்.

வஞ்சித்திணை:—அரசன் வஞ்சிப்பூவைத் தலையிலே சூடிப் பகை வருடைய பூமியைக் கைக்கொள்ளக் கருதுதல்.

கொற்றவள்ளை:— அரசனுடைய புகழைச் சொல்லி அவன் பகைவர் நாடு கெடுதற்கு வருந்துதல்.

13. கரும்பு இவண் தந்தும் - கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தில் கொண்டு வந்து தந்தும். இவனது முன்னோர் விண்ணுலகத்திலிருந்து இவ்வுலகத்திற்குக் கரும்பைக் கொண்டு வந்தனர் என்பது,

> “.....அந்தரத்(து)
> அரும்பெற லம்மிழ்த மன்ன
> கரும்பிவட் டந்தோன்” (புறம்-392)

என்ற வரிகளாலும் அறியக்கிடக்கின்றது.

நீரக இருக்கை - கடலுக்கு உட்பட்ட நிலத்தில். ஆழி - சக்கரம். சுகை-பொன். இரும்பனம் புடையல்-பெரிய பனந்தோடாகிய மாலை. புனிற்றுப் புலால் - நாடோறும் புதிய ஈரம் புலராத புலாலையுடைய. எழுபொறி - எழிலாஞ்சணை. இவை ஏழரசர்க்குரியன; அவை - கேழல், மேழி, கலை, ஆளி, வீணை, சிலை, கெண்டை (கலிங்கத்துப் பரணி, கடவுள் வாழ்த்து-18) என்பன. நாட்டத்து எழாஅ - நாடுதலையுடைய ஒரு காலும் நீங்காத. நூறி - அழித்து.

14. வியரே - வியர்வை. வட்கர் போகிய - பகைவர் தொலை தற்கேதுவாகிய. போந்தை - பனை. வெள்தோடு - வெண்மை யான குருத்தோலை. சுரிஇரும்பித்தை - சுருண்ட கரிய மயிர். வரிவயம் - வரிகளையுடைய புலி. அன்னே - ஐயோ. உடற்றி யோர் - சினப்பித்தவர். செறுவர் - பகைவர்.

15. அணிபூண் - அணிகலம். கோடு - கொம்பு. "கோட்டிடை வைத்த கவளம் போன்ற என்றதற்கு, களிறு கோட்டிடை வைத்த கவளத்தைச் சிறிது தாழ்த்ததாயினும் அஃது அதற்குத் தப்பாத வாறு போலப் பரிசில் சிறிது தாழ்ப்பினும் நமக்குத்தருதல் தப்பாது என்பதாம்" ஏமாந்த - ஆசைப்பட்ட. ஆருந்தேமாந்த, வாழ்கவன், என்ற இடங்களில் அகரம் தொக்கன.

பரிசில்கடாநிலை :— 'யாவரும் பரிசில் பெற்றார்; யான் பெற்றி லேன்' எனத் தனது பரிசில் பெறும் வேட்கையைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல்.

16. பெய்தன்று - இடப்பட்டது. அவல் - பள்ளம். மிசை - மேடு. ஆவணது - அவ்விடத்தில் வரும இடையூறு. உமணர் - உப்புவாணிகர். கீழ்மரம் - அச்சுமரம். கவிகை - இடக் கவிந்த கையையுடைய. இருள்யாவணது - (துன்பமாகிய) இருள் எவ்விடத் துள்ளது?

"சேமவச்சன்ன' என்றது ஏற்றிழிவுடையவழி
அச்சுமுறிந்துழிச் சேம வச்சு உதவினாற்போல நீ
காக்கின்ற நாட்டிற்கு, ஓர் இடையூறு உற்றால், அது
நீக்கிக் காத்தற்குரியை என்பதாம்."

"திங்கள் நாணிறை மதியத் தனையை என்றது, ஆறிவும் நிறையும் அருளும் முதலாகிய குணங்களால் அமைந்தாய் என்ற வாறும்."

17. பதலை - ஒருதலை முகமுடையதொரு தோற்கருவி. தூம்பு - துளை. சுரன் - அரிய வழி. சேணோன் அல்லன் - அவன் தூரத்தில் இல்லை. பரிசில் நீட்டிப்பான் அல்லன் என உரைப்பினும் அமையும். மஞ்சு - மேகம். பகைப் புலத்தோன் - பகைவர் தேயத்திருந்தான்; பகைப்புலத்தோன் என்றதன் கருத்து: பகைவர்பால் நிறை கொண்ட பொருளுடையனாதலின், நீ வேண்டிய வெல்லாந்தருதல்

அவனுக்கு எளிது என்பதாம். அஞ்சி - அதியமான். பொழுது இடைப்படா - ஒரு பொழுதும் ஓயாமல். அலத்தற்காலை யாயினும் - உலகம் வறுமையுறுதலையுடைய காலமாயினும் : உம்மை சிறப்பு.

18. நும்மைச்சாற்றுதும் - நுமக்கு நாங்கள் அறிவிப்பேம். நும்மை : உருபுமயக்கம். அட்டு - கொன்று. ஈர்ப்பு உடை - இழுத்தலையுடைய. ஆடு - வெற்றி. இச்செய்யுளின் 3–4 வரிகளைக் கீழ்க் காணும் திருக்குறளோடு ஒப்பிட்டுக் காண்க.

"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற" (இடனறிதல். 50:5)

III

திருக்குறள்

திருக்குறளின் ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். வள்ளுவர் என்ற பெயர் இவருக்குக் குலம்பற்றி வந்ததென்பர் ஒரு சாரார். ஆனால் வள்ளுவர் என்பது தொழில்பற்றி வந்த பெயர் என்றும், வள்ளுவர் அரசர்க்குரிய கருமத்தலைவரென்றும், திரு எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் தாம் எழுதிய "திரு வள்ளுவர்" என்ற நூலில் பல சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார். வள்ளுவர் என்பார் தமிழ் நாட்டுக் குடிகளுள் ஒரு பிரிவினர். இக் குடியினர் அரசனது பட்டத்து யானையின்மேல் முரசினை ஏற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து திருவிழா, திருமணம், படை யெழுச்சி முதலிய நற்செய்திகளை மக்களுக்கு அறிவித்தல் மரபாகும்.

திருவள்ளுவர் திருமயிலையிற் பிறந்தனர் என்பர். இவருடைய திருக்கோயில் ஒன்று திருமயிலையில் இருப்பதை இன்றுங் காண லாம். இவர் மதுரையில் தோன்றி வாழ்ந்தனர் என்று கூறுவாரு முளர். இவரது பிறப்பினைப்பற்றியும் வாழ்க்கையினைப்பற்றியும் வழங்கும் கதைகள் பல உள்ளன. அவை எல்லாவற்றையும் உண்மை எனக் கொள்ளுதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. இவர் வாசுகி என்ற அம்மையாரை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். இவரது காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.

திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரை களுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்ததாகும். சாதி மத வேறுபாடு இன்றி நல்லொழுக்கமுறை திருக்குறளிற் கூறப்பட்டுள் ளதால் இது பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. வீரமாமுனிவர் (Father Beschi) லத்தீன் மொழியிலும், டாக்டர் போப் (Dr. G. U. Pope) ஆங்கில மொழியிலும், டாக்டர் கிரால் (Dr. K. Graul) ஜெர்மன் மொழியிலும் இதனை மொழிபெயர்த் துள்ளனர். இதுவன்றி, இன்னும் பல அறிஞர்கள் இதனைப் பல மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார். இது கருதியே "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் பாரதியார். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி" என்பது திருக்குறளின் பெருமையை விளக்கப் போந்த பழமொழியாகும்.

திருக்குறள் சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்"

என்ற பன்னிரு பாட்டியற் சூத்திரத்தின்படி, கீழ்க்கணக்கு என்பது குறைந்த அடிகளையுடைய ஒருவகைப் பாவால் அறம் பொருள் இன்பங்களைத் தெரிவிப்பதாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன:—நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்ன நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம். ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திருக்குறள், இன்னிலை அல்லது கைந்நிலை என்பனவாம்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளில் அடங்கிய 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறளாக 1330 குறட்பாக்கள் உள்ளன. ஈண்டு வந்துள்ள பாடப்பகுதி பொருட்பாலில் இரண்டாம் பிரிவாகிய அங்கவியலுள் உள்ளது. அரசனது அங்கங்களுள் சிறந்ததான அமைச்சனது இயல்பு பத்து அதிகாரங்களுள் திருவள்ளுவர் கூறுகின்றார்.

1. அமைச்சு

அமைச்சு :—அஃதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

1. கருவி - வினை செய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகள்; அவை சேனையும் பொருளும். செய்கை - செய்யும் வழி; இதில் தொடங்கும் உபாயமும் இடையூறு நீக்கி முடிவு போக்குதலும் அடங்கின. அருவினை - சிறிய முயற்சியான் பெரும்பயன் தருவது. மாண்டது அமைச்சு-வாய்ப்ப எண்ணவல்லவனே அமைச்சனாவான். இச் செய்யுளில் கூறிய சேனை, பொருள், காலம், செய்கை, வினை என்ற ஐந்தையும் வடநூலார் மந்திரிக்கு அங்கம் என்று கூறுவர்.

2. வன்கண் - தொழில் செய்வதில் தளராமை. ஆள்வினை - முயற்சி. ஓடு: ஒடு என்னும் எண்ணிடைச் சொல் நீண்டது.

3. பிரித்தல் - (பகைவர்க்குத் துணையாக இருப்பவரை அவர்களிடமிருந்து பிரிக்க வேண்டுமாகில்) பிரித்தல். பேணிக் கொளல் - (தம்மைச் சேர்ந்தோரைப் பகைவர் பிரிக்காதிருப்பதற்குக் கொடை, இன்சொற்களால்) பாதுகாத்தல். பொருத்தல் - (தம்மிடத்திலிருந்தும் தம்மைச் சார்ந்தவரிடத்திலிருந்தும் பிரிந்தவரை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமாகில்) சேர்த்துக் கொள்ளுதல்.

4. ஒரு தலை ஆ சொல்லல் - (சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்யும் போது இன்னார்க்கு இது செய்யத்தக்கது என்று) துணிவு பிறக்கும் வகை (அரசனுக்குச்) சொல்லுதல்.

5. ஆன்று - (கல்வியால்) நிறைந்து. திறன் - (தொழில் செய்யும்) வகை. தேர்ச்சி துணை - ஆலோசனைக்கு ஏற்ற துணைவன்.

இவை ஐந்து பாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப் பட்டது.

6. மதிநுட்பம் - இயற்கையாகிய நுண்ணறிவு. நூல் - செயற்கையான நூலறிவு. அதிநுட்பம் - மிக்க நுட்பமான சூழ்ச்சி (ஆலோசனை). நூல் என்பது நூல் அறிவையும், அதிநுட்பம் என்பது சூழ்ச்சியையும் காட்டுதலால் ஆகுபெயர்கள். முன்னிற் பவை - மாற்றார் சூழ்ச்சிகள் தம் சூழ்ச்சியால் அழியாது நிற்பவை.

இக்குறளால் அமைச்சரது சிறப்புச் சொல்லப் பட்டது.

7. செயற்கை - தொழில் செய்யவேண்டிய வகை. அறிந்தக் கடைத்தும் - அறிந்த விடத்தும். செயல் - செய்க : வியங்கோள் வினைமுற்று.

8. அறிகொன்று - அறிந்து சொல்லியவரது அறிவையும் அழித்து. அறி : முதனிலைத் தொழிற் பெயர். உழையிருந்தான் - அமைச்சன்.

இவை இரண்டு பாட்டாலும் அவர் செயல் கூறப்பட்டது.

9. பழுது - தீங்கு. தெவ் - பகைவர். எழுபது கோடி என்றது மிகப்பலவாகிய எண்ணைக் காட்டியது.

10. சூழ்ந்தும் - ஆலோசித்து வைத்தாலும். திறம்பாடு இலாதவர் - கூறுபாடிலாதவர் : கூறுபாடாவன :— வந்த வந்த இடையூறுகளுக்கு ஏற்ற ஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும் தாம் இன்னியராதலும் முதலியன.

2. சொல்வன்மை

சொல்வன்மை:—தான் கருதிய தொழில் முடியும் வகையில் அமைச்சியல் நடத்தற்குக் காரணமான சொற்களைச்சொல்ல வல்லவனுதல். மேல் அதிகாரத்தில் "ஒரு தலையாச் சொல்லலும் வல்லது" என்றதனையே ஈண்டு விரித்துரைக்கின்றமையின் இஃது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.

1. யாஉலத்தும் - பிறநூலும் எல்லாவற்றுள்ளும். உள்ளது - அடங்குவது. உள்ளதூஉம்: இன்னிசை யளபெடை.

2. காத்து - தம்மிடத்து நிகழாமல் கவனித்து. ஓம்பல் - பாதுகாக்கக்கடவர்.

"சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே"
(இனியவைநாற்பது - 35)

என்றவரி ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

இவை இரண்டு பாட்டானும் அமைச்சர்க்குச் சொல்வன்மை இன்றியமையாதது என்பது கூறப்பட்டது.

3. கேட்டார் பிணிக்கும் - (சொல்வதை நட்பாய்) ஏற்றுக் கொண்டவரைப் (பின் தம்மை விட்டு நீங்காதபடி) வசப்படுத்தும். தகை - குணங்களை. அவாய் - (மேலும் கொள்ள) விரும்பி. கேளாரும் - பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரும். வேட்ப - (பகைமை யொழிந்து நட்பினை) விரும்பும் வண்ணம்.

பிணிக்கும் குணங்களாவன:—வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல் சிறந்தபயன்தருதல் முதலியன. கேட்டார் என்பதற்கு நூல் கேட்டார் கேளாதார் என உரைப்பாருமுளர்.
இதனால் சொல்லினது இலக்கணம் கூறப்பட்டது.

4. திறன் - தம்முடையவும் கேட்டாருடையவுமான தன்மைகள்.

அத்திறங்களாவன:—குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றுள்வரும் தகுதி வேறுபாடுகள். அத்திறம் அறிந்து சொல்லுதலாவது - குடிப்பிறப்பு முதலிய அவற்றுள் தமக்கும் சொல்லிக்கேட்கும் அவர்க்கும் உள்ளனவாய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து அவ்வம்மரபால் சொல்லுதல். அங்ஙனம் சொல்லுவது உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறனுமிற்று; தம் காரியத்தை முடித்தலால் பொருளாயிற்று.

5. பிறிதோர் சொல் - மாற்றாரது மறுதலைச்சொல். இதில் சொற்பொருட்பின் வருநிலையணி வந்தது.

6. வேட்ப - (பிறர்) விரும்ப. மாட்சியின் - அமைச்சியலுள். கோள் - துணிவு. இக்குறளின் கருத்தைக் கீழ்க்காணும் குறளின் கருத்தோடு ஒப்பிட்டுக் காண்க.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு" (குறள் 424)

இவை மூன்று பாட்டானும் அதனைச் (சொல்லை) சொல்லுமாறு கூறப்பட்டது.

7. சோர்வு - சொல்ல வேண்டியவற்றை மறதியால் விட்டு விடுதல். அஞ்சான் - சபைக்கு அஞ்சாதவனாய்.

8. தொழில் - (சொல்லப்படும்) காரியங்களை. நிரந்து - முறையாக; முன் சொல்லுவனவும் பின் சொல்லுவனவும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் - கேட்டார்க்கு இன்பம் பயத்தல். "சொல்லுதல் வல்லான் நூறாயிரவருள் ஒருவன்" என்ற வடமொழி பற்றிப் 'பெறின்' என்றார். கேடீரும் - ஏற்றுக் கொள்ளும்.

இவை இரண்டு பாட்டானும் அவ்வாற்றாற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

9. காமுறுவர் - விரும்புவர். தேற்றாதவர் - அறியாதார்.

"விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் - ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னானே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து" (ஆசாரக்கோவை - 76)

என்ற செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

10. இணர் ஊழ்த்தும் - பூங்கொத்தில் மலர்ந்தும். செவ்வி பெற மலர்ந்துவைத்தும் நாற்றம் இல்லாத பூ சூடப்படாதவாறு போல, நூலைக்கற்றுவைத்தும் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப் படார் என்பதாம். இது தொழிலுவமை.

இவை இரண்டு பாட்டானும் சொல்வன்மை இல்லாதாரின் இழிவு கூறப்பட்டது.

3. வினைத்தூய்மை

வினைத்தூய்மை:–அதாவது அமைச்சன் செய்யப்படும் தொழில்கள், பொருள் ஒன்றினைத் தருதலோடு அறத்தையும் புகழையும் கொடுத்து நன்மையுடையனவாய் இருத்தல். சொல் மாத்திரமன்றி செயலும் நன்றாக வேண்டும் என்கின்றமையின் இது சொல் வன்மையின்பின் வைக்கப்பட்டது.

1. ஆக்கம் - செல்வம். வினைநலம் - செயலின் நன்மை.

வேண்டிய எல்லாம் என்றது:— இம்மைக்கண் அறம் பொருள் இன்பம் முதலாயவற்றையும் மறுமைக்கண் தான் விரும்பிய பதவிகளையும்.

இதனால் வினைத் தூய்மையது சிறப்புக்கூறப்பட்டது.

2. ஒருவுதல் - ஒழிதல். நன்றி - (மறுமைக்கண்) அறம்.

3. ஓஒதல் - தவிர்தல். ஒளி - தாம் இருக்கும் காலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப்படல். மாழ்கும் - கெடுதற்குக்காரண மான. ஆதும் - 'மேலாகக் கடவேம்'. என்னுமவர் - என்று கருதுபவர்.

4. நடுக்கற்ற - கலக்கமற்ற. காட்சியவர் - தெளிந்த அறி வினையுடையவர். நடுக்கு : நடுங்கு என்ற முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

5. எற்று - (யான் செய்தது) எத்தன்மைத்து. அன்ன - அவ்வாறான இரங்கல்களை. இக்குறளோடு

"ஊருெரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டின்
ஆறென்ப ஆய்ந்தவர் கோள்" (குறள் 662)

என்னும் குறளை ஒப்பிடுக.

6. "மிக்க முதியவராகிய இருமுது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயனபலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொதுவிதி, பொருள் நூல்வழி ஒழுகுதலும் அரசர் தொழிற்கு உரியராதலும் நன்கு மதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கு எய்தாமை பற்றி இவ்வாறு கூறினார்."

இக் குறளோடு

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்" (குறள் 961)

என்னும் குறளையும் அதற்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரையையும் ஒப்பிடுக.

இவை ஐந்து பாட்டானும் (2 - 6) பாவமும் பழியும் பயக்கும் வினைசெய்யற்க என்பது கூறப்பட்டது.

7. பழிமலிந்து - (சான்றோரல்லாதார் தீய தொழில்களைச் செய்து அதனால்) பழியைத் தம்மேற் கொண்டு. கழி - மிக்க: உரிச்சொல். நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையின பழியைச் சான்றோர் மேற்கொள்ளாராதலின் 'சான்றோர் கழிநல்குரவேதலர்' என்றார்.

8. கடிந்த - விலக்கப்பட்ட செயல்களை. கடிந்து ஒரார் - தாமும் விலக்கி நீக்காது. பீழை - துன்பம். முடிதல் - கருதிய பொருள் தருதல்.

9. அழக்கொண்ட - (பிறர்) இரங்கக் கொண்ட. நற்பாலவை - நல்ல தொழிலால் வந்த பொருள்கள். பின் - பின்னர் (மறுமையும் இதிலடங்கிற்று).

10. சலத்தால் - தீயவினைகளால். ஏமார்த்தல் - பாதுகாப்பைச் செய்தல். இரீஇயற்று - (அதற்குப்) பாதுகாவலைச் செய்வதனோடு ஒக்கும். ஏமம்+ஆர்த்தல் என்பது ஏமார்த்தல் என்றாயிற்று.

4. வினைத்திட்பம்

வினைத்திட்பம்:—அஃதாவது அத்தூய வினைமுடிப்பானுக்கு வேண்டுவதாகிய மனத்திண்மை.

1. திட்பம் - வலிமை. மற்றைய - ஒழிந்தன; அவை படை அரண், நட்பு முதலிய திண்மைகள்.

இதனால் வினைத்திட்பம் இன்னதென்பது கூறப்பட்டது.

2. ஊறு - பழுதுபடும் வினைகளை. ஓரால் - செய்யாமையும். உற்றபின் - (செய்யும் தொழில் தெய்வத்தால்) பழுதுபட்டதனால், ஒல்காமை - (அதற்குத்) தளராமை.

3. கடை - முடிவில். கொட்க - (செய்த தொழில்) வெளிப் படும்படி. செய்தக்கது - முன்னெல்லாம் மறைத்துச் செய்வது.

மறைத்துச் செய்வதாவது - தானே முதலிய அங்கம் ஐந்தும் குறித்துத் தான் எண்ணியது பிறர் அறியாமலும், பகைவரைப் பற்றித் தான் அறிந்திருப்பதையும், தன்னுடைய இங்கிதம் வடிவு செயல் சொற்களால் அப்பகைவர் உய்த்துணராமலும் அடக்கிச் செய்தல்.

எற்ரு விழுமம் - நீங்காத துன்பம்; அவையாவன :—பகைவர் முன் அறிந்து அவ்வினையை விலக்குதலும் செய்வானே விலக்கு தலும் செய்தலினுல் வருவன.

இவை (2 - 3) இரண்டு பாட்டாலும் வினைத்திட்பத்தின் பகுதி கூறப்பட்டது.

4. சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயலுவதாகலின் "யார்க்கும் எளிய" என்ரூர்.

இதனுன் அதன் அருமை கூறப்பட்டது.

5. வீறு எய்தி - (எண்ணத்தினுல்) சிறப்பு அடைந்து. மாண்டார் - மாட்சிமைப்பட்ட அமைச்சர். ஊறு - அடைதல். வேந்தன்கண் ஊறு எய்தலாவது - எடுத்த வினை வினைத்திட் பத்தால் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அரசனிடத்து அடைதல்.

இதனுன் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

6. திண்ணியர் ஆக - (செய்கையில்) வலிமையுடையவராக. எண்ணிய : பலவின்பாற் பெயர்.

இதனுல் அஃதுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது.

7. உருவு - வடிவின் சிறுமை.

இதனுன் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

8. கண்ட - செய்வதாகத் துணிந்த. துளங்காது - அசைத லின்றி; திட்பத்தோடு. தூக்கம் கடிந்து - காலம் நீட்டித்தலை ஒழித்து.

9. துணிவாற்றி - திட்பமுடையவராய்; கலங்காமையுடைய வராய்.

இவை இரண்டு பாட்டானும் (8 - 9) அவர் வினை செய்யுமாறு கூறப்பட்டது.

10. எனைத்திட்பம் - மற்றைத்திட்பங்கள்; அவை படை, அரண், நட்பு, முதலியவற்றின் திட்பங்கள்.

இதனால் வினைத்திட்பம் இல்லாதார் இழிவு கூறப்பட்டது.

5. வினை செயல் வகை

வினை செயல்வகை:—அத்திட்பமுடைய அமைச்சன் அவ்வினையைச் செய்யும் திறம்.

1. சூழ்ச்சி முடிவு - ஆலோசனைக்கு எல்லை. தாழ்ச்சியுள் - கால நீட்டிப்பிலே.

2. தூங்கிச் செயற் பால - காலம் நீட்டித்துச் செய்யும் தொழில்களில். தூங்குக - காலத்தை நீட்டிக்கக்கடவர்.

இவை இரண்டு பாட்டாலும் பொதுவகையால் வினைசெய்யும் திறம் கூறப்பட்டது.

3. ஒல்லும்வாய் எல்லாம் - இயலுமிடத்தெல்லாம்; அதாவது பகையில் தான் வலியனைய காலம். வினை - போர் செய்தல். ஒல்லாக்கால் - (போர்த்தொழில்) இயலாவிடின். செல்லும்வாய் - மற்ற மூன்று உபாயத்துள்ளும் (சாம, பேத, தானம்) அத்தொழில் முடிவதோர் உபாயம்.

இதனுன் வலியான் ஒப்பான் மெலியான் என நிலை மூவகைத் தென்பதும் அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

4. எச்சம் - குறைவு. தெறும் - கெடுக்கும்.

இதனுன் வலியான் செய்யும் திறம் கூறப்பட்டது.

5. பொருள் - அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன் சேனையும் பகைவன் சேனையும். காலம் - தனக்கு ஆம் காலமும் மாற்றார்க்கு ஆகும் காலமும். வினை - தான் வல்ல வினையும், அவர் வல்ல வினையும். இடம் - தான் வெல்லும் இடமும் அவர் வெல்லும் இடமும். இருள் தீர - மயக்கம் நீங்க. செயல் : வியங்கோள் வினைமுற்று.

6. முடிவு - தொழில் முடிதற்கான முயற்சி : முடிதற்குக் காரணமான முயற்சியைக் காட்டுவதால் காரியவாகுபெயர். படுபயன் - பெரும்பயன்.

7. உள் அறிவான் - உண்மை நிலையை முன்பு அறிந்து நடத்தியவன். உள்ளம் - கருத்தினை. கொளல் - தான் அறிதல்.

இவை மூன்று பாட்டாலும் (5 - 7) ஒப்பான் செய்யும் திறம் சொல்லப்பட்டது.

8. வினை - (வேறொரு) தொழிலை. நனைகவுள் - (மதத்தால்) நனைந்த கபோலத்தினையுடைய. யாத்தற்று - கட்டியதனோடு ஒக்கும். இக்குறளில் வந்துள்ள உவமை கீழ்க்காணும் செய்யுளிலும் வந்துள்ளது காண்க.

"ஆண முடைய அறிவினர் தங்நலம்
மானும் அறிவின் அவரைத் தலைப்படுத்தல்
மானமர் கண்ணுய்! மறங்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று." (பழமொழி - 223)

9. ஒட்டாரை - தன் பகைவரோடு சேராதவரை. ஒட்டிக் கொளல் - தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதல். இவ்விரண்டு செயல் களையும் பகைவர்க்குத் தன் மெலிவு புலனுவதன் முன்னே செய்க என்பார் 'விரைந்தது' என்றார்.

10. உறை சிறியார் - ஆளும் இடம் சிறிதாகவுள்ள அமைச்சர். உள் - தமக்கு உட்பட்ட சேனை முதலியன. குறைபெறின் - அந் நிலைக்கு வேண்டுவதாகிய சமாதானம் கூடுமானால்.

இவை மூன்று பாட்டானும் (8 - 10) மெலியான் செய்யும் திறம் கூறப்பட்டது.

6. தூது

தூது :—பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்துச் செல் வாரது தன்மை. இத்தூதுவர் தாம் வகுத்துக் கூறுவோர் எனவும் கூறியது கூறுவோர் எனவும் இருவகைப்படுவர்.

1. அன்புடைமை - தன் சுற்றத்தாரிடத்து அன்புடைய வனாய் இருத்தல். வேந்து அவாம் பண்பு - அரசர் விரும்பும் பண்புகள்; அவற்றை 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்ற அதிகாரத்தில் கண்டு கொள்க.

2. அன்பு - தம் அரசரிடத்து அன்பு. ஆராய்ந்த சொல் வன்மை - அன்புடைமை அறிவுடைமை என்ற இவைகளுக்குத் தகுந்த சொற்களை ஆராய்ந்து சொல்லுகின்ற சொல்லுதல் வல்லமை.

இவை இரண்டு பாட்டானும் இருவகைத் தூதர்க்கும் பொது இலக்கணம் சொல்லப்பட்டது.

3. வேலாருள் - வேலினையுடைய வேற்றரசரிடத்து. நூலாருள் - நீதி நூல்களை அறிந்த மந்திரிகளுள்.

4. உருவு - கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவு. செறிவு - கூட்டம். இம் மூன்றும் ஒருவனிடத்தில் கூடுதல் அரிதாகலின் "செறிவுடையான்" என்றார்.

5. தொக - தொகுத்து. தூவாத - கொடிய சொற்களை. நன்றிபயப்பது - (தன் அரசனுக்கு) நன்மையைச் செய்பவனை. தொகச் சொல்லியும் நகச் சொல்லியும் என்பவற்றிலுள்ள எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன.

6. செலச் சொல்லி - தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங் கொளச் சொல்லி. கண் அஞ்சான் - (அப் பகை வேந்தர் கோபித்துப் பார்த்தால்) அப் பார்வைக்கு அஞ்சாது.

> "மாண்டமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
> ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—பூண்டமைந்த
> காலமறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
> ஞாலம் அறிந்த புகழ்" (ஏலாதி –26)

என்ற செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

7. கடன் அறிந்து - (வேற்றரசரிடத்துத் தான் செய்யும்) முறைமை அறிந்து; செய்யும் முறைமையாவது - அவர் நிலையும், தன் அரசன் நிலையும், தன் நிலையும் சீர்தூக்கி அவற்றிற்குப் பொருந்தக் காணும் முறைமையும் சொல்லு முறைமையும் முதலாயின.

இவை ஐந்து பாட்டாலும் (3–7) தான் வகுத்துக் கூறும் தூதினது இலக்கணம் கூறப்பட்டது.

8. தூய்மை - (பொருள் காமங்களால்) தூயனாதல். துணைமை - (தனக்கு அவ்வேற்றரசரது மந்திரிகள்) துணையாம் தன்மை. வழியுரைப்பான் - (தன்னரசன் வார்த்தையை அவன்) சொல்லியவாறே (வேற்றரசர்க்குச் சென்று) சொல்லுவான். மூன்றின் : மூன்றனோடு இன், ஒடு என்ற பொருளில் வந்தது; வேற்றுமை மயக்கம்.

9. விடுமாற்றம் - (தன் அரசன் சொல்லி) விட்ட வார்த்தை. வடு மாற்றம் - தாழ்வான சொல். வன்கணவன் - திண்மையையுடையவன்.

10. எஞ்சாது - அஞ்சி ஒழியாது. உறுதி - மேன்மை. பயப்பது - (வேற்றரசரிடத்துச்) சொல்லுபவனே.

இவை மூன்று பாட்டாலும் (8–10) கூறியது கூறுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.

7. மன்னரைச் சேர்ந்தொழுகல்

மன்னரைச் சேர்ந்தொழுகல்:—அமைச்சர் அரசரைப் பொருந்தி நடக்கும் விதமாம். இது "வேந்தவாம் பண்புடைமை" என்று முன்னே வேண்டப்பட்டமையால், தூதின் பின் வைக்கப்பட்டது.

1. இகல் வேந்தர் - மாறுபடுதலையுடைய அரசர்; அரசர் விரைவில் கோபிக்கும் தன்மையர் என்பது தோன்ற "இகல் வேந்தர்" என்றார். தீக்காய்வார் போல்: தொழிலுவமை.

2. மன்னர் விழைப - அரசர் விரும்புவனவற்றை; அவை நுகரப்படுவன, அலங்கரித்துக் கொள்வன, மேன்மை முதலியன.

3. அரியவை - பொறுத்தற்கு அரிய பிழைகள். போற்றல் - தம்மிடத்து வராமல் காக்கக்கடவர். கடுத்தபின் - (அப் பிழைகளைக் கேட்டு அரசர்) சந்தேகித்தால்.

இவை மூன்று பாட்டாலும் மன்னரைச் சேர்ந்து ஒழுகல் பொது வகையாற் சொல்லப்பட்டது.

4. செவிச் சொல் - ஒருவன் காதில் சொல்லுதல். சொல்: முதனிலைத் தொழிற் பெயர். அவித்து - நீக்கி.

5. ஓரார் - கேளாது. விட்டக்கால் - (அவனே) சொல்லியக்கால். இக் குறளோடு

"..... பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டிடுக மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால்" (ஆசாரக் கோவை-34)

என்ற வரிகளை ஒப்பிட்டுக் காண்க.

6. வேட்ப - (அரசன் மனம்) விரும்புமாறு.

7. வினை இல - பயனில்லாதவற்றை.

இவை நான்கு பாட்டாலும் அது (மன்னரைச் சேர்ந்தொழுகல்) சிறப்பு வகையால் சொல்லப்பட்டது.

8. இகழார் - (அரசனை) அவமதியாது. ஒளி - உறங்கும் போதும் உலகம் காக்கின்ற அவருடைய கடவுள் தன்மை.

"உறங்கு மாயினும் மன்னவன் தன்னெளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்"

என்ற சிந்தாமணி அடிகளை நோக்குக.

9. கொளப்பட்டேம் - (யாம்) அரசனால் நன்கு மதிக்கப் பட்டோம். துளக்கற்ற - நிலை பெற்ற. காட்சியவர் - அறிவினை யுடையவர்.

10. கெழுதகைமை - உரிமை. இக்குறளின் கருத்தினைக் கீழ்க் காணும் செய்யுள் விளக்குதல் காண்க.

"பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
இழைமை பிறிதொன்றும் கொள்ளார் வெகுளின்மன்
காதன்மை உண்டே இறைமாண்டார்க்(கு) ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு"
(நீதிநெறிவிளக்கம்–47).

8. குறிப்பறிதல்

குறிப்பறிதல்:—அரசர் நினைத்த காரியத்தை அவர் சொல்லாமல் அறிதல்.

1. குறிப்பு - (அரசனால் குறித்த) செயல்; குறிப்பு என்னும் தொழிற்பெயர் குறித்த செயலை உணர்த்துவதால் தொழிலாகு பெயராம். மாருநீர் - வற்றுதநீர்; கடல். வையக்கு - உலகுக்கு: வையத்திற்கு என்பதன் விகாரம்.

2. அகத்தது - மனத்தில் நிகழ்வதனை.

3. குறிப்பில் குறிப்பு உணர்வார் - தம் உள்ளத்தில் நிகழும் நினைவின் தன்மையைத் தெரிந்து அதனைக் கருவியாகக் கொண்டு பிறர் எண்ணங்களைத் தெரிந்து கொள்பவர். உறுப்பினுள் - அரசர்தம்) உறுப்புக்களுள்; பொருள், நாடு, யானை, குதிரை முதலிய புறத்துறுப்புக்கள்.

இவை மூன்று பாட்டாலும் குறிப்பு அறிவாரது சிறப்புச் சொல்லப்பட்டது.

4. கொள்வார் - அறியவல்லவர். ஏனை - ஏனையர்; குறிப் பறிய மாட்டாதார். வேறு - (அறிவால்) வேறுவர்.

5. முதலிலுள்ள குறிப்பு என்னும் தொழிற்பெயர் குறித்த விஷயத்தைக் காணவல்ல காட்சி அறிவினை உணர்த்துதலின் தொழிலாகு பெயர்.

இவை இரண்டு பாட்டாலும் குறிப்பு அறியாரது இழிவு சொல்லப்பட்டது.

6. அடுத்தது - (தன்னை) அடுத்த பொருளினது நிறத்தை: ஆகுபெயர். கடுத்தது - மிக்கது; தொழிற் பெயர்.

7. முதுக் குறைந்தது - அறிவு மிக்கது. காயினும் - வெறுத்த லாலும். தான் - முகம்.

"மகனுரைக்கும் தந்தை நலத்தை ஒருத்தன்
முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை"

என்பது நான்மணிக்கடிகை.

8. உணர்வார் - தீர்ப்பார்.

இவை மூன்று பாட்டாலும் (6-8) குறிப்பறிதற்குச் சாதனம் முகம் என்பது சொல்லப்பட்டது.

9. கேண்மை - நட்பு. கண்ணின் வகைமை - நோக்க வேறு பாடு; அவையாவன-வெறுத்த நோக்கமும், உவந்த நோக்கமும் ஆம்.

10. நுண்ணியம் என்பார் - யாம் நுண்ணிய அறிவுடையேம் என்றிருக்கும் அமைச்சர். காணுங்கால் - ஆராயுமிடத்து.

இவை இரண்டு பாட்டாலும் நுண்ணிய கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

9. அவையறிதல்

அவையறிதல்:—அரசனோடு இருந்த சபையினது இயல்பை அறி தல். அமைச்சர் காரியம் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலே அல்லாமல் இதுவும் வேண்டுதலால் இது அதன்பின் வைக்கப் பட்டது.

1. சொல்லின் தொகை - சொல்லின் கூட்டம்; எனவே செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின. அவை என்றது இங்கு அவையினது அளவினை. அவ்வளவு மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூன்று வகைப்படும்.

2. இடை - செவ்வி; கேட்டற்கண் விருப்பமுடைமை. நன் குணர்ந்து - வழுப்படாமல் மிகவும் தெளிந்து. வழு - சொற் குற்றம் பொருட் குற்றம்.

இவை இரண்டு பாட்டாலும் ஒன்று சொல்லுங்கால் அவை அறிந்தே சொல்லவேண்டும் என்பது கூறப்பட்டது.

3. அவை அறியார் - அவையினது அளவை அறியாமல். அறியார்: முற்றெச்சம். வல்லதூஉம் - (கற்று) வல்ல கலையும்.

இதனால் சபையை அறியாதவிடத்து வரும் குற்றம் சொல்லப் பட்டது.

4. ஒளியார் - அறிவால் பெரியார்; ஒளியார் என்றது தம் மினும் மிக்காரையும் ஒத்தாரையும். வெளியார் - அறிவில்லாதவர். வான் சுதை வண்ணம் - வெள்ளிய சுண்ணும்பு நிறம்.

சபை அளவறிந்தார் செய்யும் திறம் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டது. மேல் அதனை விரித்துக் கூறுவார்.

5. முதுவருள் - (தம்மினும்) மிக்காரது சபையினிடத்து. முந்து - (அவரின்) முற்பட்டு. கிளவா - சொல்லாத. செறிவு - அடக்கம்.

இதனால் மிக்காரது சபையினிடத்துச் செய்யும் வகை சொல் லப்பட்டது.

6. ஆற்றின் - நல்வழியினின்றும். வியன் புலம் - விரிந்த நூற்பொருள். இழுக்கு - சொற் குற்றப்படுதல்.

இதனால் அச்சபையில் தவறியவிடத்து உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.

7. கசடு - குற்றம். சொல் தெரிதல் - சொற்களை ஆராய்தல். அகத்து - சபையில்.

8. உணர்வது உடையார் - (பிறர் உணர்த்தாது) தாமே உணர்ந்து கொள்ள வல்லவர். வளர்வதன் பாத்தி - வளரும் பயிர் நின்ற பாத்தி. சொரிந்தற்று - சொரிந்தாற் போலும்.

இவை இரண்டு பாட்டாலும் ஒத்தார் அவையில் எவ்வாறும் சொல்லுக என்பது கூறப்பட்டது.

9. புல்லவை-கல்வியறிவில்லாதவர் கூட்டம். பொச்சாந்தும் - மறந்தும். நன்கு - நல்லபொருளை. செல - (அந் நல்லவர்) மனம் கொள்ள.

"அருளின் அறம்உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர் - பொருளல்லா
ஏழை யதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு" (நாலடியார் - 321)

என்ற செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

10. அங்கணம் - பரிசுத்தமில்லாத முற்றம் (சாக்கடை). உக்க - சிந்திய. தம் கணத்தரல்லார் - தம் இனத்தவரல்லார். கோட்டி - சபையில். கொளல் - ஒன்றையும் சொல்லாதிருக்கக் கடவர்.

இவை இரண்டு பாட்டாலும் தாழ்ந்தோர் சபையினிடத்து ஒரு வழியும் சொல்லற்க என்பது சொல்லப்பட்டது.

10. அவையஞ்சாமை

அவையஞ்சாமை :—சொல்லுதற்குரிய சபையினை அறிந்து சொல்லும்போது அச்சபைக்கு அஞ்சாமை.

1. வகைஅறிந்து - (கற்றுவல்லார் சபை, கற்றுவல்லர் அல்லாதார் சபை என்னும் சபையின்) வகையினை அறிந்து. வல் அவை - கற்றுவல்லாரது சபையில். வாய் சோரார் - (அச்சத்தால்) பிழைபடச் சொல்லார்.

2. கற்ற - தாம் கற்ற வித்தைகளை. செலச் சொல்லுவார் - கேட்போர் மனங்கொள்ளச் சொல்ல வல்லார்.

3. பகையகத்து - போர்க்களத்து. எளியர் - (உலகத்துப்) பலர். அஞ்சாதவர் - அஞ்சாமல் சொல்ல வல்லவர்.

இவை மூன்று பாட்டாலும் சபைக்கு அஞ்சாதவரது சிறப்புச் சொல்லப்பட்டது.

4. தாம்கற்ற - தாம்கற்ற வித்தைகளினும். மிக்க - மிக்க பொருளை. மிக்காருள் - அதிகமாகக் கற்றவரிடத்து. கொளல் - அறிந்து கொள்ளக் கடவர்.

இதனால் அவையஞ்சாமையினது ஒரு சார் பயன் சொல்லப் பட்டது.

5. ஆற்றின் - (சொல் இலக்கண) வழியாலே. அளவு - அளவை நூல். மாற்றம் - விடை.

இதனால் அதன் (அவையஞ்சாமையின்) காரணம் சொல்லப் பட்டது.

6. வன்கண்ணர் - அஞ்சாதவர். நுண் அவை - நுண்ணிய அறிவினையுடையோர் சபை.

7. ஒள்வாள் - கூர்மையான வாள். இக் குறளின் கருத்தை

"அவையஞ்சி மெய்வி திர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லு-நவையஞ்சி
சாத்துண்ணுர் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று" (நீதிநெறிவிளக்கம்–6)

என்ற செய்யுளின் கருத்தோடு ஒப்பிடுக.

8. பல்லவை - பல நூல்களை. பயமிலர் - பயன்படுதலிலர்.

9. கடை - கீழானவர். அறிந்தும் - நூல்களின் பயனை அறிந்திருந்தும். கற்றறிந்து நல்லார் அவை அஞ்சுவார் அக்கல்வி அறிவுகளால் தாமும் பயன் அடையாமல் பிறரை அடைவிப்பதும் செய்யாமல் கல்வியைக் கற்றதால் ஆய துன்பமே அடைந்து நிற்றலால் (அவரைக்) 'கல்லாதவரிற் கடை' என உலகம் பழிக்கும் என்பதாம்.

10. உளர் எனினும் - உயிர் வாழ்கின்றாராயினும். இல்லார் - இறந்தவர். களன் - அவைக்களம். ஈண்டுக் களன் என்றது அங்கிருந்தவரை.

இவை ஐந்து பாட்டாலும் சபைக்கு அஞ்சுவோரது இழிவு சொல்லப்பட்டது.

IV

சிலப்பதிகாரம் - காட்சிக்காதை

சிலப்பதிகாரம் என்பது தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இது சேர முனிவராகிய இளங்கோ வடிகளால் இயற்றப்பட்டது. கண்ணகி வரலாற்றைக் கூறப் புகுந்த இளங்கோவடிகள் புகார், மதுரை, வஞ்சியாகிய தமிழ் வேந்தர் மூவர் தலைநகரங்களினும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாவதும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துதலும், ஊழ்வினை தானே உருவெடுத்து வந்து செய்தோனை உண்பித்தலுமாகிய மூன்று உயரிய குறிக்கோள்களையும் நிலம்பு காரணமாகப் புலப்படுத்துவதால் இந்நூல் சிலப்பதிகாரம் என்ற பெயர் பெற்றது. இந்நூல் முத்தமிழும் விரவப் பெற்றதாதலின் இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்றும், நாடக உறுப்புக்களைக் கொண்டுள்ளதாதலின் நாடகக் காப்பியம் என்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப் பெற்றதாதலின் உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் பெயர் பெறும். இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும் 30 காதைகளையும் உடையது. இக்காண்டங்களுள் ஆசிரியர் உவகைச் சுவையைப் புகார்க் காண்டத்தும், அவலச்சுவையை மதுரைக் காண்டத்தும், வீரச் சுவையை வஞ்சிக் காண்டத்தும் அமைத்து விளக்கியுள்ளார். பாடப்பகுதியாக வந்துள்ள 'காட்சிக் காதை' வஞ்சிக் காண்டத்துள் இரண்டாவது காதையாகும். இந்நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. அவற்றுள் முதலாவது அரும்பதவுரை. இது நூல் முழுவதுக்கும் அமைந்துள்ளது. இரண்டாவது உரை மிக விரிவாக உள்ளது. இதனை இயற்றியவர் அடியார்க்குநல்லார். முதல் 19 காதைகளுக்கு மட்டும் இவ்வுரை கிடைத்துள்ளது. காலஞ் சென்ற திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் சிலப்பதிகாரம் முழுவதிற்கும் தெளிவான உரையெழுதி வெளிப் படுத்தியுள்ளார்.

சிலப்பதிகாரத்தினை இயற்றிய இளங்கோவடிகள் வஞ்சி நகரத்தில் அரசு செலுத்திய சேரலாதனது புதல்வர்; செங்குட்டு வனுக்குத் தம்பி; இளமையிலேயே துறவு பூண்டவராதலின்

அடிகள் எனப்பட்டார். இவர் ஜைன சமயத்தைச் சார்ந்தவர்; சைவர் எனக் கூறுவாருமுளர். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

காட்சிக்காதை :—சேர வேந்தனாகிய செங்குட்டுவன் மலைவளம் காண்பதற்கு விரும்பித் தன் தேவியாகிய வேண்மாளுடன் சேனைகள் சூழ வஞ்சிமாநகரினின்றும் புறப்பட்டுச் சென்று பேராற்றங்கரையிலுள்ள மணற்குன்றில் தங்கி இருந்தான். அப்போது அக்குன்றில் வாழும் குறவர்கள் குறிஞ்சிப் பொருள்களாகிய காணிக்கைகளோடும் சென்று செங்குட்டுவனைக் கண்டு கண்ணகி விமானமேறிச் சென்ற வியப்பு மிக்க நிகழ்ச்சியினை அவனிடம் தெரிவித்தனர். அரசனோடு அங்கு வந்திருந்த சாத்தனார் மதுரையில் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி பாண்டியன் முன் வழக்குரைத்து வென்று மதுரையை எரித்ததும் முதலான செய்திகளை விரித்துரைத்துக் குறவர்கள் கண்ட நங்கை அக்கண்ணகியே என்று விளக்கிக் கூறினர். செங்குட்டுவன் தன் தேவியின் வேண்டுகோளால் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியைப் பிரதிட்டை செய்து வழிபடுவதற்கு இமயமலையிலிருந்து கற்கால் கொள்ளக்கருதித் தான் இமயத்திற்குப் புறப்படுவதனை நகரின்கண் பறைஅறைவித்தான். இதுவே இக்காதையின் சுருக்கமாகும்.

காட்சி—கற்கொள்ள மனத்தால் நிச்சயித்தல்

1–2. மாநீர் - கருமையான நீரையுடைய கடல். கடம்பு எறிந்து-கடம்பமரத்தினை வெட்டி; கடலிடை ஒரு தீவிலிருந்த பகைவரது காவல் மரமான கடம்ப மரத்தைச் சேர வேந்தருள் ஒருவன் வெட்டிய வர்லாறு ஈண்டுக் குறிக்கப்பட்டுள்ளது.

"வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமையத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து" (அகம்–127)

என்ற அகநானூற்று அடிகளை ஈண்டு ஒப்பிடுக.

மலை வில் - போர் செய்யும் வில்: வினைத்தொகை.

3. வானவர் தோன்றல்.....கோதை - சேரர்குலத்தில் தோன்றிய செங்குட்டுவன். கோதை - சேரர்குடிப் பொதுப் பெயர்.

4. இலவந்தி வெள்ளி மாடம் - நீராவியின் நடுவிலுள்ள வெள்ளியால் அமைந்த வேனிற்கால மாளிகை.

5. இளங்கோ வேண்மாள் - செங்குட்டுவனது தேவி.

6. துஞ்சா - ஒலித்தல் ஒயாத.

7. மஞ்சு - மேகம்.

8. பைந்தொடி - பசிய வளையல் அணிந்த தேவி; பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஆயம் - ஆய மகளிர் கூட்டம். ஈண்டி - ஈண்ட எனத் திரிக்க.

9. வஞ்சி - வஞ்சிமாநகர்.

11. வானவன் - இந்திரன்.

13. துருத்தி - ஆற்றிடைக் குறை.

14. அரங்கு - நாடகசாலை. பள்ளி - மண்டபம்.

16. களிறு - ஐராவதம் என்ற யானை.

17. தூங்கு இணர் - தொங்கும் பூங்கொத்துக்கள்.

18. நாகம் - சுரபுன்னைமரம். திலகம் - மஞ்சாடி மரம். நறுங் காழ் ஆரம் - நல்ல வயிரம் கொண்ட சந்தன மரம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112027
MADRAS

20. மதுகரம், ஞிமிறு - வண்டின வகை.

22. விலங்கிய - குறுக்கிட்டுச் சென்ற. பேரியாறு - ஓர் ஆறு.

24. கொடிச்சியர் - குறத்தியர்.

25. செவ்வேள் வேலன் - முருகன் வேடம் தரித்த வேலன். பாணி - பாட்டு.

26. தினைக்குறு வள்ளை - தினையைக் குற்றுவாரது உலக்கைப் பாட்டு. புனத்து எழுவிளி - தினைப்புனத்தில் கிளி முதலியவற்றை ஓட்டுதற்குப் பாடும் பாட்டின் ஓசை.

27. நறவுக்கண் - தேன் கூடு.

29. புகர்முகம் - புள்ளிகளை முகத்திலுடைய யானை.

30. கலிகெழு - தழைத்தல் பொருந்திய. மீமிசைச் சேணோன் - மரத்தின் மீது கட்டிய பரண்மேலுள்ளோன்.

31. பயம்பு - யானையைப் பிடிப்பதற்கு வெட்டிய குழி.

32. அரவம் - ஒலி.

33. அளந்து கடையறியா - அளவிட முடியாத.

35. செவ்வி - காணும் சமயம்.

39. சந்தனக் குறை - சந்தனக் கட்டை.

40. அஞ்சனம் - நீலக்கல். அரிதாரம் - கஸ்தூரி.

41. கறிவல்லி - மிளகு கொடி.

42. கூவை நூறு - கூவைக் கிழங்கின் மா. கொழுங் கொடிக் கவலை - கொழுவிய கவலைக் கொடியின் கிழங்கு.

44. பைங்கொடிப் படலை - பச்சிலைமாலை.

45. காயம் - வெள்ளுள்ளி.

48. ஆளி அணங்கு - ஆளிக் குட்டி. அரியின் குருளை - சிங்கக் குட்டி.

49. வாள் வரிப் பறழ் - புலிக்குட்டி. கரிக்களபம் - யானைக் கன்று.

50. குடா அடி உளியம் - வளைந்த அடியை உடைய கரடிக் குட்டி.

51. வருடை - வருடைமான். மான் மறி - மான் குட்டி.

52. காசறைக்கரு - கஸ்தூரிக்குட்டி. நகுலம் - கீரிப்பிள்ளை.

53. மிலிமஞ்ஞை - ஆண்மயில்; நாவியின் பிள்ளை - புனுகு பூனையின் குட்டி.

55. மலைமிசை மாக்கள் - குன்றக் குறவர்.

57. வேங்கை - வேங்கை மரம்.

59. மன்னெடும் - கணவனேடும்.

64. மண் - நிலமகள்.

65. மயக்கம் - வியப்பு.

66. தண்டமிழ் ஆசான் சாத்தன் - இனிய தமிழாசிரியரான கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்; 'மணிமேகலை' ஆசிரியர். உரைக்கும்: செய்யும் என்ற முற்று ஆண்பாலுக்கு வந்தது.

67. உற்றதை எல்லாம் - ஒருமைப் பன்மை மயக்கம்.

69. தீவினைச் சிலம்பு - தீவினை பலிப்பதற்குக் காரணமாகிய சிலம்பு. "சூழ்வினைச் சிலம்பு காரணமாக" (பதிகம் - 58) என்றமை காண்க.

71. வலம் - வெற்றி. மன்னவன் - பாண்டியன்.

72. சேயிழை - கண்ணகி.

73. தேவி - பாண்டியன் தேவி.

74. வஞ்சினம் - சபதம்.

75. அம்சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடையாய். பெயர்ந்து - நீங்கி.

78. அரிமான் ஏந்திய ஆமளி - சிங்கம் சுமந்த அரசு கட்டில்.

79. திரு வீழ் மார்பன் - இலக்குமி விரும்பும் மார்பையுடைய பாண்டியன். 78 - 79 இவ்வரிகளில் அடங்கிய கருத்தினை ஆசிரியர் முன்னரும் கூறியது, கீழ்க்காணும் வரிகளிற் காண்க.

" அரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே "

(வழக்குரை காதை - 22 - 23)

80. தயங்கு இணர்க்கோதை - விளங்கும் பூங்கொத்து அணிந்த கூந்தலையுடைய கண்ணகி.

82. தலைத்தாள் நெடுமொழி - (கண்ணகி) பெருமிதத்துடன் கூறிய வஞ்சினம்.

83. கடுந்துயர் - அரசன் இறந்தமை.

86. பெருங்கோப் பெண்டும் : உம்மை இறந்தது தழுவியது.

88. இறை : முன்னிலைக்கண் வந்தது.

93. தென்னர் கோமான் தீத்திறம் - பாண்டியனது கொடுந் தன்மை.

94. வருந்தினன் : முற்றெச்சம்.

96. செம்மையின் இகந்த சொல் - செங்கோன்முறை வழுவு தலால் உண்டான பழிச்சொல்.

97. உயிர் பதிப் பெயர்த்தமை - உயிரை உடம்பினின்றும் நீக்கினமை.

101. பிழைஉயிர் எய்தின் - உயிர்பிழை எய்தின் என மாறுக. பிழை - துன்பம்.

102. குடி புரவுண்டு - குடிகளைக் காத்தலை மேற்கொண்டு.

103. மன்பதை - மக்கள் கூட்டம். தொழுதகவு - போற்றுந் தகுதி.

100 - 104 :— இவ்வரிகளில் வந்துள்ள கருத்துக்களைக் கீழ்க் காணும் வரிகளோடு ஒப்பிடுக.

" மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம் "

(புறம் - 35)

" அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான் "

(பெரியபுராணம் - திருவாரூர்-44)

105. துன்னிய துன்பம் - (கண்ணகிக்கு) உற்ற துன்பத்தினை.

106. நன்னூற் புலவன் - சாத்தனார்.

108. செயிர் - கோபம்.

109. நன்னுதல் : முன்னிலைப்பெயர், அண்மைவிளி.

112. மாதர் - பாண்டியன் தேவி.

116. நூலறி புலவர் - அமைச்சர்.

117. ஒற்கா மரபு - அழியாத்தன்மை.

117-121. இமயத்துக் கற்கால் கொள்ளின் கங்கைப்பேர் யாற்றினும், பொதியிற் கற்கால் கொள்ளின் காவிரிப்புனலினும் நீர்ப்படை செய்தல் தகவுடைத்து என எதிர்நிரனிறையாக இயைத்துப் பொருள் கொள்க.

121. நீர்ப்படை - நீரிற் படுத்துத் தூய்மை செய்தல்.

127. முத்தீ - ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி.

128. இருபிறப்பாளர் - தேவ இருடிகள்.

129. மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்கடவுள் - இளமைப் பருவத்திலேயே அறிவு மாட்சிமைப்பட்ட மிக்க சிறப்பினையுடைய கற்புத் தெய்வமான கண்ணகி.

130. எழுதல் - படிமம் செய்தல்.

131. வழிநின்று பயவா - நிலைத்து நின்று பயன்படாத.

132. கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி - இளமை கழிந்து அறிவு மிக்கோர் இளமை கழியாத அறிவில்லாத மாக்கட்குக் காட்டிய முதுகாஞ்சியும் (தொல் - புறத்திணை-24 சூ. உரை). காட்டிய காஞ்சி - உணர்த்திய யாக்கை நிலையாமையாகிய காஞ்சி.

133. முதிராச்செல்வி - இளஞ்செல்வியாகிய உமையாள்.

134. மதிமுடிக்கு அளித்த - பிறைசூடிய இறைவனுக்குக் கொடுத்த. மகட்பாற்காஞ்சி - ஒருவன் மற்றொருவனுக்குத் தன் மகளைக் கொடுக்க மறுத்தலைக்கூறும் துறை. ஈண்டு உமையை

மகள் தருக என்று வந்த பிறருக்கு மறுத்து இறைவனுக்கு அளித்தானுதலால் இதுவும் மகட்பாற்காஞ்சியின் பாற்படும்.

135. தென்திசை என்றன் வஞ்சி - தென் திசையிலிருந்து செல்லுகின்ற எனது வஞ்சி. வஞ்சி - பகைவர்மேற் செல்லுதல்.

136. எதிரூன்றல் - எதிர்த்து நின்ற. காஞ்சி - எதிர்த்துநிற்றல்.

135–136. இவ்வரிகள் "வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே" என்னும் பன்னிருபடலத்தைத் தழுவியுள்ளன.

139. வேங்கையொடு தொடுத்த - வேங்கை மலரால் தொடுத்த. ஓடு : உருபுமயக்கம். விறல் மாலை - வெற்றிமாலை.

141. குடைநிலை வஞ்சி - குடைநாட்கொள்ளும் வஞ்சி; நாட்கொள்ளுதலாவது - வினைவயிற் செல்லும் அரசர் நல்லோரையில் புறப்படுதற்குத் தடையுறின் தம் குடைமையாவது வாட்படையையாவது செல்லும் திசை நோக்கி அந் நற்காலத்தில் செல்ல விடுதல்.

(தொல்காப்பியம் - புறத்திணையியல் - சூ. 13)

கொற்ற வஞ்சி - அரசனது வெற்றிச்சிறப்புக்குரிய வஞ்சி.

142. மாராயம் - ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதல் (தொல் - புறத்திணை–சூ. 8 நச்சினார்க்கினியர் உரை.)

144. பின்ரு - தாழாத. பெருஞ் சோற்று வஞ்சி - அரசன் போர் வீரர்களுடன் இருந்து பெருஞ் சோற்றுத்திரளை அவர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டலாகிய வஞ்சி. (தொல்-புறம்–சூ. 8)

145. கொற்றவள்ளை - வேந்தனது வென்றிச் சிறப்பினால் பகைவர் நாடு அழிவதற்கு இரங்கிப் பாடும் பாட்டு. (தொல்-புறம்-சூ.8)

146. வடுகர் போகிய - இடையே முரிதல் இல்லாத. வான் பனந்தோட்டுடன் - சிறந்த பனம் பூ மாலையொடு.

147. புனைகைச் சேஎன் - மேற்கோளையுடைய சேஎன். பூங்கை புட்கையென விகாரமாயிற்று. பொலியச் சூட்டி - மேற் கூறிய புறத்திணை மாலைகளோடு சூட்டி.

148. பூவா வஞ்சி - வஞ்சிநகர். வஞ்சிநகரைப் பூவா வஞ்சி என்றது வெளிப்படை.

"பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி"

(சிலப்பதிகாரம் - கால்கோட் காதை வரி - 50)

என இளங்கோவடிகள் பிறிதோர் இடத்தில் கூறியுள்ளது காண்க.

151. வில்லவன் கோதை - செங்குட்டுவன் அமைச்சன். 152 - ம் வரிமுதல் 172 - ம் வரி வரை இவ்வமைச்சன் கூற்று.

153–154. கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கமற்கொடி பகைபுறத்துத் தந்தனர் ஆயினும் - கொங்கரது போர்க்களத்துப் பொருதவிடத்தே புலிக்கொடியும் மீனக்கொடியும் நினக்குத் தந்து ஓடினராயினும்.

155. திகைமுக வேழத்தின் - திக்கு யானைகளின்.

156–158. கொங்கணர் முதலாயினர் தமிழ் நாட்டைச் சார்ந்து வடக்கின்கண்ணுள்ள ஒவ்வொரு நாட்டின் பகுதியை ஆண்ட சிற்றரசர்கள்.

158. வண்தமிழ் மயக்கத்து - வளவிய தமிழ்ப்படை கைகலந்த போரில். தமிழ் - தமிழ்ப்படை. "தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானம்" (புறம் - 19) என்ற இடத்தும் 'தமிழ்' இப் பொருட்டாதல் காண்க.

159. கடமலை வேட்டம் - (பகைவரது) யானைப்படையை வேட்டை யாடியது.

161. எங்கோமகள் - செங்குட்டுவன் தாய். ஆட்டிய அந்நாள் - நீராட்டிய அக்காலத்தில்.

165. இமிழ்கடல் வேலியை - ஒலிக்கின்ற கடலினை வேலியாகக் கொண்ட இந்நில முழுவதையும். ஆக்கிய - ஆக்கும் பொருட்டு: செய்யிய என்னும் எச்சம்.

166. இது நீ கருதினையாயின் - இமயத்துக் கற்கொணர்தலாகிய இதனை நீ எண்ணின். ஏற்பவர் - எதிர்ப்பவர்.

172. மண் - இலச்சினை. தலைஎற்ற வரைக - தம்மிடத்துக் கொண்ட ஓலைகளை எழுதுக. செங்குட்டுவன் சோழ பாண்டியர்களை வென்றமையால் அவர்களது புலி, கயல் இலச்சினையையும் ஓலையில் இடச்சொன்னன்.

173. நாவல் அம் தண் பொழில் - நாவலந்தீவு ; பொழில் என்பது உலகம், தீவு என்ற பொருளில் வந்தது. நண்ணுர் - பகைவர். ஒற்று - ஒற்றர்கள்.

174. கடைமுகம் - நகரின் வாயில்.

175. வம்பு அணி - கச்சை அணிந்த.

176. செவி படுக்கும் - செவிக்கு அறிவிக்கும். தகைமைய - தன்மையையுடையன.

178. நிறை அருந்தானை - (பகைமேற் செல்லும்போது) நிறுத்தற்கரிய சேனை. நேர்ந்து - உடன்பட்டு.

179. கூடார் வஞ்சிக் கூட்டு - பகைவர்கள் தம்மீது படை யெடுத்து வரும் அரசர்க்கு அளித்த திறைப்பொருள்.

180. வாடாவஞ்சி - வஞ்சிமாநகர் : இது வெளிப்படை.

181. வாழ்க என்றது முதல் பறையறைகின்ருர் சொல்.

187. கடல் கடம்பு எறிந்த வார்த்தை - இக்காதையின் முதல் வரியின் உரையினைக் காண்க.

188. விடர் - குகையினை உடைய இமயமலையில் : ஆகுபெயர். சிலைபொறித்த வியன்பெரு வார்த்தை - வில்லினைப் பொறித்த பெருஞ்செயலைக் குறித்த உரை.

186-189. எதிரேற்றுக் காணீராயின் கடலுட்புக்கும் மலையிலே ஏறியும உறைமின் என்பார் இரண்டு வார்த்தையும் கேட்டு வாழுமின் என்ருர்.

190. தோள் துணை துறக்கும் துறவு - மனைவியரை வெறுக்கும் தவம்.

191-192. திருமேனி சேனைமுகம் என இணைக்க. திருமேனி யாகிய சேனை. அரசர்க்குச் சேனைகள் சிறந்தனவாகலின் அவற்றைத் 'திருமேனி' என்ருர்.

193. இகல் இறையானை எருத்தம் - மாறுபடும் பட்டத்து யானையின் பிடர்.

194. பறை - பறை ஒசை : ஆகுபெயர்.

V

சீவகசிந்தாமணி

நாமகள் இலம்பகம்

இந்நூல் செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இது பழைய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள பிரமாண நூல்களுள் ஒன்று. வடமொழியில் வான்மீகி ராமாயணம் போல் எல்லா வருணனைகளும் தன்பால் அமையப் பெற்றிருப்பதாலும் பிற்காலத் தெழுந்த தமிழ்க் காவியங்கள் பலவற்றிற்கும் வழிகாட்டியாய் இருந்து வருவதாலும் இது பெருங்காவியம் என்று கருதப் படுகின்றது.

சிந்தாமணி என்பது இதற்குத் தன்மையால் வந்த பெயர் என்பர் நன்னூல் உரையாசிரியர். வானுலகத்திலுள்ள சிந்தித்த பொருள்களைத் தரவல்ல சிந்தாமணி போல சைன சமயத்தினர் வேண்டிய பொருள்களை வேண்டியாங்கு இந்நூலால் பெறுவர் என்பதனால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

சீவகன் பிறந்தவுடன் அவன் தாயாகிய விசயை சிந்தாமணியே என்றதாலும் அக்காட்டில் அவன் தும்மியபோது ஒரு குரல் 'சீவ' என்றதாலும் 'சீவக சிந்தாமணி' என்று அவனுக்குப் பெயராயிற்று. "சிந்தாமணி யேய்ந்த...செல்வன்" (2370) எனவும், "சிந்தாமணியின் சரிதஞ் சிதர்ந்தேன்" (3144) எனவும் வருதலாலும், இது உணரப் படும். அவன் சரிதம் கூறுதலால் இந்நூலும் அப் பெயர் பெற்றது. "முந்நீர் வலம்புரி" (3143) என்று தொடங்கும் செய்யுளில் இந்நூல் சிந்தாமணி என்னும் பெயரால் வழங்கப் படுகிறது.

இதற்கு மணநூல் என்ற பெயரும் வழங்குகிறது. இந்நூற் பகுதிகளாகிய 13 இலம்பகங்களுள் 3, 4, 5, 6, 7, 8, 9, 12-ம் இலம் பகங்களில் சீவகன் காந்தருவதத்தை முதலிய எண்மரைத் தனித் தனியே மணந்துகொண்ட செய்திகளும் 2-ம் இலம்பகத்தில் தன் தோழனை பதுமுகனுக்குக் கோவிந்தையை மணஞ்செய்வித்த வரலாறும் கூறப்பட்டிருத்தலாலும் 1, 10, 11, 13-ம் இலம்பகங் களினும், சீவகன், நாமகள் மண்மகள் பூமகள் முத்திமகள் என்னு

மிவர்களை மணந்து கொண்டதாகவே உருவகித்திருத்தலாலும் இந்நூல் அப்பெயர் பெற்றது. இது, சிவகன் என்னும் அரசன் பிறந்தது முதல் மூத்தி பெற்றது இறுதியாகவுள்ள வரலாறுகளைக் கூறுகின்றது.

இந்நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் ஜைன முனிவராவர். இவரைப் பற்றி இந்நூலின் உரையாசிரியர் "சோழ குலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி" என்று குறித்திருத்தலால் இவர் சோழ குலத்தில் பிறந்தவர் என்பது புலனுகின்றது. நரி விருத்தம் என்பதும் இவரால் இயற்றப்பட்டது என்பர். சீவக சிந்தாமணிக்கு முதல் நூல் இன்னதென்று விளங்கவில்லை. ஆனல் வடமொழியில் க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்தரசம்பு என்னும் நூல்கள் சீவகன் சரிதத்தைக் கூறுகின்றன. இந்நூல் கி. பி. 10-ம் நூற்றாண்டில் எழுந்ததாகும் என்பர் ஆராய்ச்சியாளர். ஆனல் சிலர் இந்நூல் கி. பி. 5-ம் நூற் றாண்டினதாகலாம் எனவும் கருதுகின்றனர்.

சிந்தாமணியில் நாமகள் இலம்பகம் முதல் முத்தி இலம்பகம் ஈருகப் பதின்மூன்று இலம்பகங்கள் உள்ளன. சீவகனுக்குக் கல்வி புகட்டத் தொடங்கிய செயல் நாமகளை அவனேடு சேர்த்ததாக உருவகித்துக் கூறப்படுதலால் இப்பகுதி நாமகள் இலம்பகம் எனப் பெயர் பெற்றது. இந் நூலுக்கு நச்சினர்க்கினியர் ஓர் அரிய உரை இயற்றியுள்ளார்.

1. காய் மாண்ட - காயாகி முற்றிய. தெங்கின் பழம் - தேங்காய் நெற்று. கமுகின் நெற்றி - பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள. பூமாண்ட - பொலிவு மிக்க. தீந்தேன் தொடை - இனிய தேன் போலும் சுரையுடைய குலை. வருக்கை - பலாப்பழம். போழ்ந்து - பிளந்து. தேமாங்கனி - இனிய மாம்பழம்.

இசையால் திசை போயது - (தன்) புகழால் திக்குகளெங்கும் சென்ற சிறப்புடையது அந்நாடு என்க.

2. தேன் தலைத் துவலை - தேனைத் தலையிலே துளிகளாக வுடைய. பைந்துகில் - பசுமை நிறமுடைய ஆடை. பூத்து - தன்னிடத்தே கொண்டு. நான்றன - தொங்குவனவாகிய. நகுகதிர் - விளங்கும் ஒளியினையுடைய. கான்று - தோற்றுவித்து.

3. திருமாமகள் கண்களுக்கு இடனும் கடிமார்பன் - அழகுத் தெய்வமாகிய திருமகள் இடைவிடாது காணுதற்கு இடனும்

விளங்கும் விளக்கம் அமைந்த மார்பினையுடைய சச்சந்தன். வண்கையால் - (வரையாது வழங்கும்) வண்மையுடைய தன் கையினாலே. கலி - வறுமை. வை - கூரிய. தேர்த்தொகை மாற்றினான் - தேர்க் கூட்டத்தை அழித்தான்.

4. கோதை - மாலை. நித்திலம் - முத்து. ஓத நீர் உலகு - கடலால் சூழப்பட்ட இவ்வுலகிற்கு. ஒப்ப - எல்லார்க்கும் ஒப்ப. நிழற்றலால் - நிழலிச் செய்தலால். காதலால் - அம்மன்னன் மேல் வைத்த பேரன்பினால்.

5. திரு மாதில மன்னன் - சச்சந்தன். தண்ணளியால் - குளிர்ந்த அருளுடைமையான். தருமன் - அறக்கடவுளைப் போல்வான். உயிர் மாற்றலின் - போரின்கண் பகைவருடைய உயிரை மாற்றும் திறனுடைமையால். அருமையால் - அரிய கலைப் பயிற்சியின் நிறைவால். வாமன் - அருகதேவனை யொப்பான். கணை ஐந்து உடைத்திருமகன் - மலர் அம்புகள் ஐந்தினையுடைய காமனைப் போல்வான்.

6. ஏனை மன்னர் - அயல் மன்னராகிய பகைவர். வேல் தானை மன்னரில் - வேற்படையினையுடைய தங்குல அரசர்களுள். இமில் ஏறு - நுசுப்பையுடைய காளை. தேனை மாரி - தேன்மழை; தேனை :- ஐ; சாரியை. வானம் தோய் புகழால் - சுவர்க்கத்தை பரவிய புகழாலே. மலிவு எய்தினன் - மிகுதல் பெற்றான்.

7. செல்வற்கு - சச்சந்தனுக்கு. இன்னணம் - இத்தன்மை யாக. சேறலின் - (நல்வினை) நடத்தலாலே. மல்லல் நீர் - வளப்பம் பொருந்திய தன்மையையுடைய. விதையத்து அரசன் மகள் - விதேக நாட்டினையாளும் அரசன் மகள். அல்லி சேர் - (தாமரை மலரின்) அகவிதழ் பொருந்திய. அணங்கிற்கு - தெய்வமாகிய இலக்குமிக்கு. அணங்கு அன்னவள் - (உவமை சொல்லுதற்குரிய) வேறொரு திருமகளைப்போன்று விளங்குபவள். இப்பாட்டில் திருவிற்கு ஒரு திரு அன்னவள் என உவமை கூறியது இல்பொருளுவமையாம்.

8. வார் மதம் - ஒழுகுகின்ற மதநீர். களிற்று உழவன் - யானையினையுடைய உழவன்; விதேக நாட்டு அரசன்; யானையாகிய எருது கொண்டு போராகிய உழவைச் செய்ய வல்லவன் மன்னனுதலின் அவனைக் 'களிற்றுழவன்' என்றார். விண்டு அலர் கோதைக்கு - கட்டவிழ்ந்து மலரும் மாலையினையுடையாளாகிய அவளுக்கு. விசயை என்ப - விசயை எனப் பெயர் கூறுவர்.

பெண்டிர் தம் பெருநலம் கடந்து பெற்றபேர் - (அப் பெயர்) மகளிருடைய அழகினையெல்லாம் இவள் வென்று மேம்பட்டமையாற் பெற்ற காரணப் பெயராம் என்க.

9. மருமகன் வலந்ததும் - தம் மருகனாகிய சச்சந்தன் கூறியதனையும். மங்கை - தன் மகளாகிய விசயை. ஆக்கமும் - அன்பினைச் சச்சந்தன்பால் அமைத்துக் கொள்ளுதலையும். அருமதிச் சூழ்ச்சியின் அமைச்சர் - அரிய அறிவாராய்ச்சியினையுடைய மந்திரிகள். கண்டு - இவ்வெல்லாவற்றையும் தந்தையும், தாயும் எண்ணிப் பார்த்து. கலத்தற் பான்மையின் - மணந்து கொள்ளும் மைத்துன கோத்திரத்தார் ஆதலாலும். பிணை அன்னாள் - பெண்மானை யொத்தாளாகிய விசயையை. பெருமகன் சேர்த்தினர் - அரசர்க்கரசனாகிய சச்சந்தனுக்கு மணஞ்செய்தனர்.

10. களிறு அன்னான் - சச்சந்தன். அமைச்சர் தம்முள் வெளிறிலாக் கேள்வியர்னை - தன் மந்திரிகளில் திண்ணிய அறிவு வாய்ந்த நூற் கேள்வியினையுடைய நிமித்திகனை. வேறுகொண்டு - தனக்கு வேறாகக் கொண்டு. ஒளிறு வாள் தடக்கையானுக்கு - ஒளி வீசும் வாட்படையினைத் தாங்கிய கையினையுடைய கட்டியங்காரனுக்கு. வேந்தன் பெருஞ் சிறப்பு இயற்றி - அரசன் முடியும் குடையும் நீங்கலாகவுள்ள ஏனை அரசியல் வரிசைகளைச் செய்து. பிளிறுவார் முரசின் சாற்றி - (அதனை நாடறிய) முழங்கும் முரசினால் பறையறைவித்துச் சொல்லி. மதச் செருக்கால் அங்குசத்துக்கு அடங்காத யானை போலக் காமக் களிப்பால் தன் அமைச்சர் மொழியைக் கடந்து நடத்தல் கருதிச் சச்சந்தனைக் 'களிறு அன்னான்' என ஆசிரியர் குறிப்பிட்டார்.

11. அசைவு இலாப் புரவி வெள்ளம் - ஓய்வு இல்லாத குதிரைச்சேனை. அரிஞ்சயன், விசையின் பாட்டன். வசையிலாள், வந்தாள், அமிர்தம் அன்னாள், விசையை என இயைத்துரைக்க. வரத்தின் வந்தாள் - (யான் முற்பிறப்பில் செய்த தவத்தின்) வரமாக வந்தாள். இலங்கு பூண் மார்ப - ஒளி விளங்கும் அணியினை யணிந்த மார்பனே!

12. அண்ணல் - சச்சந்தன். அடு - கொல்லும். எருத்து - பிடரி. தவிசு - ஆசனம். ஞமலி - நாய். தோளான் - சச்சந்தன். "வேறேர் ஊர்தி கூறுது ஞமலியைக் கூறினர், அவன் அயிராது தருதற்கு" என்பர் நச்சினார்க்கினியர்.

13. இற்று எனை - இத்தன்மைத்து என்று. பருதி - சூரியன். மார்பன் - சச்சந்தன். சொல்லும் - பகையென்று சொல்லப்படும். துன்னலர் - பகைவர். தொலைத்த - கொன்ற. கழிபெருங் காதலாள் கண் - மிக்க பேரன்பினையுடைய விசயை யிடத்து. வையம் காக்கும் படுநுகம் பூண்பல் - உலகத்தைக் காக்கும் பெரிய பாரத்தை யான் மேற்கொள்வேன்.

14. வலம்புரி பொறித்த வண்கை - சங்க ரேகை பதிந்த வளவிய கையினையுடைய. மதவலி - மிக்க வலியினையுடையனாகிய சச்சந்தன். உலம் - திரண்ட கல். கொற்றம் - அரசுரிமை. நிலந்திரு நீங்கும் - நிலமும் செல்வமும் நின்னைவிட்டு நீங்கும். ஓர் - இதனை உணர்வாயாக என்று. நெறியிற் சொன்னன் - நீதியாற் கூறினன்.

15. முனைத்திறம் முருக்கி - போர் முனையிற் பகைவர் செயலைக் கெடுத்து. மொய் அமர் - நெருங்கிய போர். மனத்துக்கு இன்னா என்னும் தொடர், 'மனக்கினா' என அத்துச்சாரியை தொக்கு வந்தது.

16. குறிப்பு - கருத்து. கருமம் - செய்தற்குரிய காரியம். அருளிக் கேண்மோ - கேட்டருள்க. நாவலர் - அமைச்சர். பூ அலர் கொடி அன்னார் - பூக்கள் மலர்ந்த கொடியினை யொத்த மகளிர். கழுமி - மயங்கிக் கலந்து. பாவமும் பழியும் உற்றார் - இப்பிறப்பிற் பழியும் மறுபிறப்பிற் பாவமும் அடைந்தோர்.

17. ஆர் அறிவு - நிறைந்த அறிவு. இகழ்தல் செல்லா - இகழப்படாத. ஆயிரம் செங்கண்ணன் - இந்திரன். கூர் அறிவு உடைய ரோர் - மிக்க அறிவினையுடைய அமைச்சர். அவலம் - துன்பம்.

18. ரோர்க்கு - தன்மையார்க்கு. அற்றை நாளே - உயிர் கருவாய்ப் பதிகின்ற அப்பொழுதே. அது - செல்வ நிலையாமையும், யாக்கை நிலையாமையும் ஆகிய அதனை. பூணன் - அணிகலன் பூண்ட சச்சந்தன்.

19. பண் கனியப் பருகி - இசையினை முற்றக் கேட்டு. பயன் நாடகம் கண்கனியக் கவர்ந்து உண்டு - பயனுடைய நாடகங்களைக் கண்கள் உருக்கமுடன் காண விரும்பிக் கண்டு. விண் - விண்ணுலகத்தவர்; ஆகுபெயர். கவின் - அழகு. வீத்திய - பரப்பிய. வேற்கணி - வேல்போலும் கண்ணினையுடைய விசயை. மண் கனிப்

பான் - மண்ணை யுருக்கச் செய்வான்; என்றது விசையையினுடைய கருவில் அமைந்த சிவகனை.

20. வேழம் - யானை என்னும் நோய். இந்நோயாற் பற்றப் பட்ட விளாம்பழம் உள்ளே ஒன்றுமின்றிக் கெட்டுப் போவது போன்று சச்சந்தனும் திருமகள் நீங்க வெறுவியனனென். இங் கிலையில் அவனது அறிவாகிய அமைச்சன் ஆகுந்திறத்தினை அறி வுறுத்துகின்றான். தூம்பு - துளை. துற்றிய - உண்ட. வெள்ளில் - விளாம்பழம். யானையுண்ட விளாங்கனி என்பது உலக வழக்காகும். தேம்பு - தேம்புதல், கெடுதல். ஓம்படை - பாதுகாவல். ஆம் புடை - ஆகும் திறம்.

21. காதி - பொருது. சேறல் தேற்றீ - செல்ல அறியாய். நெறி அலா நெறி - தீய வழி. கோது - குற்றம். பொறி அற்றாய் - நல்வினை அற்றாய். ஓர் அரும் பொறி புனைவி - ஓர் அரிய இயந்திர ஊர்தியைச் செய்வித்துக் கொள்வாயாக; என்று அறிவு அவனுக்கு எடுத்துரைத்தது.

22. அந்தரத்து ஆர் - வானுலகத்தில் உள்ள. மயன் - தெய்வத் தச்சன். தந்திரம் - தொழில். தம நூல் - தம் குலத்திற் குரிய சிற்பநூல். ஊர்தி - வாகனம். தச்சன் ஒருவனை யழைத்து, 'இயற்றுமின்' எனப் பன்மையாகக் கூறியது, ஒருமை பன்மை மயக்கம்.

23. பல் கிழி - பலவகைத்துணி. பயின் - ஒட்டுதற்குரிய பிசின். துகில் நூல் - வெள்ளிய நூல். செல்வதோர் மாமயில் - மயில் வடிவில் அமைத்த வானவூர்தி.

24. பீலிநன் மாமயில் - உயிருடைய உண்மையான மயில். பிறிதாக்கிய.....மயில் என்றது ஆம் மயில்போலச் செய்யப் பட்ட எந்திரவூர்தியை. ஞாலம் - உலகம். இவ்விரண்டினையும் கொண்டுபோன தச்சன் மன்னனை நோக்கி இவ்விரண்டினுள் உயி ருள்ள மயில் எதுவென்று கண்டருள்வாயாக என்று வேண்டினன். இதனால் தச்சனது தொழிற்றிறம் விளங்குதல் அறிக.

25. நூல் நயம் நன்று நன்று. தான்: அசை. கொல் நெறி யில் பெரியாய் - கொற்றொழிலில் வல்லவனே. மின் எறி - மின்னைக்கெடுக்கும். கலம் - அணிகலன்.

26. ஆடு இயல் - சஞ்சரித்தல் பொருந்திய. பயப்பய - மெல்ல மெல்ல; பையப்பைய என்பதன் விகாரம். துரந்து - செலுத்தி.

27. பாவை - விசயை. பொறி - மயிற்பொறி. போழ்ந்து - பிளந்து. தோகை - மயிற்பொறி. வீழ்ந்து கால்குவித்து இருக்கும் - மேலிருந்து இறங்கிக் காலைக்குவித்துப் பூமியில் தங்கும்.

28. வேல் வல்ல - வேற் போரில் வல்ல. வேறு கொண்டு - மாறுகக் கொண்டு. கோது செய் - பயனின்மை செய்கின்ற. குணக் கோதினுள் கோது - குணத்துக்குச் சொல்லப்படுட தீக்குணங்களுள் மிக்கதாகிய செய்ந்நன்றி மறத்தல் என்னும் குற்றம். அக்குற்றத்தை யுடையான் கட்டியங்காரன் ஆதலின், அவனைக் 'கோது அன்னன்' என்றார்.

29. மன்னவன் பகையாயது ஓர் மாதெய்வம் - சச்சந்தனுக்குப் பகையாகிய ஒரு தெய்வம். என்னை இடங் கொண்டுவந்து - என்னை இருப்பிடமாகக் கொண்டுவந்து. செகுத்திடு - கொல்வாயாக. தன் தீய நினைவினைத் தெய்வத்தின்மேல் ஏற்றிக் கூறினன்.

30. அருமை மாமணி - மாணிக்கமணி. அழுங்க - கெடும்படி. உருமு - இடி. உட்கினரா - அஞ்சினராக. காழ்த்தமை - உடும்பை முற்றிக் கொல்லத் துணிந்தமை.

31. தன்னை ஆக்கிய - தன்னை மேன்மைப்படுத்தி வாழச் செய்த. வெளவுதல் - கொல்லுதல். பூமகள் - செல்வம். பிறழ்ந் திடும் - மாறுபட்டு நீங்கும். பேர்க்குநர் - பெயர்த்து அழிப்போர்.

32. திலகம் நீண்முடி - முடிகள் எல்லாவற்றிலும் மேலாகிய முடி. ஒப்ப - ஒப்பார்கள். பார்த்திபர் - அரசர். தேவரின் - தேவரைக் காட்டிலும். பலவும் மிக்கனர் - பலவகையாலும் சிறந்தோர் ஆவர்.

33. மன்காயுமேல் - மிகவுங் கோபித்தால். மருளி - மருள். (இ - பகுதிப்பொருள் விகுதி). மருளி மற்று அவை - மயக்கத்தை யுடைய அத்தெய்வங்கள். வாழ்த்தின் அருளி ஆக்கலும், வையின் அழித்தலும் அங்கு ஆபவோ - தம்மை ஒருவன் வாழ்த்தினால் அவனை அருள் செய்து உயர்த்துதலும், ஒருவன் வைதானைனால் அவனைக் கோபித்து அழித்தலும் அத்தெய்வங் கட்கு அப்பொழுதே ஆவனவோ? ஆகமாட்டா என்பதாம். ஆப: பலவின்பால்முற்று. "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

34. ஒளி - அரசர்பாலுள்ள கடவுட்டன்மை. கறங்கு - ஒலிக்கும். இறங்கு கண்ணிமையார் - தெய்வத்தன்மைகூலியும் தேவர்.

கண்ணிமையார் - தேவர்க்கு வழங்கும் பெயர். அறங்கள் - உலகத்தார் செய்யும் வேள்வி முதலியன. வெளவுதல் அசுரர் தொழில். அதன் புறங்காக்கலார் - அதனைக் காக்கும் வன்மையிலராவர்.

35. யாவராயினும் - எத்தகைய இழிந்தோராயினும். தேறும் - தெளியும். நவை - மன்னரால் வரும் தண்டனைத் துன்பம். காய்வன - அரசர் கோபித்தற்கு ஏதுவாகிய குற்றங்கள்.

36. மன்னர் தீ - அரசரது கோபமாகிய நெருப்பு. ஈண்டு தம் கிளையோடும் எரித்திடும் - இவ்வுலகில் வெகுளப்பட்டாரை அவர் தம் உறவினரோடும் சுட்டு அழிக்க வல்லதாம்.

37. குறுமுயல் - மதியினுள்ளே காணப்படும் கறை. நிறை மதி இருளைப் போழும் - நிறைமதி இருளை ஓட்டுவது போலப் பழியை யோட்டும்.

38. போற்றி - பாதுகாத்தருள்க. பூண் - கவசம். நினைக்கோள் குறித்து - உன்னைக் கொல்லுதலே எண்ணி. செய்யகோல் வெய்ய சொல்லான் - வாயில் காவலன். வாயில் காவலன் அரசனை நோக்கி நான்கு முறை போற்றி யென்று கூறியது, நிலத்திற்கும், குலத்திற்கும், வீரத்திற்கும், தருமத்திற்கும் நின்னையொழிய உயர்ந்த பாதுகாவல் இல்லையே என இரங்கியதாம் என்பர் நச்சினார்க்கினியர். நீலிலம் எனவே நிலமும், நெடுமுடி எனவே அதனைச் சூடுதற்குரிய குலமும், பகைவர் கவசம் அணிதற்கு ஏதுவாகிய மார்ப எனவே வீரமும், புண்ணிய வேந்தே எனவே தருமமும் குறிக்கப் பெற்றிருத்தலைக் காண்க.

39. வல்லே - விரைய. புரிசை - மதில். உரும் ஏறு - பெரிய இடி. வெடிபட முழங்குஞ் சொல்லான் - சச்சந்தன்.

40. புலிப்பொறிப் போர்வை - புலியினது தோலாற் செய்யப் பட்ட வரியினையுடைய கவசம். கலிக்கு இறையாய நெஞ்சு - தீய குணங்களுக்கு இடமாகிய மனம். வலித்தது - துணிந்தது. காண்டும் - காண்போம்.

41. நன்பொருள் - பிள்ளை. விளைந்தது : தெளிவுபற்றி வந்த காலவழுவமைதி. கோதை - மாலைபோல. மாழ்கி - துவண்டு. வெய்ய - விரும்பத்தக்க.

42. பரிவும் - அன்புறுதலும். வளைபெய் - வளை அணிந்த.

43. ஏதிலம் - வேறுபட்டிருந்தோம். இரண்டுநாள் - சிறிது நாள் என்றபடி. "நினைப்பான்புகிற் கடலெக்கலினுண் மணலிற்பலர், எனைத்தோருகங்களு மிவ்வுலகாண்டு கழிந்தவர், மனைப்பால் மருங்கற மாய்தலல்லான் மற்றுக்கண்டிலம்" என்ற திருவாய்மொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

44. பிண்டி - அசோகு. வடித்த - சொல்லப்பட்ட. நூல் - நூற்பொருளை : ஆகுபெயர். நீரை ஆகி - தன்மையையுடையையாகி. விண்டு - வேறுபட்டு.

45. உரிமை - மனைவி. ஊர்தி - மயிற்பொறி. இனி, பிறக்கும் தன் மகனால் தான் நற்கதி பெறுதலும் தன் பகையினை வெல்லுதலுங் கருதி இங்கிருந்து புறப்படுதலே செய்யத்தகுவது என்று விசயைக்கு அறிவுறுத்தினன். புரிநரம்பு - முறுக்குதலுற்ற யாழ் நரம்பு. எரிமுயங்கு - எரியின் தன்மை பொருந்திய.

46. சச்சந்தனால் மயிற்பொறியில் ஏற்றியனுப்பப்பட்ட விசயை ஆகாய வழியே வருங்காலத்துச் சச்சந்தனைக் கொன்ற கட்டியங் காரனது கொடிய முரசொலியைக் கேட்டு மூர்ச்சித்து வீழ்ந்தாள். அங்கிலையில் மயிற்பொறியைச் செலுத்துவோர் இல்லாததாலே அப்பொறி நகரத்தின் புறம்பேயுள்ள இடுகாட்டில் மெல்லென இறங் கியது. அங்கு விசயை தனிமையுற்ற வருத்தத்தை இச் செய்யுள் குறிப்பதாகும். வெண்டலை - இறந்தவருடைய வெள்ளிய தலையோடு. பயின்ற - நிரம்பிய. தமியள் ஆனாள் - பிள்ளையினைப் பெறுதற்குரிய பேறு காலத்தில் துணையின்றி வருந்தினாள் என்பதாம். விளங்கிழை - விசயை. முற்பகலில் விண்தொட நிவந்த கோயிலில் விண்ணவர் மகள் போலச் சென்றவள், பிற்பகலில் இடுகாட்டில் தமியளானாள் என்க.

47. இகலி - (விளக்கோடு) மாறுபட்டு. ஏந்தி-மிக்கு. அணங்கு - தெய்வங்கள். பொரு கடல் பருதிபோல - அலைமோதுகின்ற கடலினின்று சூரியன் (தோன்றுவது) போல. ஞாயிறு முதலில் இருளைக் கெடுத்துப் பின் மதியத்தை வெல்லுமாறுபோல, பிறந்த பிள்ளையும் முதலில் தன் தாயின் துயரத்தைப் போக்கிப் பினபு பகைவனை வெல்லும் என்பது குறிப்பு. பொன் ஆனன் - பொன் போலப் பெறுதற்கு அரிய குழந்தை. மம்மர் - வருத்தம்.

48. வெவ்வாய் - கொடிய வாய். ஓரி - நரி. விளிந்தார் - இறந்தோர். ஈமம் - கொள்ளிக்கட்டை. மருங்கு - பக்கம். கூகை - கோட்டான். ஓரி முழவாக ஈமம் விளக்காக அரங்கிலே பேய் ஆட

வென்க. இது என்றது, செயலின்றித் தாய் வருந்தும்படி தீவினை யுடைய தன்மை.

49. பற்ரு மன்னன் - பகை அரசன். பாயல் - படுக்கை. ஞாலம் - பூமி.

50. பூம்பிண்டிப் பெருமான் - அசோக மரத்தின் அடியில் வீற்றிருக்கும் அருகக்கடவுள். புறந்தந்து - பாதுகாத்து. புணை - தெப்பம். மறம் கூர் நுங்கோன் - வெற்றி மிகுந்த உன்னுடைய தந்தை.

51. கந்து - கட்டுத்தறி. கோமான் - தலைவன் (சச்சந்தன்). விசயையின் நிலைக்கு மனம் இரங்கி அழுவனபோல மரங்கள் இலைகளில் தங்கிச் சொரிகின்ற பனித்துளிகளாகிய கண்ணீரை உதிர்த்துக் கொண்டிருந்தன என்பது தற்குறிப்பேற்றவணி.

52. தேனமர் கோதை மாதர் - தேன் நிறைந்த மாலையை யணிந்த விசயை. அவலியா - வருந்தி. உழை - இடம்.

53. விழுமம் - துன்பம். கொம்மென உயிர்த்து - பொருக்கெனப் பெருமூச்சுவிட்டு. நெஞ்சிற் கொடிபுறு கவலை - தான் சுழற்சியடையும்படி நெஞ்சிற் கொண்டிருந்த கவலை. திருவின் : இன் அசை. தெய்வம் கூனியாய் நிற்றலின் உயர்திணையாற் கூறினர்.

54. பூ - தர்மரைப் பூ. தோன்றல் - தலைமை. புண்ணியன் - முருகன். நாவினுள் - வார்த்தைப்படியே. நா : ஆகுபெயர். ஒன்ரு நின்ற கோவினை - பொருந்தாது நின்ற க்ஷத்தியங்காரனை. அடர்க்க - கொல்லும்படி. காவி - நீலோற்பல மலர்.

55. தாரினன் - கந்துக்கடன். துணைகதிர் - (இருளைப் போக்க) விரைகின்ற சூரியன். முகப்ப - எடுக்க. சீவ - சீவித்திரு. விசயை தன்னுள்ளே வாழ்த்துதலின் ஒரு குரல் என்ரார். தும்முதல், நல்ல நிமித்தம்.

56. உருகுபு - உருகி. ஈண்டிய - வளர்ந்த. அரசனுக்கு - சச்சந்தனுக்கு. அவலித்து - வருந்தி. ஐயனை - பிள்ளையை. நுன் - நின். நூறுவாய் - அழிப்பாய். பழக்கிளவி - பழத்தின் சுவைபோன்று இனிமை தரும் சொல்.

57. ஒழுக்கு இயல் - நல்லொழுக்கத்தால் இயன்ற. வழுக்கிய - இறந்த. விழுத்தகு மகன் - சிறப்புப் பொருந்திய சிவகன்.

58. பல் பூம்பொய்கை - பல பூக்களுடைய பொய்கையில். இன்புற ஊருமதி - இன்பம் பொருந்தப் பரவும் அறிவு. தெய்வப் பகை வென்று - குழந்தைப் பருவத்தில் உண்டாகின்ற தெய்வ சேட்டையினை வென்று.

59. சாதிப்பைம்பொன் - உயர்ந்த சாதிப் பொன். போதி - ஞானம். அந்தணன் - பிரமன். அவன் மகன் - சுவாயம்பு மனு. அவனை யொத்தான் சிவகன் என்றது, அவனைப் போன்று இயற்கை யறிவிற் சிறந்தான் என்பதாம்.

60. நாமகள் நலம் - கல்வி நலம். ஏ - அம்பு. காமனும் கனிய வைத்த புலம் என்றது, இசைத்துறையை. புலம்: ஆகு பெயர். மார்பன் - சிவகன். புவிமிசைத் திலகம் ஒத்தான் - மண்மகளுக்கு நெற்றியிலிட்ட திலகத்தை ஒத்து விளங்கினன்.

—

VI

பெரிய புராணம்

திருக்குறிப்புத்தொண்டநாயனார்

பெரிய புராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழார் தொண்டை மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்துள் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவராவர். அருண்மொழித் தேவர் என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இவர் காலத்திருந்த அநபாய சோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) இவரது புலமைத் திறத்தினை வியந்து இவரைத் தனது முதல் மந்திரியாக்கி, உத்தமச் சோழப் பல்லவன் என்ற பட்டப் பெயரையும் அளித்தனன். இவ் வரசனது வேண்டுகோளுக்கிரங்கி இப் புராணம் பாடுதற்காக, சேக்கிழார் சிதம்பரம் சென்று, சபாநாயகரை வணங்க, சிவபெருமான் அசரீரியாக "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க இவர் அதனையே முதலாகக் கொண்டு இப்புராணம் பாடி முடித்தனர். இதனை அறிந்த அரசன் மனமகிழ்ந்து சேக்கிழார்க்குப் பல சிறப்புகள் செய்து, "தொண்டர்சீர் பரவுவார்" என்ற சிறப்புப் பெயரையும் கொடுத்து, அவரைப் பெரிதும் பாராட்டினன். சேக்கிழார் இவ் வரசனைத் தாம் பாடிய நூலில் பல இடத்தும் புகழ்ந்து கூறியுள்ளார். சேக்கிழாரைப் பற்றியும் அவர் பெரிய புராணம் பாடிய வரலாற்றைப் பற்றியும் உமாபதி சிவாசாரியார் 'இயற்றியருளிய சேக்கிழார் புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராண வரலாற்றில் காண்க. இக் கவிஞர் பெருமானின் தெய்வ மணக்கும் செய்யுள் களில் ஈடுபட்ட மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என இவரைப் போற்றியுள்ளனர். சேக்கிழாரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

பெரியபுராணம் என்னும் இந்நூல் பெருமை பெற்ற சிவனடி யார்களின் வரலாற்றினை உணர்த்துவதாகும். சிவனடியார் தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரு மாகிய எழுபத்திருவராவர். இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது இந்நூலின் பாயிரச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. அறுபத்துமூவர் வரலாற்றைப்

பற்றி, சைவசமயாசாரியருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடியருளிய திருத்தொண்டத்தொகையுள் தொகுத்துக் கூறினர். நம்பியாண்டார்நம்பிகள் இத்தொகையைத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் வகுத்துக் கூறினர். இவ்விருவரும் கூறிய தொகை வகைகளைக் கொண்டு சேக்கிழார் இந்நூலை விரிவாக எழுதினர். இவையேயன்றி, தேவாரம், காரைக்காலம்மையார் பிரபந்தங்கள், திருமூலர் திருமந்திரம், கழறிற்றறிவார் பொன்வண்ணத்தந்தாதி, தெய்வ வுலா முதலிய நூல்களும் இந்நூலைப் பாடுதற்கு ஆதாரமாக இருந்தன.

இந்நூல் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாம். இது இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, திருமலைச் சருக்கம் முதல் வெள்ளையானைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களையும், 4286 பாடல்களையும் கொண்டுள்ளது. ஈண்டுப் பாடப்பகுதியாக வந்துள்ள திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம் பெரிய புராணத்தில் நான்காவது சருக்கமான மும்மையாலுலகாண்ட சருக்கத்தில் ஐந்தாவது புராணமாக அமைந்துள்ளது.

1. எயில் - மதில். பயின்றது - நெருங்கியது. தொன்மை - பழமை.

2. மல்கும் - வளம் பொருந்திய. வரைபுணர் - மலை சார்ந்த. இறவுளர் - வேடர். ஏனல் - தினை. படர்சிறை தோகை - விரிந்த சிறகையுடைய மயில். தோகை: சினை ஆகுபெயர். சுரிகுழல் தோகை - சுருண்ட கூந்தலையுடைய குறத்தியர்.

3. கோலம் - அழகிய. நீலி கோட்டங்கள் - காளி கோயில்கள். நிரந்து - நெருங்கி. பரல் முரம்பு - பருக்கைக் கற்களையுடைய மேட்டு நிலம். முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் வேனிலின் கொடுமையால் தம் இயல்பு திரிந்து பாலை நிலமாகும் என்பதனை,

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"

(சிலப்பதிகாரம் 11 : 64 - 66)

என்பதனால் அறிக. இச் செய்யுளில் பாலை நிலம் தோன்றுமாறும், பாலைத்திணைக்குரிய தெய்வமும், பெரும்பொழுது சிறுபொழுதுகளும் கூறப்பட்டுள்ளன.

4. துணர் - பூங்கொத்து. சுரும்பு - வண்டுகள். கான்யாறு - காட்டாறு. குருந்து - குருந்தமரம். பந்தர் - பந்தல் போன்ற: போலி. கானியாறு இடையிடை பரந்து முயலை உகைத்து அடங்கும் என்க.

5. மல்கிய - நிறைந்த. முல்லை - முல்லைநிலம். பாசடை - பசிய இலைகள். தடம் - விசாலமான. பழனம் - வயல். பூசல் - அலைமோதுகின்ற; ஒலியையுடைய எனினுமாம். நதிபல உயர்ந்து ஓடி, பழனங்கள் மருங்கும் குளங்களும் ஏரியும் புகுவ என முடிக்க.

6. சேய - சிவந்த. செருந்தி - செருந்திப் பூ. அளம் - உப்பளம். அளவர் - உப்பு அமைப்பவர். சாயல் - மென்மை. தரளம் - முத்து.

7. கோடு - சங்குகள். மாடு - பக்கத்திலுள்ள. வரை - மலை. சினை - கிளை. மல்லை - மாமல்லபுரம்; மகாபலிபுரம். அனைய - ஒத்தன. மகாபலிபுரத்தை அடுத்துக்கடலும் மலையும் உள்ளதால் இது நெய்தலும் குறிஞ்சியும் சேர்ந்த பட்டினத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இது திணைமயக்கம்; நெய்தலும் குறிஞ்சியும் மயங்கின.

8. கவரும் - பிடித்த. குவை - குவியல். கழியவர் - பரதவர். கானவர் - முல்லைநிலத்து மக்கள். சிவல் - கவுதாரி. கழிச்சியர் - பரத்தியர். எயிற்றியர் - வேட்டுவ மகளிர். கானம் - காடு; முல்லை நிலம்.

இது திணைமயக்கம்; நெய்தலும் முல்லையும் மயங்கின.

9. மெய்வளம் - உண்மையாகிய மோட்சச்செல்வம். காசி முதலாக எண்ணப்படும் முத்தித்தலங்கள் ஏழனுள் காஞ்சிபுரமும் ஒன்றுதலின் "என்றும் மெய்வளந்தரு சிறப்பினால்" என்றார். எவ்வுகங்களும் - எந்த யுகங்களிலும். கை - ஒழுக்கம்.

10. அம்பிகை - உமாதேவியார். மானம் - பெருமையுடைய. வைத்த - வளர்த்த. அறிந்தவா - அறிந்தவாறு: தொகுத்தல் விகாரம்.

11. துள்ளுவார் புனல் - ததும்புகின்ற மிக்க கங்கைநீர். வேணியார் - சடை முடியையுடைய சிவபெருமான். திறன் - வகைகள். உலகை ஆளுடையாள் - உமாதேவி.

12. அங்கண் - அப்பொழுது. முறுவல் - புன்சிரிப்பு.

13. தேவதேவன் - தேவர்களுக்கெல்லாம் தேவனான சிவ பெருமான். மண்மேல் - பூமியின்மீது. மா - மாமரம். அமர்தல் - விரும்புதல். மன்னு பூசனை - நிலைபெற்ற பூசை. பிரியா - பிரிவதற்கு அரிய. இசைவு கொண்டு - விடையைப் பெற்றுக் கொண்டு.

14. துன்னு - நெருங்கிய. நேர்வரும் - ஒப்பற்ற. பதும மாநாகம் - எட்டுத்திக்குகளினும் அமையும் பெரிய எட்டு நாகங்களுள் ஒன்று. பிலம் - புழை; புற்று. மலைமடந்தை - உமாதேவி.

15. அருள் கரு இருத்தி - கருணையாகிய காரணத்தை (மனத்தில்) கொண்டு. ஏகம் மா முதல் - சிவபெருமான் (ஏகாம்பர நாதர்). புரிவு - விருப்பம். பொன்மலைவல்லி - உமாதேவியார்.

16. நிரந்தரம் - எப்பொழுதும். அஞ்செழுத்து - ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரம் (நமசிவாய). தஞ்சம் - பற்றுக்கோடு. தரிப்பரே - தரிப்பரோ; தாமதிப்பரோ (தாமதிக்கமாட்டார் என்றபடி). மாவின் மூலம் - மாமரத்தின் அடி.

17. கம்பம் - ஏகம்பம்; இறைவனது மாவடி இருக்கை. கம்பம்: ஏகம்பம் என்றதன் முதற்குறை. அம் தொண்டை கனி - அழகிய கொவ்வைக் கனி.

18. மெய்ப் பூச்சு - திருமேனியில் பூசும் சந்தனக்காப்பு. உதவ - (சேடியர்) கொடுக்க.

19. கரம் தரும் பயன் - கையால் உண்டாகும் பயன். இது என்றது பூசை செய்வதை. நிரந்த - பரந்த.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனே"
(அப்பர் தேவாரம்)

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து"
(திருவாசகம்)

என்ற இவ்வரிகள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

20. கனங்குழை - பொன்குழை அணிந்த உமாதேவியார்: அன்மொழித்தொகை. வெள்ளம் ஆ - வெள்ளம் உண்டாக. சிவபெருமான் ஒரு திருவிளையாடல் செய்து உமாதேவிக்கு அருள் செய்ய எண்ணிக் கம்பையாறு பெருகிவரச் செய்தார் என்க.

21. அம் கயல் கண்ணி - அழகிய கயல்மீன் போன்ற கண்களை யுடைய உமாதேவியார். வெருக்கொண்டு - அஞ்சி. தண்நிலா மலர் வேணியினரை - குளிர்ந்த சந்திரன் விளங்கும் சடையை யுடைய சிவபெருமானை. இச்செய்யுளில் வந்துள்ள செய்தியினை "வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட, கள்ளக் கம்பனை" என்ற சுந்தரமூர்த்தி நாயனார் திருவாக்காலும் உணரலாகும்.

22. சரிப்பவும் - சஞ்சரிக்கும் உயிர்கள். நிற்பவும் - அசையாப் பொருள். வம்பு - வாசனை.

23. அண்டர் நாயகர் - தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய சிவபெருமான். அளவினுல் - அவ்வளவில். இற்றை - இந்நாளின். கமலம் வதனம் - தாமரை போன்ற திருமுகம். முண்டம் நீற்றர் - திரிபுண்டரமாக அணிந்த திருநீற்றையுடைய சிவபெருமான்.

24. மன்ன - நிலைபெறும்படி. ஈறு - முடிவு. திருவடிப் பிழைத்தல் - சிவ நிந்தை, அடியார் நிந்தை, சிவாகம நிந்தை முதலியன. பிறப்பு ஒழிப்பாள் - (உயிர்களின்) பிறவித்துன்பத்தை நீக்குபவள்; உமாதேவியார். இச்செய்யுளின் முதல் மூன்று வரிகளைக் கீழ்க்காணும் கச்சியப்பசிவாச்சாரியாரின் திருவாக்கோடு ஒப்பிடுக.

"ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சி"

(கந்த புராணம்)

25. விடையின் மேலவர் - ரிஷபவாகனத்தின்மேல் வீற்றி ருக்கும் சிவபெருமான். மேவி - விரும்பி; ஏற்றுக்கொண்டு. இகபரத்து வித்தாக - இம்மை மறுமைப் பயன்களைப் பெறு தற்குக் காரணமாக. தடைபடாது - (மோட்சம் பெறுதற்குத்) தடையாகாமல். மெய் நெறி - வீடு (மோட்சம்). இச்செய்யுளின் முதல் இரண்டடிகளின் கருத்தைக் கீழ்க்காணும் வரிகளோடு ஒப் பிட்டுக் காண்க.

".....இன்னும் உனக்கு ஆண்டு தோறும்
நல்வாய்மை அறம்வளர்க்கும் வித்தாநெல் விருநாழி
[தருகேம் அந்த
நெல்லாலே இகபரத்தும் உயிர்ப்பைங்கூழ் தழைகவென
[நிறுவல் செய்தார்"

(காஞ்சிப்புராணம்: தழுவக்குழைந்த படலம்-426)

26. எம்பிராட்டி - எமது தாயாகிய உமாதேவியார். தம்பிரான் - சிவபெருமான். வழிபாடு - பூசை. பல்க - பெருக. காமக்கோட்டம் - காமாட்சியம்மன் கோயில். புரக்கும் - வளர்ப்பவளானுள்.

27. மீது வழிக் கொளாது - (அந்த ஆலயத்தின்) மேலாகச் செல்லாது. அதன் - ஆலயத்தின். மருங்கு - பக்கம். சித்தம் - அழகிய. மாதிரம் - திக்குகள். சாயை - நிழல். அதன் திசை மயக்கம் - அந்த ஆலயத்தின் திசை மயக்கமானது.

28. நியமம் - நியமநெறி ; கட்டளை. காமங்கள் - விரும்பிய வைகள். எண் இறந்த - அளவுகடந்தன.

29. வல் திறல் புலி - மிக்க வலிமையுடைய புலிக்கொடியை. காதம் - பத்துமைல் தூரம். புடை போக்கி - நான்கு பக்கமும் சூழ்ந்திருக்கும்படி உயரமாகக்கட்டி. கொள்கை - பெருமை. கரிகாற் சோழன் இங்ஙனின் பெருமையைக் கேட்டு, மதில் கட்டிப் பல குடிகளையும் அங்குக் குடியிருத்தினன் என்க.

30. மன்னும் - வாழும். மறுகு - வீதி. அவிப்பாகம் - வேள்வி களில் தீக்கடவுளின் வாயிலாகத் தேவர்களுக்கு இடும் உணவு. அணித்தாக - அருகாக. மேலோர் மந்திரம் தேவரை அணித்தாகக் கொண்டு செல்லும் என்க.

31. தெற்றி - திண்ணை. புரசை - யானைக்கழுத்துக் கயிறு. விரை - வாசனை. தொடை அலங்கல் - தொடுத்த மாலைகள். குமரர் - அரசகுமாரர்கள். விஞ்சை விண்ணோர் நிரை - வித்தியாதரர் களாகிய தேவர்களின் கூட்டம். நிரந்து - ஒருங்கு சேர்ந்து.

32. வெயில் - ஒளி. வெறுக்கை - செல்வம். வயின் - இடத்தில். குலங்கள் - கூட்டங்கள். கச்சி - காஞ்சிபுரம். கம்பமும் - ஏகம்பமும். பயிலும் - பழகிய. நிதிக்கோன் - குபேரன். பரிசு - தன்மை. இச் செய்யுள் தற்குறிப்பேற்றவணியின்பாற் படும்.

33. விழவின் - திருவிழாக்களால். விளங்கும் வேணி - ஒளி விளங்கும் சடை முடியில். மழ இள - மிகவும் இளைய : ஒரு பொருட் பன்மொழி. செம்பொன் மலைவல்லி - உமாதேவியார். உணவு என்றது இருநாழி நெல்லை. (25-ம் செய்யுள் காண்க). உளரால் ; ஆல் : அசை.

34. ஏகாலி - வண்ணார். சீலம் - நல்லொழுக்கம். மை விரவு கண்டர் - கறை பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான். வழித்தொண்டர் - குலமுறையாகத் தொண்டு செய்பவர்.

35. மனம் முதலாயின மூன்று - மனம், வாக்கு, காயம். அண்ணலார் - பெருமையிற் சிறந்த சிவபெருமான். திருக் குறிப்பு அறிந்து - திருவுள்ளக் குறிப்பை அறிந்து கொண்டு. இச் செய்யுளின் முதல் இரண்டு அடிகளைக் கீழ்க்காணும் அடிகளோடு ஒப்பிடுக.

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன் கண்ணினைநின்
திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக்
காக்கி" (திருவாசகம். திருச்சதகம்–26)

36. மா - குதிரை. ஊர் ஒலிக்கும் - ஊரார்களுக்குத் துணி வெளுக்கின்ற. நீர் - கங்கை நீர். அரா இரைக்க - பாம்புகள் சீறவும். பேர் - திருநாமங்கள். ஒலிக்க - உச்சரிக்க. ஒலிப்பர் - (ஆடையை) வெளுப்பர். ஒலித்தல் என்ற வினை வெவ்வேறு பொருளில் பல முறை வந்ததால் இச் செய்யுளில் சொற்பின் வருநிலையணி காண்க.

37. சேவடியார் - சிவந்த அடியினையுடைய சிவபெருமான். தூசு - ஆடை. துகள் - குற்றம். ஆசுடைய - (பிறவிக்குக்) காரண மான. மலம் மூன்று - ஆணவம், கன்மம், மாயை. அணைய - சேர்தலால். தனை விட - தன்னை நீங்க.

38. பொருப்பரையன் - மலையரசன். பூங்கொடி - அழகிய கொடி போன்ற பார்வதி. தொண்டர் - திருக்குறிப்புத்தொண்டர். அருள் புரிவான் - அருள் செய்ய. புரிவான்; வான் ஈற்று எதிர்கால வினையெச்சம்.

39. சீதமலி - குளிர்மிகுந்த. ஆதுலராய் - வறியவராய். மால் - திருமால். கோது அடையா - குற்றம் அற்ற. குறுநடை - தளர்ச்சியால் வரும் சிறு நடை.

40. உரு - (தமது) உடம்பில். மயிர்ப்புளகம் - மயிர்க்கூச் செறிதல்.

41. எய்துமவர் - தம்மை அடைந்த சிவபெருமான். கரந்த - மறைத்த.

42. எடுக்க ஒண்ணாது - தாங்க முடியாது. உடைந்து - துன்புற்று. மேல்கடல்பால் அக்குன்றம் - அஸ்தமன கிரி. கடிது - விரைவில்.

43. தாழாது - தாமதிக்காமல். அந்திபடுவதன் முன் - அந்திவேளை உண்டாவதன் முன். உணக்கி - உலர்த்தி.

44, மாசு எறிந்து - அழுக்குப் போகத் துவைத்து. புழுக்கி - (வெள்ளாவியில் வைத்து) வேகவைத்து. மறிக் கரத்தார் - மானைக் கையில் ஏந்திய சிவபெருமான்.

45. வெளி அடைத்த - ஆகாயத்தின் வெளியிடத்தை மறைத்த. செறி - நெருங்கிய. குழாம் - கூட்டம். மிடைந்து - நெருங்கி. விழுநுழையா வகை - கட்புலன் செல்லாதபடி. அசைவு - வருத்தம். இசைவு - சம்மதித்ததை. அதாவது மாலை நேரத்துக்குள் வெளுத்துத் தருவதாக உடன்பட்டதை.

46. ஓவாதே - இடைவிடாமல். காவாலி - பிரம கபாலத்தைக் கையில் ஏந்திய சிவபெருமான். மேவார் - பகைவர். கங்குல் - இரவு. ஆஆ : இரக்கங்குறித்த இடைச்சொற்கள். அழிந்தவா - அழிந்தவாறு : விகாரம்.

47. தொழும்பன் - அடியேன்.

48. புடைத்திட - தோய்ப்பதற்கு. எற்றும் - அடிக்கின்ற சிந்த எடுத்து எற்றுவன் - சிதறும்படி எடுத்து மோதுவேன். அணிவளைத்தழும்பர் மலர்ச் செங்கை - உமாதேவியின் அழகிய வளைத்தழும்பையுடைய சிவபெருமானது செந்தாமரைக் கை. செங்கை பிடித்தது என்க.

49. இதழி - கொன்றை மாலை. துணைவி - உமாதேவியார். திருமுடியார் வெளிநின்றார் ; தொண்டர் கைதொழுது நின்றார் என்க.

50. முக்கண்ணர் - (சூரியன் சந்திரன் அக்கினி என்ற) மூன்று கண்களையுடைய சிவபெருமான். மன் - நிலைபெற்ற. நீடிய நம் மன் உலகு - சிவலோகம். வைகுவாய் - தங்கியிருப்பாய் ; என்றும் பிரியாமல் இருப்பாய்.

VII

கம்பராமாயணம்

விபீடணன் அடைக்கலப்படலம்

கம்பர் சோழவள நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் ஆதித்தர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் காளி கோயிற் பூசகர் என்பது, வாணியதாதன் என்னும் புலவர் பாடிய "கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன்" என்பதனாலும், இவர் தந்தை ஆதித்தன் என்பது "ஆதவன் புதல்வன்" "ஆதித்தன் கம்பன்" என்ற பாடற் பகுதிகளாலும் அறியலாகும். இவர் வேளாளர் குலத்தினர் என்பர் ஒரு சாரார். 'கம்ப நாடர்' 'கம்ப நாடுடைய வள்ளல்' என்று இவர் குறிக்கப்பட்டிருத்தலால் இவருக்குக் கம்பர் என்ற பெயர் நாடுபற்றி வந்ததென்பர் சிலர். கம்பர் என்ற பெயர் ஏகம்பர் என்றதன் முதற்குறை என்பாரும் உளர். இவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலாரால் ஆதரிக்கப்பட்டார். தம்மை ஆதரித்த அவ்வள்ளலை இவர் இராமாயணத்துள் பத்து இடங்களில் புகழ்ந்து பாடியுள்ளார்.

"பொன்னியைப் பொருவும், கங்கை யென்னுமக் கரைபொரு
திருநதி கண்டார்", "காவிரி நாடன்ன கழனி நாடொரீஇ"

என்று கங்கை, கோசலநாடு முதலியவற்றிற்குக் காவிரியையும் சோழ நாட்டையும் உவமையாகக் கூறுதலின், இவரது நாட்டுப் பற்றும், "தமிழெனு மளப்பருஞ்சலதி," "எத்திறத்தினும் ஏழுலகும் புகழ், முத்து முத்தமிழுந்தந்து" எனப் பலவிடத்தும் தமிழ் மொழியைச் சிறப்பித்தலின், இவரது தாய்மொழிப்பற்றும் புலனாகின்றன. இராமகாதையை "ஆசைபற்றி அறையலுற்றேன்" என்றதனாலும், நம்மாழ்வார்மீது அந்தாதி பாடியதாலும், இராமாயணத்துள் பல இடங்களில் திருமாலின் பரத்துவம் கூறியிருப்பதனாலும், இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பது புலனாகும். ஆயினும், இவர் சிவபெருமானைக் கூற நேரும்போது அவரையும் சிறப்பாகவே கூறியுள்ளார். இவரது காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்; கி. பி. 9 - ஆம் நூற்றாண்டு என்று கூறுவாருமுளர். இவர் பாடியதாகக் கூறப்படும் வேறு நூல்கள் ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரசுவதி அந்தாதி முதலியன.

"கல்வியிற் பெரியன் கம்பன்," "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்," "விருத்தமென்னும் ஒண்பாவிற்குயர் கம்பன," "கற்றூர் கவியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன்" (இரகுவம்சம்) "கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயம் களியாதே" என்னும் புகழுரைகள் கம்பரது புலமைத் திறத்தினை விளக்கப் போந்தனவாகும்.

கம்பர் தமது நூலுக்கு இட்டபெயர் இராமாவதாரம் என்பதும், இதனைத் திருவெண்ணெய்நல்லூரிலிருந்து பாடினர் என்பதும் "இராமாவதாரப் பேர்த், தொடை நிரம்பிய தோமறு மாக்கதை, சடையன் வெண்ணெய் நல்லூர்வயிற் றந்ததே." என்ற கற் சிறப்புப்பாயிரச் செய்யுளால் தெரிகின்றன. இவர், வடமொழி யிலுள்ள வான்மீக ராமாயணத்தையே தாம் பாடிய இராமாயணத் திற்கு முதல் நூலாகக் கொண்டாரேனும், தமிழ் வழக்கிற் கேற்பச் சில கதைப்பகுதிகளை மாற்றியும் சிலவற்றை விரித்தும் பாடி யுள்ளார். திருக்குறள், சீவக சிந்தாமணி, போன்ற பண்டைத் தமிழ் இலக்கியங்களிலுள்ள சிறந்த சொற்களையும் பொருள்களையும் ஏற்ற இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

கம்பராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் என விரிதலால், ஆறும் வேற்றுமைத்தொகை. இராம + அயனம் இராமாயணம் என்றுயிற்று. இது வடநூல் முடிபாகிய தீர்க்க சந்தி. கம்பராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்கள் உள்ளன. அவற்றுள் விபீடணன் அடைக்கலப்படலம் யுத்த காண்டத்தில் நான்காவது படலமாக அமைந்துள்ளது. விபீடணன் தன் தமையனை இராவணனது செயல்களை விரும்பாமல் இராமபிரான்பால் அடைக் கலம் அடைந்த செய்தி இப்படலத்துள் கூறப்படும்.

1. ஊழியாய் - யுகாந்தகாலத்திலும் அழியாதிருப்பவனே; நீதிநூல்முறைக்கு வழுவாது நடப்பவனே எனினுமாம். புண்டரீகத் தடம் - தாமரைக்குளம். புரை - போன்ற. பூட்சி - திருமேனி. மண்டிலம் - வட்டம். துளக்கி - அசைத்து.

2. விளைவு - முடிவு. நளிர் மலர் - குளிர்ந்த தாமரைமலர். நடுவண் - நடுவில்.

3. அடர்க்க - நெருக்க. துணைவன் - விபீஷணனது துணை வர்களுள் ஒருவன்.

4. முன்னவன் - இராவணன். கரண்புகு சூழலே - மனம் சென்ற வழியே. அருளின்வேலையை - கருணைக்கடலான இராம பிரானை.

5. காத்தியேல் - சிறையிலே வைத்திருப்பாயானால். எற் புடைக் குன்றம் - எலும்பினால் இயன்ற குன்று. ஏழை - அறிவற்ற வனே. நற்பொருள் - உபதேசம்.

6. சார்பு - இடம். தினைப்பொழுதினில் - தினையவ்வளவு காலத்திற்குள்ளே. போந்தனன் - வந்துள்ளான்.

7. இவன் - விபீடணன். கைப்புகற்பாலனே - (நம்மிடத்து) சேர்தற்கு உரியனே.

8. தடமலர்க்கண்ணன் - பெரிய தாமரைமலர் போன்ற கண்களையுடைய இராமன். அரோ : அசை. சுக்கிரீவன் என்பது அழகிய கழுத்தையுடையவன் என்று பொருள்படும்.

9. வெம்முனை - கொடும்போர். சும்மை - தவறான செயல். தம்முனைத் துறந்தது - தனது தமையனான இராவணனை விட்டு வந்தது.

10 வார்க்குறு வனைகழல் - வார்த்துச் செய்யப்பட்ட வீரக் கழல். செறுநர் - பகைவர். அருளின் ஆழியாய் - கருணைக் கடலே.

11. தஞ்சென - தஞ்சமென. நம்வயின் - நம்மிடத்து. அஞ்சனம் - மை.

12. அலகில் - அளவில்லாத. தகைய - தன்மையையுடைய. இறை - இராமன்.

13. விணையம் - வஞ்சனை. முன்பு - வலிமை. செறிதல் - நெருங்குதல்.

14. இறைவி - சீதை. மாலும் - ஒத்திருக்கும்.

15. பால் - பகுதி. பனுவல் - நூல். தானை - சேனை. மேலவன் - இராமன்.

16. எளிவருந் தகைமை - எளிமைப்பட்ட தன்மை. நாமுற - அச்சம் கொள்ளும்படி. தோம் - குற்றம்.

17. முனிந்து போந்தவன் - (தன் அண்ணனை) வெறுத்து வந்த விபீடணன். ஏலுமே - முடியுமோ.

18. அன்பு கூர்ந்தவர் - (இராமனிடத்து) அன்பு மிக்கவர். பெற்றி - தன்மை.

19. நெறிதரு - நீதிநெறியைக்காட்டும். நேரிலா - ஒப்பற்ற. அறிவின் மேலுளான் - சாதாரண அறிவினால் அறியமுடியாத பரம்பொருளின் வடிவான இராமன்.

20. இச்செய்யுளின் பின் இரண்டு அடிகள் கீழ்க்காணும் திருக்குறளை நினைப்பூட்டுகின்றன.

"நுணங்கிய கேள்வியர் ல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது." (கேள்வி - 9)

21. ஆழியாய் - சக்கரத்தை ஏந்தியவனே; பாற்கடலில்கண் துயில்பவனே எனினுமாம். அயிர்த்தல் - சந்தேகித்தல்.

22. இச்செய்யுளின் முன் இரண்டு அடிகளைக் கீழ்க்காணும் திருக்குறளோடு ஒப்பிடுக.

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்." (குறிப்பறிதல் - 6)

23. எறிதல் - வெட்டுதல். புல்லிது - இழிவைத்தருவது.

24. கோறல் - கொல்லுதல். மறம் - வீரம். ஆதர் - பசுப் போன்றவர்.

25. நிந்தனை நறவம் - பழிக்கத்தக்க கள். வந்தனை - (கடவுள் பெரியோர் இவர்களின்) வழிபாடு. அரோ : ஈற்றசை.

26. தனி மகள் - விபீடணனது ஒப்பற்ற மகளான திரிசடை. அயன் - பிரமன். துன்மதி - கெடுமதியையுடைய இராவணன். நன்னுதல் - அழகிய நெற்றியையுடையவளே!

27. மாருதி - அநுமன். வினயம் - வணக்கத்தோடு கூடிய; நீதியையுடைய என்றுமாம். நன்று நன்று: உவகைபற்றிய அடுக்கு. சீரிது - சிறப்புடையது. மாற்றம் - மொழி.

28. காதல் அருத்தி - மனங்கலந்த விருப்பம்: ஒருபொருட் பன்மொழி. அவதி - எல்லை. பெருத்து உயர் தவத்தினன் - மிக்க சிறந்த தவத்தையுடைய வீடணன். பிழைப்பு - தவறு: தொழிற்பெயர். திருத்தியது - நன்கு விளக்கியது.

29. வடித்து - ஆராய்ந்து. பெற்றி - (நாம் செய்யத்தக்க) ஆலோசனை. வீயர்து - இறவாது. பற்றுதல் அன்றி - ஏற்றுக் கொள்வது அல்லாமல். பகர்கின்றனை : வினையாலணையும் பெயர்.

30. யாயை - தாயை. தொன்று வந்து - பலநாளாகப் பழகி. பின்றும் - (அவன் தன் கடமையில்) மாறுபட்டு நடப்பான் : செய்யும் என்ற முற்று ஆண்பாலுக்கு வந்தது. பிறிது - வேறுகிய பழி.

31. பிறந்த - (அறிவு) பிறந்த. துலை - தராசுத் தட்டில். பெரியோன் - சிபிச்சக்கரவர்த்தி. பெற்றி - வரலாறு. வாழ்கின்றனை - வாழ விரும்பும் வீடணனை : துணிவு பற்றிய காலவழுவமைதி. துன்னினன் - சேர்ந்தவனுகிய வீடணன்.

32. இடைந்தவர்க்கு - அஞ்சினவர்க்கு. வேலை - பாற்கடல். ஆலம் - விஷம். உடைந்தவர்க்கு - வலி ஒடுங்கிப் போனவர்க்கு, என்னும் - என்ன பயனைத்தரும்?

33. பேடை - பெண்பறவை. பாடுறு - வருந்துகின்ற. பைம்புள் - சிறிய ஆண்புறு. வீடு-நற்கதி. வேதத்தின் - வேதத்தில் கூறிய பொருள் போலவே. விழுமிது - சிறந்தது. 'கபோத உபாக்கியானம்' என்பது பாரதத்தில் உள்ளது என்பதனை அறிக. இந்தக் கதை ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் 18 - ம் சர்க்கத்தில் 2 - சுலோகங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

34. போதகம் - யானை, கஜேந்திராழ்வான். கன்றி - கோபித்து. இடங்கர் மா - முதலையாகிய விலங்கு. அம் ஆதிபரமே - அழகிய ஆதிமூலமே' காண : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மெய்ப்பொருள் - உண்மைப் பொருளான திருமால். துடைத்த - நீக்கின. வார்த்தை - வரலாறு.

35. வருவித்து - படைத்து. தன்னன - தன்னுடையனவே. எவையும் - எப்பயன்களும். ஏம் உற - நலம் அடையும்படி.

36. மிடறு - கழுத்து. நகை - ஒளி. மழுவாளன் - மழுப் படையையுடைய சிவபெருமான். நாள் - ஆயுள்நாள். தஞ்சுளன - குறைவு என்றுகூறி. தாதை - மிருகண்டு முனிவர். அந்தணற்கு ஆகி - மார்க்கண்டேய முனிவனுக்காக. மாற்றும் - உதைத்துத் தள்ளிய.

37. சரண் - பாதுகாப்பவர். சாம்ப - ஒடுங்க. வஞ்சி : உவம ஆகுபெயர். முரண் உடைக் கொடியோன் - அதருமை குணத்தை

யுடைய கொடிய இராவணன். கொல்ல - வருத்த. என்தாதை - எனக்குத் தந்தை முறையான ஜடாயு.

38. உய்ய - (தான்) பிழைக்கும்படி. கையன் - வஞ்சகன். மை அற - குற்றம் நீங்கும்படி. நோக்கி - ஆலோசித்துப் பார்த்தும். மா மறை நெறியில் நின்ற - சிறந்த வேதமார்க்கத்திலுள்ள. மெய்யினை - தத்துவப்பொருளாகிய கடவுளை. மெய்யினைப் பொய் யென்றனும்: தொடைமுரண்.

39. தேவரை - தேவர்களுக்கு: உருபுமயக்கம். பேதை - இராவணன். அபயம் என்றார் வேதியர்க்கு - அபயம் வேண்டிய (தண்டகாரணிய வாசிகளான) முனிவர்களுக்கு. காதையை - செய்தியை.

40. சீரிய - சிறந்த. இதனின்மேல் - (சரணமடைந்தோரைக் காக்கும்) இச்செயலைக்காட்டிலும். பூரியர் - அற்பர். பொன்ற - அழியாத.

41. கடப்பாடு - கடமை. கதிரோன் மைந்த - சூரியனது குமாரனை சுக்கிரீவனே! . கோது இலாதவனை - ஒரு குற்றமும் இல்லாத விபீஷணனை.

42. ஐயுறவு எல்லாம்: ஒருமைப்பன்மை மயக்கம். நீரும் அளவையாய் - நீங்கும் நிலைமையையுடையதாக. தேறிய அடைவே - தெளிந்து நிச்சயித்த அத்தன்மையாகவே. தேறி - தெளிந்து. கை புகற்கு - (விபீடணன்) இராமனிடம் வந்து சேர்தற்கு. அமைவதானன் - உடன்பட்டவனாகி: முற்றெச்சம். ஒருவன்பால் - விடணனிடம்.

43. கவியின் வேந்தை - சுக்கிரீவனை. மயிந்தனுக்கு இளைஞன் - மயிந்தனென்னும் வானரவீரனது தம்பியான துவிவிதன். வள்ளல் - இராமன். தருகென்றான்: அகரம் தொகுத்தல். அருக்கன் - சூரியன். திரிகின்ற உள்ளத்தான் - அலைகின்ற உள்ளமுடைய விபீடணன். அவன் முன் - சுக்கிரீவன் முன்பு.

44. புல்லலர் - மனம் பொருந்தார். எதிர்ந்த ஞான்றே - கண்ணிற்கண்ட அப்பொழுதே. ஒல்லை - விரைவில். ஒன்ற - கலக்க. எல்லி - இரவு. எழுவின்தோளார் - இரும்புத்தூண் போன்ற தோள்களையுடையவரான சுக்கிரீவன் விடணன் என்ற இருவர். இச்செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணியின்பாற் படும்.

45. தழுவினர் - தழுவி : முற்றெச்சம். முழுமுதற் குலம் - மிகச்சிறந்த சூரியகுலம். மூள - மிக. வழுவல் இல் - தவறுதல் இல்லாத.

46. சிங்க ஏறு அனையான் - ஆண்சிங்கம் போன்ற சுக்கிரீவன். கங்குலின் நிறத்தினன் - இருள்போன்ற கருநிறமுடைய வீடணன். மழை தாரை - நீர்ப்பெருக்கை. கான்ற - சொரிந்தன. பொடித்தன - நிறைந்தன.

47. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. தஞ்சுஎன - அடைக்கலப் பொருளாக. தாழ்சடை : வினைத்தொகை. தகையேன் - தகுதியை (பெருமையை) அடைந்தேன்.

48. மருள்உறு மனத்தினன் - அறியாமை மிக்க மனத்தினனாகிய இராவணன். வானத்து உருளுறு தேரினன் - சூரியன். தெருள் உறு சிந்தை - தெளிந்த திருவுள்ளம். தேற்றம் - உறுதியான எண்ணம். ஈது - (அடைந்தோரைக் காப்பது என்ற) இதுவே.

49. தீர்வு ஆரும் - நீக்கமுடியாத. செய்ய சிந்தை - நல்ல எண்ணம். பிழைப்பது - தவறுவது. கார் வரை - கரிய மந்தர மலை. ஆர்கலி : நிறைந்த ஓசையை உடையது எனக் கடலுக்கு வினைத்தொகையனமொழி. இச்செய்யுளில் முன் இரண்டடியாற் கூறிய பொதுப்பொருளைப் பின் இரண்டடிகளிற் கூறிய சிறப்புப் பொருள் சாதித்து நிற்றலின் இது வேற்றுப்பொருள்வைப்பணி.

50. தூயவர் துணைவன் - இராமன். உற - மிகவும். மறவினை - அறத்தின் மாறான செயல். பெயர்த்தேன் - விட்டொழித்தேன்.

51. செங்கதிர்ச் செல்வன் செம்மல் - சூரியனது மகனை சுக்கிரீவன். அருத்தியன் - விருப்பமுடையவன். அமலன் - குற்றமற்ற இராமன்.

52. தவழ் - (மேகம்) தவழப்பெற்ற. முடுகிச் செல்ல - விரைந்து வர. மைதவழ் கிரிஉம் - அஞ்சன மலையும். மேருக் குன்றம் - பொன்மயமான மேருமலை. மைதவழ்கிரி வீடணனுக்கும் மேருக்குன்றம் சுக்கிரீவற்கும் மற்றமலைகள் வானர வீரர்க்கும் நிரலே உவமையாகக் கொள்க. எய்தவன் - எய்த இராமன். எய்த - நெருங்க.

53. மார்க்கடம் - குரங்குக் கூட்டம். வைப்பு - இடம். பாரின் நாயகன் - நிலவுலகத்தின் தலைவனாகிய தசரதன். நாமம் - அச்சம். வடவரை - மேருமலை. கார்க்கடல் - கரிய கடல். பொலிவானை - விளங்குபவனாகிய இராமனை. பாற்கடலுக்குக் குரங்கும், இனிய பெருமாளுக்கு விற்கை வடவரையும், இராமபிரானுக்குக் கமலம் பூத்த கார்க்கடலும் உவமை. பின்னிரண்டடி இல்பொருளுவமை.

54. மீது - வானத்தில். அரிக்குலம் - குரங்குக் கூட்டம். தெள்ளு தண் திரையிற்று - தெளிந்த குளிர்ந்த அலைகளையுடையது.

55. கோலம் - அழகு. வாள் நுதற்கு - ஒளி பொருந்திய நெற்றியையுடைய சீதாபிராட்டிக்கு.

56. படர் மழை - இயங்கும் தன்மையுடைய முகில். அடர் சிலை - நெருங்கிய வானவில்லை. ஆரம் தீர் - மாலையை அணியாதிருக்கின்ற. கடர் கடை மத்து - பாற்கடலைக் கடைந்த மத்தாகிய மந்தரமலை. கடர் - கடல்: போலி. பாம்பு - வாசுகி என்ற பாம்பு. காசின் - இரத்தினங்களால். வலயம் - தோள்வளை. தீர்ந்த - நீங்கிய.

57. கற்றை - தொகுதி. காலும் - கக்குகின்ற. முற்றுறு கலையிற்று - நிறைந்த கலைகளையுடையது. பெற்றவன் - தசரதன். மோலி - கிரீடம் (முடி.) இளையவன் - பரதன். சிற்றவை - சிறிய தாயாகிய கைகேயி. அவை: அவ்வையென்பதன் தொகுத்தல். பணித்த மோலி - நியமித்த சடை முடி. சென்னி - தலை.

58. வார - பெருக. கமலம் பூத்தது கார் முகில் - தாமரைகள் மலரப் பெற்ற கரிய மேகமோ. ஆர் அருள் - நிறைந்த கருணை. அறம் - அறக்கடவுள்.

59. மின்மினி - மின்மினிப் பூச்சி. திருவடி புனைந்த செல்வன் - பரதன். கமலத்து அண்ணல் - தாமரையிலுள்ள பிரமன். தாதையார் - தந்தை; திருமாலாகிய இராமன். சரணம் தாழ - திருவடி வணங்க. என்முனர் - என் தமையனை இராவணன். ஏம்பல் உற்றான் - களிப்புக்கொண்டான்.

60. பேர்வு அரும் - போக்குதற்கு முடியாத. வடிக்கணை - கூரிய அம்பு. கொல்வான்: வானீற்று வினையெச்சம். தீர்ந்த - முற்றிய. அம்மா: வியப்பிடைச்சொல்.

61. மீச்சுமந்து - மேலே தாங்கிக் கொண்டு. காதலன் - பக்தியை உடையவன். கருணை வள்ளல் - இராமன். இரங்கினன் - இரங்கி. வாரி - கடல்.

62. அகத்து இயல் - உள்ளத்தின் தன்மை. புல்லினன் - தழுவினன். இருத்தி - இருப்பாயாக. மலர்க்கை: உவமைத் தொகை. இருக்கை - இருப்பிடம்.

63. ஆழியான் - சக்கரப்படையுடைய இராமன். ஏழினோடு ஏழாய் நின்ற - பதினான்காக இருக்கின்ற. வாள்எயிறு - வாளைப் போன்ற கூர்மையான பற்கள். இலங்கைச் செல்வம் - இலங்கை அரசின் செல்வம்.

64. தீர்த்தன் - தூயனாகிய இராமன். சிறப்புப் பெற்றான் - திருவருட் சிறப்பைப் பெற்ற விபீடணன். கூர்ந்த - மிக்க. ஆர்த்தன - ஆரவாரம் செய்தன. சரம் - அசையும் பொருள். அசரம் - அசையாப் பொருள்.

65. உய்ஞ்சனன் - உய்ந்தேன். ஊழ் முறை - முன்றப்படி. அஞ்சனமேனியானை - மைபோற் கறுத்த மேனியனை வீடணனை. அழகன் - இராமன். துஞ்சல் இல் நயனத்து ஐய - உறங்குதல் இல்லாத கண்களையுடைய இலக்குவனே.!

66. விளைவினை - (காரியத்தின்) பயனை. வியா - அழியாத: சுறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். களவு இயல் அரக்கன் - வஞ்சனைத் தன்மையுடைய இராவணன். கடன்மை - தொடர்பு. இளையவன் கவித்த மௌலி - பரதனுக்குச் சூட்டிய திருவடியாகிய முடியை. என்னையும் - எனக்கும்: உருபுமயக்கம்.

67. குன்று சூழ்வான் மகன் - மேருமலையை வலம்வரும் சூரியனின் மகனை சுக்கிரீவன். உழை - இடம். நுந்தை - உன் தந்தையாகிய தசரதன். இங்கிதம் அறிக.

68. என்னை - என்று சொல்லி. அயிர்ப்பு - ஐயம். தொடு கழல் - பூண்ட வீரக்கழலையுடைய திருவடி நிலைகளாகிற. செம் பொன்மௌலி - பொன்முடியை.

69. திருவடி - பாதுகைகளை. செங்கதிர் - சூரியன். இராமனுடைய செந்நிறமான திருவடிக்குச் செங்கதிரும் வீடணன் முடிக்கு மலையுச்சியும் உவமை. இருவர் - இராமலட்சுமணர். பொருவரும் - ஒப்பில்லாத.

70. பரவை - கடல். வார்த்தொழில் புணரும் - வாரால் கட்டுதல் தொழில் அமைந்த. தூர்த்தன - நிலத்தை நிறைத்தன. கனகமாரி - பொன்மழை. துழனி பொம்மல் - பேரொலியின் மிகுதி.

71. அமிழ்தம் அன்னாள் - அமிருதத்தை யொத்திருக்கப் பெற்ற சீதை. இடரின் - துன்பத்தினின்றும். மலரோன் - பிரமன். அறன் - அறக்கடவுள். ஆவலங் கொடிற்று - ஆரவாரம் செய்து புடைத்துக்கொண்டது.

72. இன்னதோர் செவ்வித்து ஆக - இவ்வாருன ஒரு நிலைமை சேர்ந்ததாக. மன்நெடுங்குமரன் - இலக்குவன். பாடி வீட்டினை - படைவீட்டை. செய்கென்றான்: அகரம் தொகுத்தல்.

73. அந்தமில்குணத்தினானை - எல்லையில்லாத குணத்தினை யுடையவனான வீடணனை. அடியிணைமுடி - இராமனின் திருவடி நிலைகளாகிற முடியுடனே. சந்தன - அழகிய. தானை வைப்பை - படைவீட்டை.

74. தேடுவார் - கடவுளை அறிய முயல்கின்ற ஞானிகள். அன்று - திருவிக்கிரமாவதாரகாலத்தில். கழீஇய நன்னீர் - கழுவியதனாற் போந்த (கங்கையின்) நன்னீரில். ஆடுவார் - நீராடுபவர். பாவம் ஐந்து - கொலை, களவு, பொய்கூறல், கள்ளுண்டல், குருநிந்தை. எய்தும் தன்மை - அடையும் பெருமை.

75. இலங்கைவேந்தன் - விபீஷணன். விபீஷணன் பெற்ற சிறப்பு இருடியர் முதலியோர் யாவரும் பெறவில்லை என்று பெரியோரெல்லாம் வியந்து போற்றினர் என்க.

VIII

கோயிலுன்மணிமாலை

இதனை இயற்றியருளிய பட்டினத்தார் சோழவள நாட்டில், காவிரிப்பூம்பட்டினத்தில், வைசியர் குலத்தில், சிவநேசர் என்பவரும் அவரது மனைவியார் ஞானகலாம் பையாரும் செய்த அருந்தவப்பயனால் அவதரித்தார். திரு வெண்காடர் என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இவர் சிவசருமர் என்பவருக்கு வேண்டிய பொன் அளித்து அவரிடத்திருந்த ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டார். இறைவன் அம்சமாகிய அக்குழந்தைக்கு மருதவாணர் என்ற பெயர் வழங்கப்பட்டது. ஒரு நாள் மருதவாணர் "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்று ஓர் ஓலையில் எழுதி ஒரு பெட்டியில் வைத்துவிட்டு மறைந் தனர். அதைக் கண்டு திருவெண்காடர் முற்றுந் துறந்து பல தலங்களைத் தரிசித்து, திருவொற்றியூரில் முத்தி யடைந்தனர். இவரது காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டு. இவரது துறவின் பெருமையை, "பாரினத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல், ஆருந் துறக்கை அரிதரிது" என்ற தாயுமானார் வாக்கினால் அறியலாம்.

பட்டினத்தார் இயற்றியருளிய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும் மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திரு வொற்றியூர் ஒருபாவொருபஃது ஆகிய இவ்வைந்து நூல் களும் சைவத் திருமுறைகளுள் பதினோராந் திருமுறையைச் சேர்ந்தவை. இவைகளைத் தவிர, பட்டினத்தார் பாடியன வாக, கோயிற்றிருவகவல், திருவேகம்பமாலை முதலிய நூல் கள் உள்ளன. ஆனால் அவை பிற்காலத்தார் பாடியன என்பர் ஆராய்ச்சியாளர். கோயில் என்பது சிதம்பரம். வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்ற இந்நான்கும் அந்தாதியாக நாற்பது செய்யுள் வருமாயின் நான்மணி மாலையாம். கோயிலுன்மணிமாலை நாற்பது செய்யுட்களைக்

கொண்டுள்ளது. அவற்றுள் 1, 2, 3, 16, 28, 33 என்ற எண்ணுள்ள பாக்கள் ஈண்டுப் பாடப்பகுதியாக வந்துள்ளன.

1. பூ மேல் அயன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். அளவை - (அக்குடையின்) பெருமை அளவையினை. ஏத்து - துதி. உகந்தான் - விரும்பினவன்.

2. குடை - வெண் கொற்றக் குடை. எரி - ஒளியுள்ள. பொன் - அழகிய. திகிரி - சக்கரம். இகல் - பகைவரை. தெறும் - வருத்துகின்ற. பார்த்திவர் - அரசர். தொடை - மாலை. அம்பலத்தான் - திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளி யிருக்கும் நடராசப் பெருமான்.

அரசனுய் இருத்தலினும் அம்பலத்தான் தொண்டர்க்கு ஏவல் செய்தல் களிப்புடைத்து எனக் கூறுகின்றார்.

3. களிவந்த - ஆனந்த மேலிட்ட. ஆனந்த உருவமாகிய சிவமூர்த்தியை உள்ளக் குகையில் ஊன்றி உற்று நோக்கு வார்க்குப் பரமானந்தம் விளைதலின் "களிவந்த" என்றார். மனத்தை எல்லாம் : ஒருமைப்பன்மை மயக்கம். வெளி - பரமாகாசமாகிய அப்பெருவெளி. வந்து - (அது தானே இச்சை கொண்டு) எழுந்தருளி. தொல் நடமும் - தொன்று தொட்டு (ஆன்மாக்கள்) பொருட்டுச் செய்கின்ற திருநடனத் தையும். உடையான் - எல்லாமுடைய சிவபெருமான். இடை மிடைந்த - நடுவிற்கலந்த. இச்சை உரையோம் - இச்சையான செய்யுள் பாடோம்.

4. பிறிதுபடு - மனதை வேறுபடுத்தும். கடும் பிணி தொகையும் - கொடுமை செய்கின்ற நோயின் கூட்டமும். இடும்பை ஈட்டமும் - துன்பக் கூட்டங்களும். மூதலிரண் டடிகளிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. வினை - தீவினை. தொல் மீகாமன் - பழகிய மாலுமி. உய்ப்ப - செலுத்த. ஒரு துறை - ஒப்பற்ற துறைமுகம். நீத்தம் - வெள்ளம். புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்கள். கோள்மீன் - வலியுள்ள சுறாமீன்கள். அலமந்து - சுழன்று. பிறப்பென்னும் பெருங்கடல் -

பிறவியாகிய கடல். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்" என்றார் திருவள்ளுவர். உறப் புகுந்து - மிகுதியாகச் சென்று. உவட்டின் - பெருக்கினால். பெயர்ப்பிடம் - நிலை பெயருமிடம். அயர்த்து - நொந்து. நெடுங்கல் - பெரிய மலையில். வீழ்த்து - மோதப்பட்டு. நிறை - மன அடக்கம். கூம்பு - பாய்மரம். உணர்வு - அறிவு. கீறி - கிழித்து. புணரும் - (தீமைகள்) நெருங்கிய. காயச சிறைக்கலம் - உடல் என்கிற காவலாகிய மரக்கலம். கலங்குபு - கலங்கி. அலங்கல் - மாலை. சடிலத்து - சடையின். பையரவு - படத்தையுடைய பாம்பு. எயில் - மதில். வம்பலர் - காலமல்லாக் காலத்து மலர்கின்ற. அம்பலவாண - திருச் சிற்றம்பலத்தை யிடமாகக் கொண்டவனே. நலத்தார் - நல்ல வடத்தை. சேர்த்தும் ஆறு - சேர்க்கும் வழியை. ஆறு என்பது ஆ எனத் தொகுத்து நின்றது. இச்செய்யுள் உருவகவணியின்பாற்படும். இச் செய்யுளோடு கீழ்க்காணும் திருவாசகம் ஒப்பு நோக்கத்தக்கது.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனிவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

5. பேசு - விரைந்து அவனைத் துதிசெய். வாழி - வாழ் வாயாக. புணர்ந்தன - உன்னைச் சேர்ந்த பொருள்கள். ஒன்று - ஓரிடத்திற் பொருந்திய. ஒன்று - ஒரு பொருள். ஒரு வழி - அந்த இடத்திற்றானே. தேசொடு திகழ்ந்தோர் - புகழொடு விளங்கினர். கடுந்திறல் - மிக்க வலிமை. பயின் றோர் - பயிற்சி உடையோர். நலத்தின் - நற்குணங்களால். மாயப்பேய்த்தேர் - மாயமாகிய கானல் நீர். இழிவு - இழி குணங்கள். இழுக்கத்தின் - குற்றம் உண்டாக. விளக்கத்து - விளக்கினிடத்து. விளிந்த - உயிர் நீங்கிய. புள் - அசுணமா முதலிய பறவைகள். உறுவது - இனி வருங்கேட்டினை.

செறுவுழி - நரகமாகிய குழியில். கீடத்து-சிலந்தியின். நூந்து உழிபோல - தள்ளும் சிறு தொளை போல. குடர் கெழு - குடல்கள் பொருந்திய சிறையறை - சிறைச்சாலையாகிய உள்ளிடத்தினையுடைய பெண்கள்; பண்புத்தொகை அன் மொழி. உறங்குபு - உறங்கி. கறவை - பசு. இறைவன் என்கிலை - தலைவன் என்று துதிக்கின்றாயில்லை.

6. மணியாசனத்து - மணிகளழுத்திய சிங்காதனத்தின் மேல். ஆனத - கெடாத. செல்வத்து - செல்வத்தினைத் தரும். மால் நாகம் - பெரிய நாகமாகிய ஆதிசேடன். பந்திப் பார் - அரைக்குக் கச்சாகக் கட்டுபவராகிய நடராசப் பெருமான். வந்திப்பார் - வணங்குவோர்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112027